1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 115 மற்றும் 116ஆம் பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர் சங்கங்களும் ஏனைய மாணவர் கூட்டுக்களும் பேரவையின் ஒருப்பாட்டுடன் அங்கீகரிக்கப்படவேண்டும். மீளாய்வின் கீழுள்ள 2020ஆம் ஆண்டில் அத்தகைய முப்பத்தொன்பது (39) மாணவர் சங்கங்களும் ஏனைய கூட்டுக்களும் பல்கலைக்கழகத்தில் செயற்பட்டுக்கொண்டிருந்தன. அவையாவன:

AIESEC மாணவர் சங்கம்
கலைச் சங்கம் - மருத்துவம்
வனசீவராசி மற்றும் ஒளிப்படச் சங்கத்தின் கூட்டு
வானியல் சங்கம்
சூழல் விஞ்ஞானம், விலங்கியல் ஆர்வலர்களின் தளம் (BEEZ)
தாவரவியற் சங்கம்
பௌத்த சகோதரத்துவச் சங்கம்
பௌத்த சங்கம் - மருத்துவம்
கத்தோலிக்க மாணவர் சங்கம்
இரசாயனவியற் சங்கம்
கிறிஸ்தவ தோழமை மாணவர் சங்கம்
கணினி விஞ்ஞானச் சங்கம் - UCSC
அனர்த்த நிவாரணச் சங்க மையக்குழு
குடிச்சரிதவியல் மாணவர் சங்கம்
பொருளியல் மாணவர் சங்கம்
எக்சத் பிக்கு சங்கமய
எப்சிலோன் டெல்ரா சங்கம்
இயுபொனி
கவல் கிளப் - கொ.ப.
கவஷிக்கயோ சங்கம்
புவியியல் மாணவர் சங்கம்
கோல்டன் இஸட் கிளப் - மருத்துவம்
இந்துச் சங்கம் - மருத்துவம்
இந்துச் சங்கம் - கொ.ப.
வரலாற்றுச் சங்கம்
லியோ கிளப் - கலை
மருத்துவ மாணவர் நலன்புரிச் சங்கம்
வழக்குவாத நீதிமன்ற, விவாதச் சங்கம்
முஸ்லிம் மஜ்லிஸ்
பௌதிகவியற் சங்கம்
இயன்மருத்துவ மாணவர் சங்கம்
ரோட்டறக்ற் கிளப் - கலை
ரோட்டறக்ற் கிளப் - விஞ்ஞானம்
விஞ்ஞானச் சங்கம்
சிங்கல சங்கமய
சமூகவியல் மாணவர் சங்கம்
ஸ்ரற் சேர்க்கிள்
கைத்தொழில், நிதிப் பகுப்பாய்வு மாணவர் சங்கம் (SAIFA)
தமிழ்ச் சங்கம்

2.11 வலையமைப்புத் தொழிற்பாட்டு நிலையம் (NOC)

வலையமைப்புத் தொழிற்பாட்டு நிலையம் முழுப் பல்கலைக்கழகத்துக்குமான டிஜிட்டல் உட்கட்டமைப்பைக் கையாளுகின்றது. கொ.ப.இன் அனைத்து வலைத்தளங்களும், கற்றல் முகாமைத்துவ முறைமைகளும், கொடுப்பனவு வாயில்களும், ஏனைய இணையவழிச் சேவைகளும் NOCஇன் ஆதரவில் எமது தொழில்நுட்பப் பணியாளரின் முகாமையின்கீழ் செயற்படுகின்றன. நாம் டிஜிட்டல் சேவைகளில் தடங்கல்களை இழிவளவாக்குவதற்கும் வினைத்திறனை அதிகரிப்பதற்குப் புதிய செயலிகளைத் தாபிப்பதற்கும் தேவையான ICT தொழில்நுட்ப ஆதரவை வழங்குகின்றோம்.

- பல்கலைக்கழகத்தின் பிரதான வலைத்தளத்திலும் பிற சமூக ஊடக வலைத்தளங்களிலும் (முகநூல், டுவிட்டர், லிங்கடின்) இடப்படும் அறிவித்தல்கள், பதிவுகள், செய்திகள், ஆராய்ச்சி மற்றும் அவசியமான தகவல்களை அடிக்கடி இற்றைப்படுத்துகின்றோம். கொவிட்-19 தொடர்பான பதிவுகளுக்கும் செய்திகளுக்கும் ஒரு வலைத்தளத் தகவல் மையத்தைத் தொடக்கிவைத்துப் பேணுகின்றோம்.

- மதிப்பீடுகள்/வினாக்கொத்துக்கள் (கூகிள் படிவத்தினூடாக) மூலம் பதில்களைச் சேரிக்கின்றோம். இணையவழிச் செயலிகள் பற்றி அறிவூட்டுவதற்குச் செயலமர்வுகளை ஒழுங்குசெய்கின்றோம்.

- இணையவழியாக (ஸூம் / மைக்றோசொப்ற் ரீம்ஸ் / கூகிள் மீற் ஊடாக) கூட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு வசதியளிக்கின்றோம்.

- இணையவழியாகக் கற்பித்தலையும் கற்றலையும் நடத்துவதற்கு வன்பொருள் வளங்களின் ஒதுக்கீட்டை விரிவுபடுத்துகின்றோம்.

- பணியாளரும் மாணவரும் இணையவழிக் கல்விநெறி விடயதானங்கள், நூலகக் குறிப்பேடுகள் ஆகியவற்றை அணுகுவதற்கும் அவர்களின் கூட்டங்களை ஒழுங்குசெய்வதற்கும் "சிங்கிள் சைன் ஒன்' (SSO) புகுபதிகைகளை வழங்குகின்றோம்.

- முறைமைகளின் இருப்புநிலை, காப்புகள் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணிக்கின்றோம். மேலும் தடங்கல்களை இழிவளவாக்குவதற்கு ஒழுங்குதவறாமல் சேமிப்பகத்தைச் செவ்வைப்படுத்துகின்றோம்.

2.12 "சைபர் வளாகம்" – திறந்த, தொலைக்கற்றலுக்கான நிலையம்

திறந்த மற்றும் தொலைக்கற்றல் நிலையமான "சைபர் வளாகம்"தான் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள்/துறைகள் ஊடாக வழங்கப்படும் அதன் வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் (EDPs) நீடிப்புக் கல்விநெறிகளும் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கான அதன் நிருவாக அமைப்பாகும். அது உயர்தரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நீடிப்பு, தொலை மற்றும் கலப்புக் கல்விநெறிகள் ஊடாக விரிவாக்கப்பட்ட உயர் கல்விக்குத் துணைபுரிந்து ஊக்குவிப்பவராக விளங்குவதன்மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிக்கின்ற பணி ஒப்படைக்கப்பட்டதும் சுயமாக நிதி திரட்டுகின்றதுமான ஒரு நிலையமாக 2011 ஒக்ரோபரில் கொழும்புப் பல்கலைக்கழக இணைப்பு நிலையத்தின் மெய்நிகர் வளாகமாக முதலில் தாபிக்கப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக - இணைப்பு நிலையத்தின் மெய்நிகர் வளாகம், 2016 யூனில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மெய்நிகர் நிலையமாக மறுபெயரிடப்பட்டது. மீண்டும் 2019 சனவரியில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கற்றல் நிலையமானது கலப்புக் கற்றலூடாக உயர் கல்விக்குக் கூடிய உண்ணாட்டு, வெளிநாட்டு மாணவர்களைக் கவரும் நோக்குடன் "சைபர் வளாகம்" என மீளப் பெயரிடப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் நோக்குக்கு இணங்கச் சைபர் வளாகம், திறந்த மற்றும் தொலைக்கற்றல் சூழல்களினூடாக உயர் கல்விக்கு அதிகரிக்கப்பட்ட வாய்ப்புக்களை வழங்குவதற்கான சுய தங்குதிறனுள்ள ஒரு நிலையமாகத் திகழ்வதற்கு முயற்சிக்கின்றது.

இந்நிலையத்தின் **பணியானது** "உயர்தரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் மெய்நிகர் மற்றும் கலப்புக் கற்றல் சூழல்களினூடாக விரிவாக்கப்பட்ட உயர் கல்விக்குத் துணைபுரிந்து ஊக்குவிப்பவராக விளங்குவதன்மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களித்தல்."

அ. வளங்களினதும் மாணவரினதும் விவரம்

நிலையம்	கல்விநெறி	மொத்த மாணவர்	மொத்தக் கல்விசார் பணியாளர்	மொத்தக் கல்விசாராப் பணியாளர்
		2020	2020	2020
"சைபர் வளாகம்"	இலத்திரனியல், தானியக்கத் தொழில்நுட்பங்களில் பி.எஸ்சி. (வெளிவாரி)	139	*	5
	நிதிப் பொறியியலில் பி.எஸ்சி. (வெளிவாரி)	114	*	
மொத்தம்		**253**		**5**

* எல்லாக் கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவுப் பணியாளரும் சில கல்விசாராப் பணியாளரும் வருகைதரும் பணியாளராவர். நிலையம் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஒத்திசைவித்தலை மட்டுமே செய்கின்றது.

ஆ. உண்ணாட்டு மாணவரின் விவரம்

பட்ட மாணவர் பட்டங்கள்

நிலையம்	கல்விநெறி	மொழிமூலம் ஆங்கிலம் (ஆ)	உள்ளெடுப்பு	1ஆம் ஆண்டு மாணவர்	2ஆம் ஆண்டு மாணவர்	3ஆம் ஆண்டு மாணவர்	4ஆம் ஆண்டு மாணவர்	பட்டம் பெற்றோர் எண்.
		2020	2020	2020	2020	2020	2020	2020
"சைபர் வளாகம்"	இலத்திரனியல், தானியக்கத் தொழில்நுட்பங்களில் பி.எஸ்சி. (வெளிவாரி)	ஆ	63	63	42	32	-	28
	நிதிப் பொறியியலில் பி.எஸ்சி. (வெளிவாரி)	ஆ	64	64	36	44	-	34
மொத்தம்			**127**	**127**	**78**	**76**	**-**	**62**

இ. கல்விசாராப் பணியாளரின் விவரம்

அதி முதுநிலைப் பணியாளர்	இளநிலைப் பணியாளர்	சிற்றூழியர்	ஒப்பந்தப் பணியாளர்
03	01	01	01

ஈ. மீண்டுவருஞ் செலவினத்தின் விவரம்: 2020 திசெம்பரில் இருந்தவாறு

விடயம்	ரூ.
அ. ஆளணி ஊதியங்கள்	560,131.30
ஆ. பிரயாணம்	12,450.00
இ. வழங்கல்கள்	241,471.66
ஈ. பராமரிப்பு	226,004.32
மொத்தம்	**1,040,057.28**

உ. மூலதனச் செலவினத்தின் விவரம்: 2020 திசெம்பரில் இருந்தவாறு

விடயம்	ரூ.
அ. தளபாடம், அலுவலக சாதனம் கையேற்றல்	222,541.26
மொத்தம்	**222,541.26**

ஊ. நிதி முன்னேற்றத்தின் விவரம் (செலவினம்): 2020 திசெம்பரில் இருந்தவாறு

விடயம்	2020இல் ஏற்பாடு ரூ.	ரூ.
அ. கருத்திட்டம் தவிர மீண்டுவரும்	1,040,057.28	1,040,057.28
மொத்தம்	**1,040,057.28**	**1,040,057.28**

எ. நிதி முன்னேற்றத்தின் விவரம் (உருவாக்கிய வருமானம்): 2020 திசெம்பரில் இருந்தவாறு

வருவாய் மூலம்	2020இல் ஏற்பாடு ரூ.	2020இல் வசூல் ரூ.
அ. கருத்திட்டம் தவிர மீண்டுவரும்	22,080,000.00	22,080,000.00
மொத்தம்	**22,080,000.00**	**22,080,000.00**

ஏ. நிதிச் செயல்நிறைவேற்றப் பகுப்பாய்வு - 2020

விடயம்	சூத்திரம்	ஒரு மாணவருக்குச் செலவு ரூ.
அ. ஒரு மாணவருக்கு மீண்டுவருஞ் செலவினம் (RE)	RE/மாணவர். எண்.	4,110.90
ஆ. ஒரு மாணவருக்கு மூலதனச் செலவினம் (CE)	CE/மாணவர் எண்.	879.61
மொத்தம்		**4,990.51**

2.13 ஸ்ரீ பாளி வளாகம்

நோக்கு

கல்வி, ஆராய்ச்சி, படைப்பாற்றல், தொழில்முயற்சியாண்மை என்பவற்றினூடாக நிலைமாற்றும் போக்குடைய அறிவை உருவாக்குவதில் உலகெங்கும் அறியப்பட்ட ஒரு முதன்மை நிலையம்.

பணி

1. மாணவர்களுக்கு நிலைமாற்றும் போக்குடைய கல்விச் செயல்முறையொன்றையும் கற்றல் அனுபவத்தையும் உருவாக்குதல்.

2. சமூகப்பொறுப்பின்பால் ஈடுபாடு, திறனாய்வுச் சிந்தனை, ஆக்கத்திறன், கூட்டுழைப்பு மனப்பான்மை, வாழ்க்கைத் தொழில் வல்லமை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து வாழ்தலென்ற எண்ணக்கருவின் அடிப்படையில் துடிப்பும் ஈடுபாடும் ஆரோக்கியமும் மிக்க வளாகச் சமூகமொன்றை வளர்த்தல்.

3. கல்வி ஊடகங்கள், கலைகள் ஊடாகச் சமுதாயத்தின் கூட்டு விழிப்புணர்வில் நிலைமாற்றப் பாங்குடைய தாக்கத்தை ஏற்படுத்துதல்.

மனித வளங்கள்

வளாகம்	துறை	மொத்த மாணவர்	மொத்தக் கல்விசார் பணியாளர்	மொத்தக் கல்விசாராப் பணியாளர்
		2020	2020	2020
ஸ்ரீ பாளி வளாகம்	வெகுசன ஊடகத் துறை	502	14	06
	அரங்காட்டற் கலைகள் துறை	311	11	06
	மொழிகள் துறை		03	01
	கணினிக் கற்கைகள் துறை		01	01
	ஏனையவை	-	-	73
மொத்தம்		**813**	**29**	**87**

அ. உண்ணாட்டு மாணவரின் விவரம்

பட்ட மாணவர் பட்டங்கள்

வளாகம்	கல்விநெறி	மொழிமூலம் சிங்களம் (சி)	உள்ளெடுப்பு	1ஆம் ஆண்டு	2ஆம் ஆண்டு	3ஆம் ஆண்டு	4ஆம் ஆண்டு	பட்டம் பெற்றோர் எண்.
			2020	2020	2020	2020	2020	2020
ஸ்ரீ பாளி வளாகம்	வெகுசன ஊடகத்தில் சிறப்புக் கலைமாணிப் பட்டம்	சி	80	81	77	80	80	76
	அரங்காட்டற் கலைகளில் சிறப்புக் கலைமாணிப் பட்டம்	சி	80	80	74	81	76	78
	மொத்தம்		**160**	**161**	**151**	**161**	**156**	**154**

ஆ) பட்டப்பின்படிப்புப் பட்டங்கள்

வளாகம்	கல்விநெறி	மொழிமூலம் சிங்களம் (சி)	உள்ளெடுப்பு (2020இல் பதிவுசெய்த புதிய மாணவர் எண்.)	நடப்பு மாணவர் எண். (நடப்பிலுள்ள மொத்த எண்.) 2020
ஸ்ரீ பாளி வளாகம்	வெகுசன ஊடகக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா	சி	-	101
	வெகுசன ஊடகத்தில் எம்.ஏ.	சி	-	34
	ஊடக ஆராய்ச்சியில் எம்.ஏ.	சி	-	49
மொத்தம்			**-**	**184**

இ. கல்விசார் பணியாளரின் விவரம்

விடயம்	முதுநிலைப் பேராசிரியர்	பேராசிரியர்	முதுநிலை விரிவுரையாளர்	விரிவுரையாளர்	உதவி விரிவுரையாளர்	போதனாசிரியர்
பொதுசன ஊடகம்	-	02	04	08	02	-
அரங்காட்டற் கலைகள்	-	-	05	06	02	01
கணினிக் கற்கைகள்	-	-	-	01	-	01
மொழிகள்	-	-	02	01	-	-
மொத்தம்	**-**	**02**	**11**	**16**	**04**	**02**

ஈ. கல்விசாராப் பணியாளரின் விவரம்

வளாகம்	அதி முதுநிலைப் பணியாளர்	முதுநிலைப் பணியாளர்	இளநிலைப் பணியாளர்	சிற்றூழியர்	ஒப்பந்தப் பணியாளர்
ஸ்ரீ பாளி	06	13	31	36	01

உ. ஆராய்ச்சி, புத்தாக்கம், வெளியீடுகளின் விவரம்

விடயம்	வெளியிடப்பட்டவை		சமர்ப்பிக்கப்பட்டவை	
	2019	**2020**	**2019**	**2020**
அ. ஆராய்ச்சிகளின் எண்.	29	13	14	01
ஆ. புத்தாக்கங்களின் எண்.	-	---	-	
இ. குறிப்பேட்டுக் கட்டுரைகளின் எண்.	08	21	-	
ஈ. நூல்களின் எண்.	-	04	-	
உ. கட்டுரைகளின் எண்.	49	46	03	03
ஊ. ஏனையவை	03	30	-	
மொத்தம்	**89**	**114**	**17**	**04**

ஊ. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகளின் விவரம்

விடயம்	பங்குபற்றியவை		பூர்த்திசெய்தவை		சமர்ப்பித்தவை	
	2019	**2020**	**2019**	**2020**	**2019**	**2020**
அ. பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்.	02	03	-	01	-	01
ஆ. பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்ட எண்.	-	01	-	-	-	-
இ. பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்.	-	-	-	01	08	-
ஈ. டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களின் எண்.	-	-	-	-	-	-
ஈ. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்.	143	01	-	05	-	04
உ. ஏனையவை	09	01	01	-	02	03
மொத்தம்	**154**	**06**	**01**	**07**	**10**	**08**

எ. கிடைத்த விருதுகளின் விவரம்

விடயம்	விருதுகளின் எண்.	
	2019	**2020**
ஆ. தேசிய விருதுகள்		
வெகுசன ஊடகத் துறை	-	02
கணினி கற்கைத் துறை	-	01
அரங்காட்டற் கலைகள் துறை	01	-
ஆ. ஏனையவை	-	-
அரங்காட்டற் கலைகள் துறை (விருதுக்கான முன்மொழிவு)	05	05
மொத்தம்	**06**	**08**

ஏ. பீடத்திலுள்ள சங்கங்கள்

சங்கத்தின் பெயர்	இவ்வாண்டில் சங்கத்தால் நடத்தப்பட்ட கருத்திட்டங்கள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களின் பெயர்
வளாக வானொலி	கொவிட்-19 உலகத் தொற்றின்போது பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டியில் மிகச்சிறந்த, பிரபலமான தொடர்பாளர்

ஐ. கருத்திட்டங்களின் விவரம் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியுதவி)

பெயரும் விவரமும்	கடன்/ மானியம்	நிதியுதவும் ஏஜன்சி #	TCE ரூ. (மில்.)
நிருவாகக் கட்டடத்தின் நிருமாணம் (SC/E/08/CW/09)		இலங்கை அரசு	150
நூலகக் கட்டடத்தின் நிருமாணம் (SC/E/08/CW/10)		இலங்கை அரசு	60.44
பல் கமரா ஸ்ரூடியோ கருத்திட்டத்துக்கு உபகரணங்கள் கொள்வனவு – யப்பானிய மானியம் மற்றும் UoC நிதிகள் (SPC/NCB/2018/01)	மானியம்	யப்பான்/இலங்கை அரசு	30
கருங்காரை வார்த்த செல்வழியைப் பயன்படுத்துவதன் மூலமும் சுமைபொறுக்கும் பகுதியைத் திருத்துவதன் மூலமும் உள்ளக வீதிகளைத் திருத்துதல் (MD/MR/CWP/41/2019)			12.50
இலத்திரனியல் ஊடக அலகின் விரிவாக்கம் (SPC/CWP/2019/01)			4.20
மின்னல், மின்னெழுச்சிப் பாதுகாப்பு முறைமை (SPC/CWP/2019/03)			4.00
அரங்காட்டற் கலைத்துறைக்கு இரு திறந்தவெளி நடன மண்டப நிருமாணம்			5.00
நடன மண்டபம் இல. 13Bஇன் திருத்தம்/புத்தாக்கம்			3.50
இலங்கையில் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு ஆக்கமுறையான சித்தாந்தத்தை உருவாக்குவதற்கு வெகுசன ஊடகத்துக்கு ஒரு திட்டம் பற்றிய ஆராய்ச்சி மானியம்	வழங்கப்பட்டது	கொழும்புப் பல்கலைக்கழகம்	500,000.00
கேட்போர் உணர்வுக்கத்துக்கான இலங்கை ஊடக மூலபாடத்தின் தாக்கம் பற்றிய ஆய்வு: உளவியல் ஊடகக் கண்ணோட்டம் பற்றிய ஓர் ஆய்வு	வழங்கப்பட்டது	கொழும்புப் பல்கலைக்கழகம்	500,000.00
வெகுசன ஊடக ஆராய்ச்சி மானியம் பற்றிய ஆய்வு	-	கொழும்புப் பல்கலைக்கழகம்	500,000.00

(GOSL/ ADB/ IDA. WB/ …..)
RFA: செலவு ஈடுசெய்யப்படும் வெளிநாட்டு உதவி
DF: உண்ணாட்டு நிதி

ஒ. 2019இல் கிடைத்த உட்கட்டமைப்பு வசதிகளின் விவரம்

உட்கட்டமைப்பு விவரம்	செலவினம் ரூ.	பௌதிக முன்னேற்றம்
செவிப்புல-கட்புலக் கருத்திட்டத்துக்கு ஒலிக்குறைப்பு மற்றும் தளமிடும் தீர்வு (SPC/CWP/2019/02)	1.10 மில்.	பூர்த்தியானது

நூலகம் - ஸ்ரீ பாளி வளாகம்

அறிமுகம்

2020 திசெம்பர் 31இன் முடிவில் ஸ்ரீ பாளி வளாகத்திலுள்ள நூலகம் 27,000க்கும் கூடிய நூல்கள், 946 DVDகள், CDகள் ஆகியவற்றின் திரட்டொன்றைக் கொண்டிருந்தது.

நூல்களுக்கும் பருவ இதழ்களுக்குமான நூலக ஒதுக்கீடுகள் - 2019

2020ஆம் ஆண்டில் ஸ்ரீ பாளி வளாகத்தின் நூலகத்துக்கு நூல்களும் பருவ இதழ்களும் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

நன்கொடையாக கிடைக்கப்பெற்ற புத்தகங்களின் எண்ணிக்கை – 11

கருமபீடச் சேவைகள் - 2020

நூலக உறுப்புரிமை:

மாணவர்	-	627
கல்விசார் பணியாளர்	-	32
நிருவாகப் பணியாளர்	-	04
கல்விசாராப் பணியாளர்	-	65
வழங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை	-	4957
வழங்கப்பட்ட DVDகளின் எண்ணிக்கை	-	45

தன்னியக்கக் கருத்திட்டம்

நூலகம் உறுப்பினர்களின் பயன்பாட்டுக்காகத் தன்னியக்க முறைமையைத் தொடக்கிவைத்தது.

தனிப்பட்ட கல்விசார் செயலாற்றுகை

கொழும்புப் பல்கலைக்கழகம், ஸ்ரீ பாளி வளாகம், SAL கலா. வத்சலா அத்துகோறள 2020ஆம் ஆண்டில் 03 நூல்களை வெளியிட்டுள்ளார்.

1. நூலக முகாமைத்துவம்: ஒரு புதிய அணுகல் (கொடகே வெளியீடு)
2. நூலகங்களும் சமூக ஊடகங்களும் (கொடகே வெளியீடு)
3. சமூகவியல் (கொடகே வெளியீடு)

இவற்றுக்கு மேலதிகமாக வட அமெரிக்காவில் "வட அமெரிக்கக் கல்விசார் ஆராய்ச்சி" குறிப்பேட்டில், "ஒரு நிலைமாற்றச் சூழலில் கல்லூரி மாணவர் மத்தியில் சமூக ஊடக நடத்தை"என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வுக் கட்டுரை. 3(ii), 325-350 நவம்பர் 20

2.14 சமகால இந்தியக் கற்கைகள் மையம் (CCIS)

சமகால இந்தியக் கற்கைகளுக்கான மையமானது (CCIS) இந்தியாவிலுள்ள சமகாலக் கற்கைகள் தொடர்பான அறிவை இலங்கையில் விருத்தி செய்துகொள்ளுதல், இரண்டு நாடுகளுக்குமிடையில் ஓர் நிறுவனமயப் படுத்தப்பட்ட வலையமைப்பினூடாக இந்திய - இலங்கை உறவினை வலுப்படுத்திக் கொள்ளுதல் என்பவற்றுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை ஊக்குவிக்கும் ஒரு பல்துறை ஆராய்ச்சி மையமாகும். இம்மையமானது இலங்கையிலுள்ள இந்திய உயர் ஆணையத்திற்கும் கொழும்புப் பலகலைக்கழகத்திற்கும் இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின்கீழ் 2012இல் நிறுவப்பட்டது. மேலும் இது கல்விசார், நிர்வாக விடயங்களுக்காகப் பட்டக் கற்கைகள் பீடத்தின்கீழ் இயங்குவதோடு தனது ஆலோசனைக் குழுச் சபை, முகாமைத்துவச் சபை என்பவற்றினூடாக ஏனைய பீடங்களோடும் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவும் இலங்கையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சமூகம், மதம், மொழி, பண்பாடு, பொருளாதாரம், இராஜதந்திரம் முதலான விடயங்களில் உறவுகளைப் பேணிவருகின்றபோதும் இந்தியாவில் நிகழும் சமகால அபிவிருத்திகள், மாற்றங்கள் தொடர்பான கற்கைகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கையின் உயர் கல்வி அரியணையில் முன்னெடுக்கப்படும் அவ்வாறான ஆய்வுகளும் கற்கைகளும் நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு வழிகாட்டுவதிலும் இருநாடுகளுக்குமிடையில் தற்போது நிலவும் நட்புறவைப் பலப்படுத்துவதிலும் பெரும் பங்கு வகிக்கும் என்பதை உணர்ந்து, இலங்கையில் சமகால இந்தியா பற்றிய புரிதலை ஆழமாக்குவதற்குச் சமகால இந்தியக் கற்கைகளுக்கான மையமானது பணியாற்றுகிறது.

அ. ஆராய்ச்சி, புத்தாக்கம், வெளியீடுகளின் விவரம்

விடயம்	வெளியிடப்பட்டவை
	2020
1. ஆராய்ச்சிகளின் எண்.	02
மொத்தம்	**02**

ஆ. மீண்டுவருஞ் செலவின விவரம்

விடயம்	2020இல் ரூ.
அ. ஆளணி ஊதியங்கள்	1,427,550.00
ஆ. பிரயாணம்	1,014.00
இ. வழங்கல்கள்	205,961.98
ஈ. ஏனையவை	271,929.22
மொத்தம்	**1,906,455.1**

இ. மூலதனச் செலவின விவரம்

விடயம்	2020இல் ரூ.
அ. இயந்திரங்கள் கையேற்றல்	38,900.00
மொத்தம்	**38,900.00**

ஈ. நிதி முன்னேற்ற விவரம் (செலவினம்)

விடயம்	2020இல் ஏற்பாடு ரூ.	2020இல் செலவு ரூ.
கருத்திட்டம் - வெளிநாட்டு நிதி	4,192,297.50	1,945,355.20
மொத்தம்	**4,192,297.50**	**1,945,355.20**

2.15 மனித உரிமைக் கற்கை நிலையம் (CSHR)

நோக்கு

உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுடன் அனைத்து மக்களது கௌரவத்தையும் உரிமைகளையும் மதிக்கும் ஒரு நாட்டை உருவாக்குதல்.

பணி

பல்துறைசார் அணுகுமுறையினூடாக மனித உரிமைக் கல்விக்கும் ஆராய்ச்சிக்குமான முதன்மை நிலையமாகத் திகழ்தல்.

மனித உரிமைக் கற்கை நிலையம் (CSHR) இலங்கையில் நெருக்கடியான காலகட்டத்தில் இடம்பெற்ற அளப்பரிய மனித உரிமை மீறல்களுக்குப் பதிற்செயலாற்றுவதற்காக 1991இல் தாபிக்கப்பட்டது. அது பொதுமக்களுக்கு அவர்களின் உரிமைகள் பற்றியும் உரிமை மீறல்களுக்கான பரிகாரங்கள் பற்றியும் தெரியப்படுத்தும் குறிக்கோளுடன் இலாப நோக்கற்ற ஒரு நிறுவனமாகக் கொழும்புப் பல்கலைக்கழகச் சட்ட பீடத்தினுள் தாபிக்கப்பட்டது. CSHR மனித உரிமைக் கல்வி, ஆராய்ச்சி, செயலாற்றலைக் கட்டியெழுப்பல் என்ற ஆணையைக் கொண்டதாக 28 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமைக் கல்வியில் முன்னோடியாக விளங்கியுள்ளது. சமாதானம், பல்வகைமை மீதான மதிப்பு, பொருளாதார மற்றும் சமூக நீதி என்பவை சமுதாயம் பூராவும் பேணப்படுகின்ற மனித உரிமைக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் மனித உரிமைக் கல்வி இன்றியமையாத ஒரு கூறாகவுள்ளதென்ற அதன் பிரதான இலக்கை CSHR தொடர்ந்து நம்புகின்றது. CSHRஇன் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் உள்ளடக்கம், பயன்படுத்தப்படும் முறைகள் என்பவற்றினூடாக இவ்விலக்குத் தொடரப்படுகின்றது.

இந்நோக்கு நிகழ்ச்சித்திட்ட உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தை மட்டுமன்றி மனித உரிமைக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்ற மனப்பான்மைகளையும் நடத்தைப் பாங்குகளையும் கட்டியெழுப்புவதற்கு அக்கல்வி நாடுகின்ற வழிமுறைகளின் முக்கியத்துவத்தையும் காட்டுகின்றது. CSHR அதன் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின்கீழ் உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், சான்றிதழ் கல்விநெறிகள், டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள், உயர் டிப்ளோமா, பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் முதுமாணி ஆகியவற்றை வழங்குகின்றது. ஆராய்ச்சி என்ற வகையில் CSHR உரிமைகள் தொடர்பில் நடைமுறையில் பிரயோகிக்கக்கூடிய ஆராய்ச்சிகளை நடத்துவதுடன், பிற அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்காகவும் ஆராய்ச்சியை நடத்துகின்றது.

CSHR அரசாங்க மற்றும் அரச சார்பற்ற துறைகளிலுள்ளோர் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் அவர்களின் பங்கீடுபாட்டாளர்களின் உரிமைகள் பற்றி அறிந்திருக்கவும் அவர்களின் செயலாற்றலை வலுப்படுத்துவதற்கும் பணியாற்றுகின்றது. கடந்த ஆண்டுகளில் CSHR இடைநிலைப் பாடசாலை மாணவர்கள், கிராம மற்றும் பெருந்தோட்டச் சமூகங்கள், பல்கலைக்கழகச் சமூகம், ஆயுதப் படைகள், காவல் துறை, சிறைச்சாலை அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், சிறைக் கைதிகள் மற்றும் பொதுமக்கள் போன்ற அனேக குழுக்களை எட்டியுள்ளது. CSHR ஒரு பரந்த வீச்சிலான மனித உரிமை வளங்களைக் கொண்ட அதன் வள நிலையத்தினூடாக, மனித உரிமைகள் அறிவையும் அறிவுச் சேவைகளையும் பரப்புகின்ற செயலாற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் துணைபுரிந்து ஊக்குவிக்கின்றது. இதன் பயனாளர்களில் மாணவர்கள், கல்விமான்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அடங்குவர். வள நிலையத்துக்கான உறுப்புரிமை CSHRஇல் பதிவுசெய்த எல்லா மாணவர்களுக்கும் இலவசமானது. CSHR அதன் பணியாளர்கள் CSHRஇன் பங்காளிகளுக்குப் பயனுறுதியுடனும் வினைத்திறனுடனும் நிகழ்ச்சித்திட்டங்களைப் பரப்பும்பொருட்டு, அவர்களின் அறிவையும் திறன்களையும் ஆற்றல்களையும் முன்னேற்றுவதற்கு அவர்களின் செயலாற்றலைக் கட்டியெழுப்பும் வகையில் நிறுவனரீதியான அபிவிருத்தியிலும் கவனஞ்செலுத்துகின்றது. இவ்வாண்டின் பஞ்சாங்கத்தில் முனையம்சமான ஒரு நிகழ்ச்சிதான் உரிமை வழக்குச் சட்டத் தரவுத்தளம் தொடக்கிவைக்கப்பட்டமை. இது நீதிக்கான சர்வதேசப் பாலங்களின் கூட்டுழைப்புடன் நடத்தப்படும் "இலங்கையில் உயர் நிலைமாற்ற நீதியும் சட்ட ஆட்சியும்" என்ற கருத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்தரவுத்தளம் சட்ட உரிமைகளுக்கான மிக முக்கியமானதும் பெரிதும் தேவைப்பட்டதுமான சட்ட வளமாகும். அது வழக்கறிஞர்கள் தமது வாடிக்கையாளர்களுக்கு உச்ச அளவுப் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கும் முதன்மையான சட்டமூலத்தை அணுகுவதற்கும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இடமளிக்கின்றது. CSHRஇன் இலக்கு உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுடன் அனைத்து மக்களது கௌரவத்தையும் உரிமைகளையும் மதிக்கும் ஒரு நாட்டை உருவாக்குதல்.

அ. மாணவர்களின் விவரம்

கல்விநெறி	மொத்த மாணவர் 2020
சிறுவர் பாதுகாப்பு, உரிமைகளில் பட்டப்பின் டிப்ளோமா	84
மனித உரிமைகள் அடிப்படையிலான பொலிசுக் கடமையில் டிப்ளோமா	43
மனித உரிமைகள் மற்றும் சனநாயகத்தில் தொலைக்கற்றல் டிப்ளோமா	66
ஈ-டிப்ளோமா தொகுதி 1	29
ஈ-டிப்ளோமா தொகுதி 2	39
மொத்தம்	**261**

ஆ. கல்விசார் பணியாளரின் விவரம்

நிலையத்தின் எல்லா விரிவுரையாளர்களும் வருகைதரும் விரிவுரையாளர்களாவர்.

இ. வெளிநாட்டு மாணவர்களின் விவரம்

கல்விநெறி	மொழிமூலம் ஆங்கிலம் (ஆ)	உள்ளெடுப்பு	1ஆம் ஆண்டு	2ஆம் ஆண்டு	3ஆம் ஆண்டு	4ஆம் ஆண்டு
		2020	2020	2020	2020	2020
மனித உரிமைகள், சனநாயகப்படுத்தலில் முதுமாணி	ஆ	05				

2.16 சுகாதார நிலையம்

பல்கலைக்கழகத்தில் இரு மருத்துவ நிலையங்கள் உள்ளன. இவற்றில் பெரியது றீட் அவெனியூவிலும் மற்றது மருத்துவ பீடத்திலும் உள்ளது. அவை சிகிச்சைக்காக மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.45 மணிவரை திறந்துள்ளன.

பற்சிகிச்சைச் சேவை றீட் அவெனியூ மருத்துவ நிலையத்தில் கிடைக்கின்றது. இரு 'பீஎச்ஜ'களின் மேற்பார்வையின்கீழ் சூழற் சுகாதாரம் பேணப்படுகின்றது.

கொவிட்-19 உலகத் தொற்றைக் கையாளும்பொருட்டு 2020ஆம் ஆண்டில் ஒரு ICU கட்டிலுடன் புத்துயிரளிப்பதற்கான ஏனைய எல்லா வசதிகளும்கொண்ட அவசர சிகிச்சை நிலையமொன்று தாபிக்கப்பட்டது.

பட்ட மாணவர்களுக்கு டேர்டன்ஸ் வைத்தியசாலை ஆய்வுகூடத்தின் கூட்டுழைப்புடன் இலவச ஆய்வுகூடப் பரிசோதனை தாபிக்கப்பட்டது.

விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு மருத்துவத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு முறையான மருத்துவப் பரிசோதனை நடைமுறை தாபிக்கப்பட்டது.

டெங்குக் காய்ச்சலுக்கான காவிக் கட்டுப்பாட்டை முன்னேற்றும்பொருட்டுப் புகையடிக்கும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. அது இப்போது ''பீஎச்ஜ'களின் மேற்பார்வையின்கீழ் தொழிற்படுத்தப்படுகின்றது.

சுகாதார அமைச்சினால் விதிக்கப்பட்ட கட்டளை விதிகளுக்கிணங்க மருந்தகம் தரமுயர்த்தப்பட்டது.

எல்லாச் சிற்றுண்டிச்சாலைகளும் சுத்திகரிப்புச் சேவை நடவடிக்கைகளும் 'பீஎச்ஜ'களால் கடுங்கண்டிப்புடன் மேற்பார்வை செய்யப்பட்டன.

கொவிட்-19 தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் 'பீஎச்ஜ'களால் மேற்கொள்ளப்பட்டன.

அ. கல்விசாராப் பணியாளரின் விவரம்

நிலையம்	அதி முதுநிலைப் பணியாளர்	முதுநிலைப் பணியாளர்	இளநிலைப் பணியாளர்	சிற்றூழியர்
சுகாதார நிலையம்	04	01	07	05

ஆ. மூலதனச் செலவின விவரம்

விடயம்	2020இல் ரூ.
தளபாடம், அலுவலக சாதனம் கையேற்றல்	52,900.00
இயந்திரத்தொகுதிகள் கையேற்றல்	34,400.00
ஏனையவை	133,200.00
மொத்தம்	**220,500.00**

2.17 தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம் (NEREC)

அறிமுகம்

தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம் (NEREC) கொள்கை வகுப்பதற்கு ஆராய்ச்சி அடிப்படையிலான காண்புகளை வழங்குகின்ற குறிக்கோளுடன் 2000ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. எனவே, அது தாபிக்கப்பட்ட திறத்தின் நிமித்தம் தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம் இலங்கையில் கல்விக் கொள்கையும் மாணவர் அடைவும் தொடர்பான ஆராய்ச்சி, மதிப்பீட்டு ஆய்வுகளைத் தொடக்குவதற்கும் நடத்துவதற்குமான ஈடுபாட்டுக் கடப்பாட்டைக் கொண்டுள்ளது. ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையமானது கல்வி அமைச்சினதும் (MoE), உலக வங்கியினதும் கலந்தாலோசனையுடன், பல்வேறு தரங்களைப் பூர்த்திசெய்கின்ற மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பாய்வுகளை நடத்தியுள்ளது. தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையத்தின் சேவைகள் கல்வி, மதிப்பீட்டுடன் தொடர்புடைய கருத்தரங்குகள், செயலமர்வுகள், ஆற்றல் அபிவிருத்திப் பயிற்சி அமர்வுகள், ஆராய்ச்சி என்பவற்றின்மூலம் அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய இரண்டுக்கும் கிடைக்கின்றன. எனவே, தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம் கல்வி ஆராய்ச்சியின்பால் அர்ப்பணிப்புமிக்க துடிப்பான ஆராய்ச்சிச் சமூகமொன்றை உருவாக்கும் ஈடுபாட்டைக் கொண்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் NEREC, 8ஆந் தர மாணவர்களில் கணிதவியல் மற்றும் ஆங்கிலமொழி ஆகிய பாடங்களின் கற்றல் பயன்கள் பற்றிய தேசிய மதிப்பீட்டை நடத்தியது.

நோக்கு

ஆராய்ச்சி, மதிப்பீடு, அபிவிருத்தி, பரப்புதல் நடவடிக்கைகள் ஆகியவற்றின்மூலம் தேசிய, பிரதேச மட்டத்தில் கல்வியையும் பயிற்சியையும் முன்னேற்றுதலும் கல்வித் தகவற் சேவைகளை வழங்குதலும்.

பணி

தேசிய, பிரதேசத் தோற்றப்பாடுடைய ஆற்றல்மிக்கதும் முற்போக்கானதுமான கல்விசார் ஆராய்ச்சி, மதிப்பீடு, சோதனை, பயிற்சி நிறுவனமொன்றைத் தாபித்தல்.

அ. ஆராய்ச்சி, புத்தாக்கம், வெளியீடுகளின் விவரம்

வெளியீடு	வெளியிடப்பட்டவை
	2020
அ. ஆராய்ச்சிகளின் எண்.	01
ஈ. நூல்களின் எண்.	01
மொத்தம்	**02**

ஆ. மீண்டுவருஞ் செலவின விவரம்

விடயம்	2020இல் ரூ.
அ. ஆளணி ஊதியங்கள்	627,856.00
ஆ. பிரயாணம்	-
இ. வழங்கல்கள்	107,730.00
ஈ. பராமரிப்பு	-
உ. ஒப்பந்தச் சேவைகள்	-
ஊ. ஏனையவை	999,872.09
மொத்தம்	**1,735,458.09**

இ. மூலதனச் செலவின விவரம்

விடயம்	2020இல் ரூ.
அ. இயந்திரத் தொகுதிகள் கையேற்றல்	379,285.20
மொத்தம்	**379,285.20**

ஈ. நிதி முன்னேற்ற விவரம் (செலவினம்)

விடயம்	2020இல் ஏற்பாடு ரூ.	2020இல் செலவு ரூ.
கருத்திட்டம் - உள் நிதி	2,033,115.94	1,735,458.09
மொத்தம்	**2,033,115.94**	**1,735,458.09**

2.18 பணியாளர் அபிவிருத்தி நிலையம்

அறிமுகம்

கொழும்புப் பல்கலைக்கழகப் பணியாளர் அபிவிருத்தி நிலையம் (SDC) நிறுவப்பட்டதிலிருந்து அதன் இருபத்துமூன்றாவது ஆண்டை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளது. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் திட்டமிட்ட பணியாளர் அபிவிருத்தியைத் தொடங்கவும் தாபிக்கவும் வேண்டுமென்ற தேவையை நிறைவேற்றும்பொருட்டுக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையம் இலங்கையில் தேசியப் பல்கலைக்கழக முறைமையினுள் முதலாவது பணியாளர் அபிவிருத்தி நிலையமாக 1997இல் தொடக்கிவைக்கப்பட்டது.

பணியாளர் அபிவிருத்தி நிலையத்தின் பணி "பொதுவாக இலங்கையிலும், குறிப்பாகக் கொழும்புப் பல்கலைக்கழகத்தினுள்ளும் உயர் கல்வி முறைமையினுள் பணியாளராலும் மாணவர்களாலும் மேற்கொள்ளப்படும் கல்விசார் செயற்பாட்டின் தரத்தை மேம்படுத்துதல்." இக்குறிக்கோளை அடையும்பொருட்டு ப.அ.நி பல்கலைக்கழகத்தின் கற்றல்/கற்பித்தலை கூடிய பயனுறுதியுள்ளதாகவும் கூடிய பொருத்தமானதாகவும் மாணவர்முகப்படுத்தப்பட்டதாகவும் சர்வதேச உயர் தரங்களைக் கொண்டதாகவும் மேம்படுத்தி முன்னேற்றுவதற்கான வசதிகளை வழங்குவதோடு ப. அ. நிலையமானது கல்விசார், கல்விசாராப் பணியாளர் உட்படப் பல்கலைக்கழகப் பணியாளர் தொகுதியின் அனைத்து உறுப்பினர்கள் மத்தியிலும் கூடிய பயனுறுதியுள்ளதும் திறமையானதுமான செயல் நிறைவேற்றத்துக்கு அவசியமான தேர்ச்சித் திறன்களையும் ஆற்றல்களையும் விருத்திசெய்கிறது. அதற்குத் தரப்பட்டுள்ள நிதி, மனிதவள மட்டுப்பாடுகளினுள் அது பல்கலைக்கழகப் பணியாளருக்குத் தொழில் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும்/ செயலமர்வுகளையும் நடத்துகிறது.

ப.அ. நிலையத்தின் குறிக்கோள்களும் எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளும்[1]

1. பாடவிதானத்தைத் தயாரித்தல் திருத்துதல் என்பவற்றோடு கற்பித்தல், ஆராய்ச்சிசெய்தல் போன்ற கல்விசார் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பல்வேறு திறன்களை விருத்தி செய்வதிலும் மேம்படுத்துவதிலும் கல்விசார் பணியாளருக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குதல்.

2. பல்வேறு கல்விசார் துணையாதரவுச் சேவைகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான திறன்களை விருத்திசெய்வதிலும் மேம்படுத்துவதிலும் கல்விசாராப் பணியாளருக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குதல்.

3. கல்விசார் நிருவாகப் பதவிகளில் (துறைகளின் தலைவர்கள், பீடங்களின் பீடாதிபதிகள், நிறுவகங்கள், கல்விக்கூடப் பணிப்பாளர்கள், முதல்வர் ஆகிய) ஏற்கனவேயுள்ள அல்லது அத்தகைய பதவிகளை எய்துகின்ற ஆவலுடைய கல்விசார் பணியாளருக்குக் கல்விசார் நிருவாகத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆற்றல்களையும் தேர்ச்சித் திறன்களையும் எய்துவதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குதல்.

4. கற்பித்தல் துறைகள், கல்விசார் அலகுகள், கல்விநெறிகள், நிகழ்ச்சித்திட்டங்கள், பீடங்கள் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்வதிலும் மீளாய்வதிலும் தனிப்பட்டவர்களுக்கும் குழுக்களுக்கும் ஆதரவு வழங்குதல்.

5. பல்கலைக்கழகத்தில் கற்பித்தலினதும் கற்றலினதும் தரத்தை மேம்படுத்தும் நோக்குடைய கருத்திட்டங்களில் பல்கலைக்கழகமெங்கிலுமுள்ள தனிப்பட்டவர்களுடனும் குழுக்களுடனும் கூட்டுழைத்தல்.

6. வேண்டுகோளின்பேரில் ஆசிரியர்களுக்கு புறவயமான மாணவர் பின்னூட்டற் சேவைகளை வழங்குதல்.

7. பல்கலைக்கழகத்தினுள் கற்பித்தலுடனும் கற்றலுடனும் தொடர்புடைய கொள்கைகளுக்கும் பொதுவான நடைமுறைகளுக்கும் பங்களிப்புச் செய்தல்.

8. உயர் கல்வியுடன் தொடர்புடைய பரந்த ஆராய்ச்சி, புலமைத்துறைக்குப் பங்களிப்புச் செய்தல்.

[1] மூலம்: கொழும்புப் பல்கலைக்கழகப் பேரவை நிகழ்ச்சியேடு 252/34 ப.75. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவையால் 1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 135ஆம் பிரிவினதும் அதன் பின்னரான திருத்தங்களினதும்கீழ் ஆக்கப்பட்ட துணைவிதிகள். (2010இன் இல. 01)

9. கொழும்புப் பல்கலைக்கழகத்தினுள்ளும் ஏனைய உயர் கற்றல் நிறுவனங்களிலும் பயன்படுத்துவதற்கு, குறிப்பாகக் கற்பித்தலிலும் கற்றலிலும் பொதுவாகப் பல்கலைக்கழகப் பணியாளர் அபிவிருத்தியிலும் வெளியீடுகளை மேற்கொள்ளுதல்.

10. ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பணியாளர் அபிவிருத்தி அமைப்புக்களுடன் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளல்.

11. பல்கலைக்கழகத்தால் அதன் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்ட வளங்கள் போதாதவையாகக் காணப்பட்டால், அதன் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குப் பல்கலைக்கழகப் பேரவையின் அங்கீகாரத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களினூடாக நிதிகளைத் திரட்டுதல்.

12. பல்கலைக்கழகக் கல்விநெறிக் கட்டமைப்புகள், பாடவிதான மாற்றங்கள், பல்கலைக்கழகக் கற்பித்தலும் கற்றலும் ஆராய்ச்சியும் பற்றிய முறையியல் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் வள, தகவல் மையமொன்றைக் கட்டியெழுப்புதல்.

இப்போது ப.அ.நி. பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்விசார், கல்விசாரா மற்றும் இதர ஆதரவுப் பணியாளரையும் இலக்குவைத்த கவனக்குவிப்புடைய, பல்வகைப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களூடாகப் பல்கலைக்கழகக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு அதன் பங்களிப்பை வெற்றிகரமாகத் தொடர்கின்றது.

கல்விசார் பணியாளரை இலக்காகக்கொண்ட பிரதானமானதும் ஒழுங்கானதுமான கல்விநெறி CTHE (உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ்) ஆகும். இது பணியாளர், கல்வி அபிவிருத்திச் சங்கத்தாலும் (யுகே), அவ்வாறே இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கின்ற மற்றொரு ப.அ.நி. கல்விநெறிதான் குறுகிய கல்விநெறியான கற்பித்தலைப் பயனுறுதியுள்ளதாக்குதல் (MaTE-2020). இது பல்கலைக்கழகத்தின் மிகவும் இளநிலைக் கல்விசார் பணியாளருக்கு வழங்கப்பட்டது. மேலும் கல்வி சார்ந்தவர்களுக்கும் கல்வி சாராதவர்களுக்கும் ஆற்றல்கேடு விழிப்புணர்வும் கூருணர்வும் பற்றிய சான்றிதழ் கல்விநெறி நடத்தப்படுகின்றது. இக்கல்விநெறி ஆற்றல்கேடு ஆராய்ச்சி, கல்வி மற்றும் நடைமுறைக்கான நிலையம் (CEDREP), கலைப்பீடம், ப.அ.நி. ஆகியவற்றின் கூட்டுழைப்பில் நடத்தப்படுகின்றது. ப.அ.நிலையமானது கொழும்புப் பல்கலைக்கழகத்தினது மட்டுமன்றி இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களினது நிறுவனங்களினது கல்விசார், கல்விசாராப் பணியாளரின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றுகின்றது. 2020ஆம் ஆண்டின்போது பல்வேறு அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களிலிருந்தும் வருகைதந்த வெவ்வேறு பணியாள் வகுதிகளைச் சேர்ந்த 100க்கும் அதிகமான பணியாளர்களுக்கு வெற்றிகரமாகப் பயிற்சியளித்துள்ளது.

ப.அ.நி. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள அதன் அலுவலகத் தொகுதியிலிருந்து செயற்படுகின்றது.

பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழ் (CTHE) கல்விநெறி

பல்கலைக்கழகப் பணியாளருக்கு இருபத்துமூன்றாவது உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழ் (CTHE) கல்விநெறியை ப.அ.நி வெற்றிகரமாக நிறைவுசெய்தது. இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 51 கல்வியறிவாளர்கள் இக் கல்விநெறியைத் தொடர்ந்திருந்தனர். [கொழும்புப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்விக்கூடம் (UCSC), உயிரிரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல், உயிர்த்தொழில்நுட்பவியல் நிறுவகம் (IBMBB), மனிதவள முன்னேற்ற நிறுவகம் (IHRA), சுதேச மருத்துவ நிறுவகம் (IIM), மொரட்டுவைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ருஹுணு பல்கலைக்கழகம், சபரகமுவ பல்கலைக்கழகம், கட்புல, அரங்காட்டற் கலைகள் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் சேர் ஜோன் பாதுகாப்புப் பல்கலைக்கழகம்].

கற்பித்தலை மேலும் பயனுறுதியுள்ளதாக்கலில் குறுகிய கல்விநெறி (MaTE)

கற்பித்தலை மேலும் பயனுறுதியுள்ளதாக்கலில் குறுகிய கல்விநெறி (MaTE 2020) கொழும்புப் பல்கலைக்கழகம் உட்பட உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த நிரந்தரமற்ற இளநிலைக் கல்விசார் பணியாளரை (எ-கா: உதவி விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், செய்முறை விளக்குனர்கள்) இலக்குவைத்து நடத்தப்பட்டது. எனினும் இக் கல்விநெறி ஆசிய பசுபிக் தகவல், தொழில்நுட்ப நிறுவகத்தை (APIIT) சேர்ந்த நிரந்தரக் கல்விசார் பணியாளரைக் கவர்ந்தது. இதனை 29 கல்விசார் பணியாளர் பின்பற்றினர்.

2020இல் ப.அ.நி. நடத்திய செயலமர்வுகளினதும் கல்விநெறிகளினதும் நிரல் கீழே சமர்ப்பிக்கப்படுகின்றது:

#	கல்விநெறி/செயலமர்வு	திகதி(கள்)	வளப்பகிர்வாளர்(கள்)
1.	உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ் (CTHE –அணி 23)	2020 மார்ச் முதல் 2021 மார்ச் வரை	1. பேரா. நாஸிமா கமர்தீன், பணிப்பாளர் பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம் 2. கலா. அசேல ஒலுபெலியவ, மருத்துவக் கல்வித் துறை, மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் 3. கலா. மனீஷா எஸ் வணசிங்க – பஸ்கல், சர்வதேச உறவுகள் துறை, கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் 4. திரு. சமிந்த பத்மகுமார, பன்னாட்டுறவுகள் துறை, கலைப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
2.	கற்பித்தலைப் பயனுறுதியுள்ளதாக்கல் (MaTE)	2020 ஒக்ரோபர் முதல் டிசம்பர் வரை	1. பேரா. நாஸிமா கமர்தீன், பணிப்பாளர் பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம் 2. கலா. அசேல ஒலுபெலியவ, மருத்துவக் கல்வித் துறை, மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் 3. கலா. மனீஷா எஸ் வணசிங்க – பஸ்கல், சர்வதேச உறவுகள் துறை, கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் 4. செல்வி பி.ஜி.ஐ. வீரசிங்க, விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை), பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம்
3.	ஆற்றல்கேடு பற்றிய விழிப்புணர்வும் கூருணர்வும் பற்றிய சான்றிதழ் கல்விநெறி கல்வி சார்ந்தவர்களுக்கும் கல்வி சாராதவர்களுக்கும்	2020 ஒக்ரோபர் முதல் 2021 மார்ச் வரை	1. நிலுக குணவர்தன, பிஏ., எம்ஏ, வருகைதரும் விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம் 2. தினுஷா விக்கிரமசேகர, விரிவுரையாளர், றோயல் நிறுவகம் 3. மனிக் குணரத்ன, முகாமையாளர், சிறப்புப் பயிற்சி, ஆற்றல்கேடு வளநிலையம், இலங்கைத் தொழில் வழங்குனர் சம்மேளனம் 4. ரேகா அத்திட்டிய, உளவியலாளர், பீஎச்டி பரீட்சார்த்தி, கொழும்புப் பல்கலைக்கழகம்

			5. கலா. ரவிமல் கலப்பத்தி, எம்பிபிஎஸ், எம்.டி. உள. சான். நாடகச் சிகிச்சை 6. செல்வி நிரோஷா குலசேகர, உதவி மாணவர் உளவளத் துணைவர், கொழும்புப் பல்கலைக்கழகம் 7. ரசஞ்சலி பத்திரகே (தலைவர், ஆற்றல்கேடு அமைப்புகளின் கூட்டு முன்னணி) 8. கசுன்ஜித் சட்டனாரச்சி, யுஎன்டிபீ, ஆற்றல்கேடுள்ள மாணவர்/பணியாளர், கொழும்புப் பல்கலைக்கழகம் 9. ஷியாமனி ஹெட்டியாரச்சி, முதுநிலை விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம், ஆற்றல்கேடு கற்கைத்துறை 10. லசந்தி டஸ்கன், சட்டத்தரணி, எம்ஏ (மனித உரிமைகள்), பணிப்பாளர், தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச பவுண்டேசன் 11. திரு. மதுஷான், ஆற்றல்கேடுள்ள மாணவர்களுக்கான உதவி நூலகர், உளவளத்துணை, தொழிற் சேவைகள் 12. செல்வி கயானி த சில்வா, CEDREP, விடுதிக் காப்பாளர், மாணவர் அலுவல்கள்

ப.அ.நி.இன் முகாமைத்துவத் தகவல் தரவுத்தளம் - ப.மா.ஆ. பீடங்களின் மீளாய்வில் பயன்படுவது

ப.அ.நி. அதன் பயிற்சி நடவடிக்கைகள் பற்றியும் பயிற்றப்பட்ட பணியாளரின் விவரம் பற்றியும் தரவுத் தளமொன்றைப் பேணுகின்றது. ப.மா.ஆ.இன் ஒழுங்குக்கிரமமான மீளாய்வினூடாகத் தேவைப்படுத்துகின்ற தரக்கட்டளைகளைப் பீடங்களும் துறைகளும் பல்கலைக்கழகங்களும் நிறைவேற்றுவதற்கு இத்தரவுத்தளம் அருமதிப்பானதாகக் காணப்பட்டுள்ளது. அதற்கிணங்கப் ப.அ.நி. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்களும் துறைகளும் அவற்றின் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகளைத் தயாரிக்கக்கூடியதாகத் (இம்முறை 2012 முதல் 2019 வரை) தகவல்களை வழங்கியது. இத்தரவுகள் "பீடம்/நிறுவகம் மாணவர்களை மதிப்பீடு செய்கின்ற பணியாளர் அவர்களின் பங்குகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்றும் நலன்முரண்பாடு இல்லையென்றும் காட்டுவதற்கு ஆதாரமான சான்றை வழங்கவேண்டும்" என்ற 7.9ஆம் கட்டளை விதியை நிறைவேற்றுவதில் இன்றியமையாத கூறாக அமைகின்றன.

அ. வளங்களினதும் மாணவரினதும் விவரம்

நிலையம்	மொத்த மாணவர்	மொத்தக் கல்விசார் பணியாளர்	மொத்தக் கல்விசார் ஆதரவுப் பணியாளர்	மொத்தக் கல்விசாராப் பணியாளர்
	2020	2020	2020	2020
பணியாளர் அபிவிருத்தி நிலையம் (ப.அ.நி.)	பணியாளருக்குச் சேவை	1	1	3
மொத்தம்		**1**	**1**	**3**

ஆ. கல்விசார் பணியாளரின் விவரம்

நிலையம்	விடயம்	மொழிமூலம்	விரிவுரையாளர்	விஞ்ஞான உதவியாளர்
ப.அ.நி.	உயர் கல்வி	ஆங்கிலம்	01	01
மொத்தம்			**01**	**01**

இ. கல்விசாராப் பணியாளரின் விவரம்

ஈ.

நிலையம்	இளநிலைப் பணியாளர்	சிற்றூழியர்
ப.அ.நி.	02	01
மொத்தம்	**02**	**01**

உ. நிகழ்ச்சித்திட்டம், கருத்தரங்குகள், செயலமர்வுகளின் விவரம்

நிகழ்ச்சித்திட்டங்கள்	பங்குபற்றியவை		பூர்த்திசெய்தவை	
	2019	2020	2019	2020
அ. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்ட எண்.	-	51	-	-
- உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழ் (CTHE)	76	25	66	நடைபெறுவது
- கல்வியாளர்களுக்கு ஆற்றல்கேடு விழிப்புணர்வு, கூருணர்வு பற்றிய சான்றிதழ் கல்விநெறி	-	-	-	நடைபெறுவது
ஆ. ஏனையவை		29		
- கற்பித்தலைப் பயனுறுதியாக்குவதில் குறுகிய கல்விநெறி (MaTE 2020)	-	105	-	நடைபெறுவது
மொத்தம்	**76**	**210**	**66**	**-**

2.19 சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி நிலையம் (SPARC)

கொழும்புப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி நிலையமானது இலங்கையில் சமூக அபிவிருத்தி சார்ந்த தீர்வுகட்டமான பரப்புகளில் ஆராய்ச்சி, பயிற்சி, கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைத்தல் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்கான கவனக்குவிப்பு மையமொன்றைப் பல்கலைக்கழக முறைமையினுள் வழங்குகின்றது. இந்நிலையம் பல்கலைக்கழகத்தினுள்ளும் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற முகவர் நிறுவனங்கள் அடங்கலாகப் பல்கலைக்கழக முறைமைக்கு வெளியேயுமுள்ள நிறுவனங்களிலுள்ள வெவ்வேறு கல்வித்துறைப் பின்னணிகளைச் சேர்ந்த பல்கலைக்கழகக் கல்வியறிவாளர்களுக்கிடையில் கூட்டுழைப்பை ஊக்குவிக்கின்றது.

கொழும்புப் பல்கலைக்கழக மூதவையின் 273ஆவது கூட்டத்தில் இந்நிலையத்தைத் தாபிப்பதற்கான அங்கீகாரத்தைத் தொடர்ந்து முறைப்படியான அங்குரார்ப்பணம் 2005 யூன் 10ஆந் தேதியன்று இலங்கை மன்றக் கல்லூரியில் (SLFI) நடைபெற்றது.

குறிக்கோள்கள்

- இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான சமூக அபிவிருத்திசார் விடயங்கள் தொடர்பான சுயாதீன ஆராய்ச்சிகளுக்கு வசதிவாய்ப்புகளை வழங்குதல்.
- வெவ்வேறு பின்புலங்களைச் சேர்ந்த அறிஞர்களுக்கிடையில் பல்துறைசார் பரிமாற்றங்களை மேற்கொள்ளுதல்.
- சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தரத்தை உயர்த்துவதற்கான பயிற்சிகளை வழங்குதல்.
- வறுமைக்குறைப்பு, சமூகக் கொள்கை உருவாக்கங்களில் பல்கலைக்கழகங்களுக்குள்ளான நிபுணத்துவத்தை வலுப்படுத்தல்.
- இலங்கையில் சமூகக் கொள்கைச் சீர்திருத்தங்களுக்கான வாய்ப்புகளை இனங்காணல்.

இந்நிலையம் பல்கலைக்கழகத்தினுள்ளிருந்து போதியளவு நிபுணத்துவத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்ளக் கூடிய தெரிவுசெய்யப்பட்ட பல்வேறு கவனக்குவிமையப் பரப்புகளில் அதன் ஆராய்ச்சியை நடத்துகிறது. பல்கலைக்கழகத்தினுள் ஈட்டப்படும் புது அனுபவங்களுக்கும் சிறப்பாகக் கவனஞ்செலுத்தவேண்டியனவாக எழுகின்ற நெருக்கடியான விடயங்களுக்கும் இணங்க இக்கவனக்குவிமையப் பரப்புகள் காலத்துக்குக்காலம் மீளாய்வுசெய்யப்படுகின்றன.

அ. கல்விசாராப் பணியாளரின் விவரம்

நிலையம்	ஒப்பந்தப் பணியாளர்
சமூக கொள்கைப் பகுப்பாய்வு ஆராய்ச்சி நிலையம்	5
மொத்தம்	**5**

ஆ. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகளின் விவரம்

வெளியீடுகள்	வெளியிடப்பட்டவை	
	2019	2020
இ. குறிப்பேட்டுக் கட்டுரைகளின் எண்.	08	02
ஈ. நூல்களின் எண்.	01	-
உ. கட்டுரைகளின் எண்.	10	-
ஊ. நூல் அத்தியாயங்களின் எண்.	-	05
மொத்தம்	**19**	**07**

இ. மீண்டுவருஞ் செலவின விவரம்

விடயம்	2020இல் ரூ.
அ. ஆளணி ஊதியங்கள்	2,204,750.15
ஆ. பிரயாணம்	160.00
மொத்தம்	**2,204,910.15**

ஈ. மூலதனச் செலவின விவரம்

விடயம்	2020இல் ரூ.
அ. தளபாடம், அலுவலக சாதனம் கையேற்றல் (கணினிகள்)	360,000.00
மொத்தம்	**360,000.00**

உ. கருத்திட்டங்களின் விவரம் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியுதவி)

பெயரும் விவரமும்	கடன்/ மானியம்	நிதியுதவும் ஏஜன்சி #	TCE ரூ.
இலங்கையில் சிறுவர்களுக்கெதிரான இணையவழி வன்முறையின் கூடுநிலை பற்றிய ஆய்வு	மானியம்	சேவ் த சில்றன் ஸ்ரீ லங்கா	8,252,400
ரஷ்யா, இலங்கை, பங்களாதேஷ் பல்கலைக்கழகங்களில் சக்தி வினைத்திறனுடனும் காலநிலை மாற்றத்துடனும் தொடர்புடைய நுகர்வோர் நடத்தையுடன் கல்வியை ஒருங்கிணைத்தல்	மானியம்	எறஸ்மஸ் + ஐரோப்பிய யூனியன்	13,335,497.08
இடப்பெயர்வின் பின்னர் மீளக் கட்டியெழுப்பல் (REGARD)	மானியம்	எறஸ்மஸ் + ஐரோப்பிய யூனியன்	6,717,553.24
வெப்பமண்டலக் கம உயிர்ச்சூழல் முறைமைகளில் மீட்டெழுச்சியைக் கட்டியெழுப்பல் (BRITAE)	மானியம்	எறஸ்மஸ் + ஐரோப்பிய யூனியன்	15,736,316.76

(GOSL/ ADB/ IDA. WB/ …..)
RFA: செலவு ஈடுசெய்யும் வெளிநாட்டு உதவி
DF: உண்ணாட்டு நிதிகள்

ஊ. கருத்திட்டச் செலவின விவரம் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியுதவி)

பெயர்	TCE ரூ.	2020இல் செலவு	பௌதிக முன்னேற்ற *MADAR Code
இலங்கையில் சிறுவர்களுக்கெதிரான இணையவழி வன்முறையின் கூடுநிலை பற்றிய ஆய்வு	8,252,400	1,444,674.99	60%
ரஷ்யா, இலங்கை, பங்களாதேஷ் பல்கலைக்கழகங்களில் சக்தி வினைத்திறனுடனும் காலநிலை மாற்றத்துடனும் தொடர்புடைய நுகர்வோர் நடத்தையுடன் கல்வியை ஒருங்கிணைத்தல்	13,335,497.08	699,501.13	60%
இடப்பெயர்வின் பின்னர் மீளக் கட்டியெழுப்பல் (REGARD)	6,717,553.24	306,790.00	60%
வெப்பமண்டலக் கம உயிர்ச்சூழல் முறைமைகளில் மீட்டெழுச்சியைக் கட்டியெழுப்பல் (BRITAE)	15,736,316.76	76,104.03	10%

2.20 சர்வதேசப் பணிமனை (IOUC)

நோக்கு

கொழும்புப் பல்கலைக்கழகம் உயர்தரக் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியூடாக அறிவை உருவாக்குவதில் உலக அரங்கில் ஓர் இடம்பிடிக்கக்கூடியதாகச் சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட முதன்மையான கல்விசார் நிலையங்களுடன் மூலோபாய இணைப்புக்களை விருத்திசெய்வதென்ற ஓர் உறுதியான ஈடுபாட்டுக் கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. 2008இல் தாபிக்கப்பட்ட கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சர்வதேசப் பணிமனை மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள், பணியாளர் இடமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், கூட்டு ஆராய்ச்சி என்பவற்றினூடாகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள், கல்வி நிலையங்கள், கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்வாண்மைக் கல்விசார் சங்கங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்படும் சர்வதேசக் கூட்டுச் செயற்பாடுகள்மூலம் அத்தகைய இணைப்புக்களைத் தேடி வளர்த்தலிலும் விருத்திசெய்தலிலும் ஈடுபட்டுள்ளது.

பணி

கொழும்புப் பல்கலைக்கழகம் சர்வதேச இணைப்புக்களை விருத்திசெய்வதற்குத் துணைபுரிந்து ஊக்குவித்தல், எதிர்காலத்தில் வரக்கூடிய சர்வதேச மாணவர்களுக்குக் கொழும்புப் பல்கலைக்கழகம் பற்றிய பொருத்தமான தகவல்களை வழங்குதல், பீடங்களுடன் தொடர்புகொள்ளல், கடல்கடந்த பீடங்களையும் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்தவற்றையும் சேர்ந்த மாணவர்கள் கொழும்பில் தங்கியிருப்பதற்கு உதவுதல்.

2008இல் தொடங்கப்பட்டதிலிருந்து இப்பணிமனை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சர்வதேசக் கூட்டுமுயற்சிகளை ஊக்குவிப்பதற்குக் காரணமாயிருந்துள்ளது. இப்போது இப்பணிமனை பல்வேறு மாணவர் பரிமாற்ற மற்றும் பணியாளர் இடமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடத்துகின்றது.

குறிக்கோள்கள்

கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் பங்காளிப் பல்கலைக்கழகங்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையில் கூட்டுழைப்புடனானதும் புத்தாக்கத் திறனுள்ளதுமான ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.

1. வெளிநாட்டில் கற்கின்ற புதிய நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதலும் இப்போதுள்ள கூட்டுப் பங்காண்மைகளை விருத்திசெய்தலும்.
2. கொழும்புப் பல்கலைக்கழகப் பீடத்துக்கு வெளிநாட்டில் பட்டப்பின்படிப்புக்கான வாய்ப்புக்களை உருவாக்குதலும் நிறுவனரீதியான இணைப்புக்கள் மற்றும் பீடப் பரிமாற்றங்களூடாகப் பாடவிதானத்தை விருத்திசெய்தலும்.
3. பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு ஈ-கற்றலையும் தொலைக்கற்றலையும் வலுப்படுத்துதலும் தகவல் தொழில்நுட்பத்தை விருத்திசெய்தலும்.
4. பங்காளிப் பல்கலைக்கழகங்களுடன் கூட்டு மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்குசெய்தல்.
5. பங்காளி நிறுவனங்களுடன் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்குப் புதிய ஆராய்ச்சி வாய்ப்புக்களைத் தாபித்தலும் இப்போதுள்ள ஆராய்ச்சி வலையமைப்புக்களை வலுப்படுத்தலும்.

மேற்படி குறிக்கோள்களுக்கிணங்க 2020இல் IOUC வெளிநாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களுடனும் நிறுவனங்களுடனும் அனேக செயற்பாடுகளில் பங்குபற்றியதுடன், புதிய இணைப்புக்களையும் உருவாக்கியது.

சர்வதேசப் பல்கலைக்கழகங்களுடன்/நிறுவகங்களுடன் கூட்டுழைப்புகள்

2021/2022க்கு வாய்ப்புள்ள கூட்டுழைப்புகள்

1. இரு பல்கலைக்கழகங்களின் நடைமுறையிலுள்ள கல்விசார் கூட்டுப்பங்காண்மையை விரிவுபடுத்தும் சாத்தியங்கள் தொடர்பில் 13.01.2020இல் அவுஸ்திரேலியா மேற்கு, சிட்னிப் பல்கலைக்கழகக் கலா. லிவன் லியனகேயுடன் கூட்டம்.

2. பங்களாதேஷில் உள்ள உயர் கல்வி நிறுவகங்களுடன் ஒத்துழைப்பு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 13.01.2020இல் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஆணையாளர் மேதகு எம். ரியாஸ் ஹமிதுல்லாவுடன் கூட்டம்.

3. இரு பல்கலைக்கழகங்களுக்குமிடையில் நடைபெறுகின்ற கூட்டுப் பங்காண்மை தொடர்பில் 16.01.2020இல் யப்பான், டோக்கியோ பல்கலைக்கழகத்தின் உப தலைவர் பேராசிரியர் ஹிரோக்கி ஐஹராவுடன் கூட்டம்.

4. இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 16.01.2020இல் இந்தியா, டெல்லி, தொழில்நுட்பப் பல்கலைக்கழக சர்வதேசப் பணிமனை உதவிப் பணிப்பாளர் கலா. நொலி பர்வாருடன் கூட்டம்.

5. இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 17.01.2020இல் இந்தியா, ராஜ்கிரி சமூக விஞ்ஞானக் கல்லூரி மற்றும் ராஜ்கிரி விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்லூரி (RCST) ஆகியவற்றைச் சேர்ந்த கலா. கே.கே. ராஜு மற்றும் கலா. வீவா மத்தியு ஆகியோருடன் கூட்டம்.

6. இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 17.01.2020இல் இந்தியா, கலிங்க கைத்தொழில்நுட்ப நிறுவக (KIIT) சர்வதேச உறவுகள் பிரதிப் பணிப்பாளர் கலா. விகாஸ் சபட்டாவுடன் கூட்டம்.

7. பாகிஸ்தானிலுள்ள உயர் கல்வி நிறுவகங்களுடன் எதிர்காலக் கூட்டுழைப்புக்கான வாய்ப்புத் தொடர்பில் 20.01.2020இல் பாகிஸ்தான், இஸ்லாமாபாத், உயர்கல்வி ஆணைக்குழு, கல்விசார் இணைப்புக்களும் சர்வதேசக் கூட்டுழைப்புக்களையுஞ் சேர்ந்த கலா. அர்ஷாட் பஷீருடன் கூட்டம்.

8. இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 21.01.2020இல் மலாயப் பல்கலைக்கழக சர்வதேச மாணவர் நிலைய முதுநிலை உதவிப் பதிவாளர் செல்வி விக்னசிறீ கிங்குடன் கூட்டம்.

9. மாலைதீவுக் குடியரசின் உயர் ஆணையாளர் மேதகு ஒமர் அப்துல் ரசாக்கின் வருகையுடன் மாலைதீவுக்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 12.03.2020இல் கூட்டம்.

10. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளருக்கும் மாணவருக்கும் இலவச நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்காக 14.05.2020இல் இணையவழி மேடைக் கல்விநெறிகளின் பிரதிநிதிகளுடன் 'Zoom' கூட்டம்.

11. இரு நிறுவனங்களுக்குமிடையில் கமத்தொழில்நுட்பத்தில் சாத்தியமான ஒத்துழைப்புத் தொடர்பில் 11.07.2020இல் நியூயோர்க், கோர்னல் பல்கலைக்கழகக் கலா. ரிச்சட் கஹூனுடன் 'Zoom' கூட்டம்.

12. இந்தியாவுக்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்குமிடையில் நடைபெறுகின்ற கூட்டுப் பங்காண்மை தொடர்பில் 17.08.2020இல் இந்தியாவின் உயர் ஆணையாளர் மேதகு ஸ்ரீ கோபால் பக்லேயுடன் கூட்டம்.

13. கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் ஈரானிலுள்ள உயர் கல்வி நிறுவகங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்பான வழிவகைகள் தொடர்பில் 15.09.2020இல் ஈரான் இஸ்லாமியக் குடியரசுத் தூதரகத்தின் கலாசார அறிவுரையாளர், திரு. மொஸ்தபா சொஹ்ரப்புடன் கூட்டம்.

14. ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைப்புக்கு வாய்ப்பான வழிவகைகள் தொடர்பில் 30.09.2020இல் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட இணைப்பாளர் செல்வி ஹனா சிங்கருடன் கூட்டம்.

15. 2020 நவம்பர் 5ஆம், 6ஆம் தேதிகளில் 'Zoom' வழியாக நடத்தப்பட்ட ஆசியப் பல்கலைக்கழகங்களின் நட்புக் கூட்டு நிறைவேற்றுனர்களின் கூட்டத்தில் கொழும்புப் பல்கலைக்கழகம் பங்குபற்றியது.

16. 26.11.2020இல் 'Zoom' வழியாக நடத்தப்பட்ட ஆசியப் பல்கலைக்கழகங்களின் நட்புக் கூட்டுத் தலைவர்களின் அரங்கில் கொழும்புப் பல்கலைக்கழகம் பங்குபற்றியது.

17. 27.11.2020இல் 'Zoom' வழியாக கொழும்பு பல்கலைக்கழகக் கன்பியூசியஸ் நிறுவகத்தின் வருடாந்த சபைக் கூட்டம் நடத்தப்பட்டது.

18. 03.12.2020இல் 'Zoom' வழியாக நடத்தப்பட்ட பொதுநலவரசுப் பல்கலைக்கழகங்களின் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கொழும்புப் பல்கலைக்கழகம் பங்குபற்றியது.

மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

உள்வரும் மாணவர்கள்

#	பெயர்	கடவுச்சீட்டு இல.	தாயகப் பல்கலைக்கழகம்	கொ.ப. உடன் இணைப்பு	குறிப்புகள்
1	செல்வி பெகி கொட்சே	CCHKLX130	டிரெஸ்டன் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், ஜேர்மனி	ஆங்கிலத் துறை, கலைப்பீடம்	கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தொடர்ந்து மாணவர்கள் அரையாண்டுப் பருவத்தை முடிக்காமல் திரும்பவேண்டியிருந்தது.
2	செல்வி மரியா ஹெட்விக்	CCJO3RKWY			
3	செல்வி லீசா ∴பிறிபி	CCJ2MRWJW			

வெளிச்செல்லும் மாணவர்கள்

கலைப்பீடம், வரலாற்றுத் துறையைச் சேர்ந்த பின்வரும் மாணவி ஜேர்மனி, கிஸ்சென், ஜஸ்ருஸ் லீபிக் பல்கலைக்கழகத்தில் வசந்தகால அரையாண்டைக் கழிப்பதற்கு நியமிக்கப்பட்டார்.

- செல்வி லாரா விஜேசூரிய

பின்வரும் மாணவர்கள் 2020 ஜனவரியில் தென்கொரியா, சியொல் தேசியப் பல்கலைக்கழகத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட "AUA நகர்ப்புறச் சவால்களுக்குத் திட்ட அமைப்பைச் சிந்தித்தல்: பெருந்தரவு அணுகுமுறை" நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர். அவர்களின் விவரம் வருமாறு:

1. செல்வி பீ.ஜி.எம். பண்டார (கலைப்பீடம்)
2. செல்வி பி.என். வெரலுபிட்டிய (விஞ்ஞானப்பீடம்)
3. செல்வி ஏ.டபிள்யு.எஸ்.வை. விக்கிரமசிங்க (விஞ்ஞானப்பீடம்)
4. செல்வி கே.எச். ஹெட்டிகே (விஞ்ஞானப்பீடம்)

கற்பித்தலுக்கு/ஆராய்ச்சிக்கு/பயிற்சிக்குப் பீட மற்றும் பணியாளர் பரிமாற்றம்

மலேஷியா, மலாயப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி விக்னஸ்ரீ கிங் AUA பணியாளர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2020 சனவரி 20 – 24 வரை வருகைதந்திருந்தார்.

புலமைப்பரிசில்களுக்கு மாணவர் நியமனங்கள்

பின்வரும் மாணவர்கள் ஐக்கிய இராச்சியம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் றோட்ஸ் புலமைப்பரிசில்களுக்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டனர்.

1. செல்வி கெத்மி ஹெட்டிகே
2. திரு. விந்துல கருணாரத்ன
3. திரு. கசுன் அபேரத்ன

பின்வரும் மாணவர்கள் சீனத் தூதுவர் புலமைப்பரிசில்கள் 2020க்கு நியமிக்கப்பட்டனர்:

»	மாணவரின் பெயர்	பீடம்
1.	செல்வி ஏ.யு. குருகே	கலைப்பீடம்
2.	செல்வி டபிள்யு.வை.எல். த சில்வா	கலைப்பீடம்
3.	சங். கட்டுபொத்த சந்தஜோதி	கல்விப்பீடம்
4.	செல்வி எம். மனுஷிகா கசுனி கூரே	சட்டப்பீடம்
5.	செல்வி பி.எம்.பீ.எம்.எம். பண்டாரநாயக்க	சட்டப்பீடம்
6.	திரு. அகில இமந்த நிலவீர	மருத்துவப்பீடம்
7.	திரு. ஓ.ஏ. இல்லேபெரும	விஞ்ஞானப்பீடம்
8.	செல்வி எம்.வி.ஜே.ரி. மாவெல	விஞ்ஞானப்பீடம்

2020இல் அதிதி விரிவுரைகள், செயலமர்வுகள், நேர்காணல்கள், விஜயங்கள் மற்றும் பிற செயற்பாடுகள்

செயலமர்வுகளும் கருத்தரங்குகளும்

1. மலேஷியா, மலாயப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி விக்னஸ்ரீ கிங் அவர்களால் 24.01.2020இல் "மலாயப் பல்கலைக்கழகத்தின் சிறந்த நடைமுறைகள்"எனும் பகிர்ந்துகொள்ளும் அமர்வு.
2. கொழும்புப் பல்கலைக்கழகம் 02.04.2020இல் இணையவழிக் கல்விக்கான சர்வதேச நிறுவகத்தை முறைப்படி தொடக்கிவைப்பதற்கு UNESCO-ICHEI, விஞ்ஞான, தொழில்நுட்பத் தென் பல்கலைக்கழகம், சீனா ஆகியவற்றுடன் கைகோர்த்தது.
3. ஐக்கிய நாடுகளின் 75ஆவது ஆண்டு நினைவைக் கொண்டாடுமுகமாக 18.06.2020இல் கொழும்புப் பல்கலைக்கழகப் பீடத்தினதும் மாணவர்களினதும் பங்குபற்றலுடன் மெய்நிகர் உரையாடல்.
4. ஐக்கிய இராச்சியம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இடமளிப்பதற்காக நோட்ஸ் புலமைப்பரிசில்களுக்கான நேர்காணல்கள் 18.07.2020இல் நடத்தப்பட்டன.

வருகைகள்

1. இரு பல்கலைக்கழகங்களின் நடைமுறையிலுள்ள கல்விசார் கூட்டுப்பங்காண்மையை விரிவுபடுத்தும் சாத்தியங்கள் தொடர்பில் 13.01.2020இல் அவுஸ்திரேலியா மேற்கு, சிட்னிப் பல்கலைக்கழகக் கலா. லிவன் லியனகேயுடன் கூட்டம்.
2. பங்களாதேஷில் உள்ள உயர் கல்வி நிறுவகங்களுடன் ஒத்துழைப்பு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 13.01.2020இல் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஆணையாளர் மேதகு எம். ரியாஸ் ஹமிதுல்லாவுடன் கூட்டம்.
3. இரு பல்கலைக்கழகங்களுக்குமிடையில் நடைபெறுகின்ற கூட்டுப் பங்காண்மை தொடர்பில் 16.01.2020இல் யப்பான், டோக்கியோ பல்கலைக்கழகத்தின் உப தலைவர் பேராசிரியர் ஹிரோக்கி ஐஹராவுடன் கூட்டம்.
4. இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 16.01.2020இல் இந்தியா, டெல்லி, தொழில்நுட்பப் பல்கலைக்கழக சர்வதேசப் பணிமனை உதவிப் பணிப்பாளர் கலா. நொலி பர்வாருடன் கூட்டம்.
5. இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 17.01.2020இல் இந்தியா, ராஜ்கிரி சமூக விஞ்ஞானக் கல்லூரி மற்றும் ராஜ்கிரி விஞ்ஞான, தொழில்நுட்பப் கல்லூரி (RCST) ஆகியவற்றைச் சேர்ந்த கலா. கே.கே. ராஜு மற்றும் கலா. வீவா மத்தியு ஆகியோருடன் கூட்டம்.

6. இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 17.01.2020இல் இந்தியா, கலிங்க கைத்தொழில்நுட்ப நிறுவக (KIIT) சர்வதேச உறவுகள் பிரதிப் பணிப்பாளர் கலா. விகாஸ் சபட்டாவுடன் கூட்டம்.

7. பாகிஸ்தானிலுள்ள உயர் கல்வி நிறுவகங்களுடன் எதிர்காலக் கூட்டுழைப்புக்கான வாய்ப்புத் தொடர்பில் 20.01.2020இல் பாகிஸ்தான், இஸ்லாமாபாத், உயர்கல்வி ஆணைக்குழு, கல்விசார் இணைப்புக்களும் சர்வதேசக் கூட்டுழைப்புக்களையுஞ் சேர்ந்த கலா. அர்ஷாட் பஷீருடன் கூட்டம்.

8. இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 21.01.2020இல் மலாயப் பல்கலைக்கழக சர்வதேச மாணவர் நிலைய முதுநிலை உதவிப் பதிவாளர் செல்வி விக்னசிறீ கிங்குடன் கூட்டம்.

9. மாலைதீவுக் குடியரசின் உயர் ஆணையாளர் மேதகு ஒமர் அப்துல் ரசாக்கின் வருகையுடன் மாலைதீவுக்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள வழிவகைகள் தொடர்பில் 12.03.2020இல் கூட்டம்.

10. இந்தியாவுக்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்குமிடையில் நடைபெறுகின்ற கூட்டுப் பங்காண்மை தொடர்பில் 17.08.2020இல் இந்தியாவின் உயர் ஆணையாளர் மேதகு ஸ்ரீ கோபால் பக்லேயுடன் கூட்டம்.

11. கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் ஈரானிலுள்ள உயர் கல்வி நிறுவகங்களுக்குமிடையில் ஒத்துழைப்புக்கு வாய்ப்பான வழிவகைகள் தொடர்பில் 15.09.2020இல் ஈரான் இஸ்லாமியக் குடியரசுத் தூதரகத்தின் கலாசார அறிவுரையாளர், திரு. மொஸ்தபா சொஹ்ரப்புடன் கூட்டம்.

12. ஐக்கிய நாடுகளுடன் ஒத்ழைப்புக்கு வாய்ப்பான வழிவகைகள் தொடர்பில் 30.09.2020இல் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட இணைப்பாளர் செல்வி ஹனா சிங்கருடன் கூட்டம்.

செயற்பாடுகள்

- ஆசியப் பல்கலைக்கழகங்களின் நட்புக்கூட்டு நிறைவேற்றுனர்கள் கூட்டத்தையும் இளைஞர் அரங்கத்தையும் ஒழுங்குசெய்த குழுவின் உறுப்பினர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் 14.01.2020இல் நடைபெற்றது.

2.21 கன்பியூசியஸ் நிறுவகம்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கன்பியூசியஸ் நிறுவகம் சீனமொழி கற்பித்தலுக்கும் கலாசார நடவடிக்கைகளுக்கும் கூடிய முக்கியத்துவமளிக்கின்ற அதேவேளையில், சீனாவுக்கும் இலங்கைக்குமிடையில் கலாசாரப் பரிமாற்றங்களுக்கும் கல்விசார் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்கும் துணைபுரிகின்ற ஒரு மேடையாகவும் பாலமாகவும் பணியாற்றுகின்றது.

குறிப்பு: சீனமொழி கற்கைப் பிரிவின் பாடத்திட்டம் கலைப்பீடத்தின் பீடச் சபையால் அங்கீகரிக்கப்பட்டு, மூதவைக்கு அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அ. வளங்களினதும் மாணவரினதும் விவரம்

நிலையம்	கல்விநெறி	மொத்த மாணவர்	மொத்தக் கல்விசார் பணியாளர்	மொத்தக் கல்விசாராப் பணியாளர்
		2020	2020	2020
கன்பியூசியஸ் நிறுவகம்	ENH 2105	12	கலா. விமல் ஹேவமான்னகே	செல்வி ஹஷினி சந்தீபனி
	ENH 2206	03	பேரா. ஹுவாங் வெய்	செல்வி டிஷ்னா சம்பிகா
	சீனமொழிச் சான்றிதழ் கல்விநெறி 2020/I	05	பேரா. லெய் மிங்சென்	
	சீனமொழிச் சான்றிதழ் கல்விநெறி 2020/II	12	திரு. பெய் யன்ஹொங்	
	சீனமொழிச் சான்றிதழ் கல்விநெறி 2020/III	106	திரு. அசேல பிரபாத்	
	சீனமொழிச் சான்றிதழ் கல்விநெறி 2020/IV (வெளிவாரி)	41	செல்வி ஷி கியோ	
	சீனமொழிச் சான்றிதழ் கல்விநெறி 2020/VII (வெளிவாரி)	49	செல்வி ஸவோ ஜிங்	
	பல்கலைக்கழகப் பணியாளருக்குச் சீனமொழிச் சான்றிதழ் கல்விநெறி	35	செல்வி ஸாங் ∴பாங்	
மொத்தம்		**263**	**8**	**2**

ஆ. கல்விசார் பணியாளரின் விவரம்

நிலையம்	விடயம்	மொழிமூலம்	பேராசிரியர்	முதுநிலை விரிவுரையாளர்	உதவி விரிவுரையாளர்
கன்பியூசியஸ் நிறுவகம்	சீனமொழி	சீனமொழி	2	1	4
மொத்தம்			**2**	**1**	**4**

இ. கல்விசாராப் பணியாளரின் விவரம்

நிலையம்	ஒப்பந்தப் பணியாளர்
கன்பியூசியஸ் நிறுவகம்	**02**

ஈ. மீண்டுவருஞ் செலவின விவரம்

விடயம்	2020இல் ரூ.
அ. ஆளணி ஊதியங்கள்	29,000.00
ஆ. பிரயாணம்	5,233.88
இ. வழங்கல்கள்	161,916.92
ஈ. பராமரிப்பு	24,906.65
உ. ஒப்பந்தச் சேவைகள்	5,331,458.00
ஊ. ஏனையவை (நீர், தொலைபேசி, சிற்றுண்டி)	73,528.47
மொத்தம்	**5,626,043.92**

உ. மூலதனச் செலவின விவரம்

விடயம்	2019 ரூ.
அ. தளபாடம், அலுவலக சாதனம் கையேற்பு	-
ஆ. இயந்திரத்தொகுதி கையேற்பு	-
இ. கட்டடம், கட்டமைப்புகள் கையேற்பு	5,331,458.00
ஈ. ஏனையவை	-
மொத்தம்	**5,331,458.00**

ஊ. கருத்திட்டங்களின் விவரம் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியுதவி)

பெயரும் விவரமும்	கடன்/ மானியம்	நிதியுதவும் ஏஜன்சி #	TCE ரூ.
CI நிதிகள்	மானியம்	CI தலைமையகம்	31,684,380.55

2.22 நூலகம்

நோக்கு

கற்றல், கற்பித்தல், அறிவுசார் மேம்பாடு என்பவற்றுக்குகந்த சூழலொன்றை உருவாக்குவதன்மூலம் அறிவு, கல்வி, ஆராய்ச்சி என்பவற்றுக்கிடையே கூட்டிணைவுகளைக் கட்டியெழுப்புதல் என்ற பலக்லைக்கழகத்தின் நோக்கினை எட்டத் துணைபுரிதல்

பணி

மாணவர், பணியாளர், ஆய்வாளர் ஆகியோரது அறிவுத் தேடலைத் தீர்த்துவைக்கும்பொருட்டு அவர்களுக்கான உயர்தரச் சேவையினை வழங்குவதன்மூலம் பல்கலைக்கழகத்தின் பணிக்கு அடித்தளமாக விளங்குதல்.

அ. வளங்களின் விவரம்

நூலகம்	பதிவுசெய்த மொத்த மாணவர்	மொத்தக் கல்விசார் பணியாளர்	மொத்தக் கல்விசாராப் பணியாளர்
	2020	**2020**	**2020**
பிரதான நூலகம்	7,487	633	348
விஞ்ஞான நூலகம்	3,029	293	-
மருத்துவ நூலகம்	1,443	317	72
மொத்தம்	**11,959**	**1,243**	**440**

ஆ. கல்விசார் பணியாளர்

நூலகம்	நூலகர்	பிரதி நூலகர்	முதுநிலை உதவி நூலகர் தரம் I	முதுநிலை உதவி நூலகர் தரம் II	உதவி நூலகர்
நூலகம்	01	01	04	05	08
வெற்றிடம்	-	-	-	-	-
மொத்தம்	**01**	**01**	**04**	**05**	**08**

இ. கல்விசாராப் பணியாளர்

நூலகம்	நிருவாக	அதி முதுநிலைப் பணியாளர்	முதுநிலைப் பணியாளர்	இளநிலைப் பணியாளர்	சிற்றூழியர்
பிரதான நூலகம்	SAR-01 AR-01	CP-01 SSA-03	SA-01	LIA- 23	BB-09 LA-09 WA-05
விஞ்ஞான நூலகம்			-	LIA -07 CAA-01	LA-03
மருத்துவ நூலகம்		SSA-01		LIA- 08	LA-2 WA-04
தாதிய நூலகம்				LIA- 01	LA-01
தொழில்நுட்ப நூலகம்					
வெற்றிடம்				LIA-02	LA-09
மொத்தம்	**02**	**05**	**01**	**42**	**42**

ஈ. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகளின் விவரம்

பெயர்/கள்	பதவிப் பெயர்	வெளியீட்டுத் தலைப்பு	வகை (குறிப்பேட்டுக் கட்டுரை/ மாநாட்டுக் கட்டுரை ஆதியன)	APAஇல் குறிப்பீட்டு விவரம் (கட்டாயமானது)	URL (கிடைக்குமாயின்)
பீ. விஜேதுங்க, ஏ. சில்வா, பீ.கே.எஸ். மனதுங்க	நூலகர்	இலங்கை அரச பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி ஆக்கத்திறன், SciVal அடிப்படையில் ஒரு கருமம் மற்றும் முதன்மை நிலைக்கு நூலகங்களின் பங்களிப்பு.	குறிப்பேட்டுக் கட்டுரை	பீ. விஜேதுங்க, ஏ. சில்வா, பீ.கே.எஸ். மனதுங்க - இலங்கைப் பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தின் குறிப்பேடு	http://doi.org/10.4038/jula.v23i1.7968
பிரதீப் விஜயதுங்க மற்றும் அபிராமி சிவச்சந்திரன்		கல்விமான்களால் இலத்திரனியல் வளங்களின் பயன்பாடு: இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு சம்பவ ஆய்வு.	குறிப்பேட்டுக் கட்டுரை	பிரதீப் விஜயதுங்க மற்றும் அபிராமி சிவச்சந்திரன் நூலகத் தத்துவமும் நடைமுறையும் (ஈ-குறிப்பேடு), 4512	https://digitalcommons.unl.edu/cgi/viewcontent.cgi?article=8354&context=libphilprac
டி.சி. குருப்பு	பிரதி நூலகர்	மார்புப் புற்றுநோயுள்ள நோயாளர்களின் தகவல் தேவைகள் பற்றிய மதிப்பீடு: இலங்கையில் வைத்தியசாலை அடிப்படையிலான ஓர் ஆய்வு.	குறிப்பேட்டுக் கட்டுரை	டி.சி. குருப்பு, சி.என். விஜயரத்ன மற்றும் ஐ. அமரசிங்க (2020). மார்புப் புற்றுநோயுள்ள நோயாளர்களின் தகவல் தேவைகள் பற்றிய மதிப்பீடு: இலங்கையில் வைத்தியசாலை அடிப்படையிலான ஓர் ஆய்வு. ஆசிய-பசுபிக் புற்றுநோயியல் தாதியக் குறிப்பேடு, 7(4), 375	DOI: 10.4103/apjon.apjon_23_20

சஜீவனி டி. சோமரத்ன	முதுநிலை உதவி நூலகர்	'அடுக்கிலிருந்து கற்றுக் கொள்ளலுக்கு': அடுத்த சந்ததிப் பயனாளர்களுக்கு கல்விசார் நூலகங்களில் கற்றல் இடவசதியைத் திட்டமிடல்.	மாநாட்டுச் சுருக்கம்	நூலகமும் தகவல் விஞ்ஞானமும் பற்றிய சர்வதேச மாநாட்டின் நடவடிக்கைக் குறிப்பு, தொகுதி 6, இல. 1, பக். 17-18, சனவரி 15-17, 2020, ஒசாக்கா, யப்பான்	https://iconlis.org/proceedings-of-lis-2020/
திருமதி கே. முருகதாஸ், திருமதி ரி. சிறீதரன், திரு.எஸ். சந்தரூபன்	முதுநிலை உதவி நூலகர்	யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் பேறுக்கு முந்திய பிணி ஆய்வு நிலையத்துக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களின் சுகாதாரத் தகவல் தேவைகளும் தகவல் தேடும் நடத்தையும்.	குறிப்பேட்டுக் கட்டுரை	கே. முருகதாஸ், தயானந்தி சிறீதரன், எஸ். சந்தரூபன் (2020): யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் பேறுக்கு முந்திய பிணி ஆய்வு நிலையத்துக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களின் சுகாதாரத் தகவல் தேவைகளும் தகவல் தேடும் நடத்தையும். பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தின் குறிப்பேடு. 23(1), 73-90	DOI: 10.4038/jula.v23i1.7967
அபிராமி சிவச்சந்திரன் மற்றும் மனோஜா நிலந்தி சமரதிவாகர, ஜி.டி.	உதவி நூலகர்	பல்கலைக்கழகக் கல்விமான்களின் தகவல் தேடும் நடத்தையை மதிப்பீடு செய்வதற்கு ஒரு மாதிரியை நிருமாணித்தல்.	குறிப்பேட்டுக் கட்டுரை	அபிராமி சிவச்சந்திரன் மற்றும் மனோஜா நிலந்தி சமரதிவாகர, ஜி.டி. ஆராய்ச்சிக்கும் மீளாய்வுக்குமான சர்வதேசக் குறிப்பேடு, தொகுதி 07, இதழ் 06, 6961-6967	http://ijirr.com/sites/default/files/issues-pdf/3638_0.pdf
அபிராமி சிவச்சந்திரன்	உதவி நூலகர்	இலங்கையில் துணை மருத்துவத் தொழில் வாண்மையினரின் (பரா மெடிக்ஸ்) தகவல் தேவைகளும் பயன்பாடும்.	குறிப்பேட்டுக் கட்டுரை	அபிராமி சிவச்சந்திரன், நூலக மற்றும் தகவல் ஆய்வுகளின் சர்வதேசக் குறிப்பேடு, தொகுதி 10, இதழ் இல. 2, ஏப்-யூன் 2020, ISSN: 2231-4911, பக். 20-32	http://www.ijlis.org/img/2020_Vol_10_Issue_2/20-32.pdf
சிரந்தி விஜேசுந்தர	உதவி நூலகர்	கலாசார மற்றும் வரலாற்றுச் செயற்பரப்புகளில் டிஜிட்டல் சுவடிக் காப்புக்கான பொதுமைப்படுத்திய ஒரு தரவு மாதிரி.	நூல் அத்தியாயம் (எல்ஸ்வியர்)	எஸ். சுகிமோட்டோ, சி. விஜயசுந்தர, ரி. மிஹர, எம். நகமோறி (அச்சில்) கலாசார மற்றும் வரலாற்றுச் செயற்பரப்புகளில் டிஜிட்டல் சுவடிக் காப்புக்கான பொதுமைப்படுத்திய ஒரு தரவு மாதிரி. எவ்.ஜே. கல்சடா-பிராடோ (பதிப்பில்) அறிவுப் பொருளாதாரத்தை ஊக்குவித்தல்: கல்விசார், கலாசார மற்றும் கூட்டாண்மைச் சூழல்களில் தகவல் சேவைகளிலிருந்து முக்கிய பங்களிப்புகள். எல்ஸ்வியர்	இதுவரை குறிக்கப்பட வில்லை.

சிரந்தி விஜேசுந்தர	உதவி நூலகர்	முதலில் கட்டுபடியாகாத ஒன்றெனினும் பின்னர் ஒரேயொரு நம்பிக்கை; LIS கல்வி நிறுவன மொன்றில் ஈ-கற்றலின் முதல் 100 நாட்கள்.	சிந்தனைக் கட்டுரை	ஆர். கமகே மற்றும் சி. விஜேசுந்தர (அச்சில்). முதலில் கட்டுபடியாகாத ஒன்றெனினும் பின்னர் ஒரேயொரு நம்பிக்கை; LIS கல்வி நிறுவன மொன்றில் ஈ-கற்றலின் முதல் 100 நாட்கள். தகவலுக்கான கல்வி: தகவல் ஆய்வுகள் பற்றிய துறைகளுக்கிடையிலான குறிப்பேடு, IOS பிரஸ்.	இதுவரை குறிக்கப்பட வில்லை.

உ. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகளின் விவரம்

செயலமர்வின்/ கருத்தரங்கின் தலைப்பு	இலக்குக் குழு	நடத்தியவர்	வளவாளர்/கள்	திகதி	பங்கு பற்றியோர் எண்.
மனித நூலகம்- அமர்வு 06 – ஆங்கிலம் பேசுவதற்குத் தன்னம்பிக்கை: தென்னாசியக் கற்பவர்களுக்கு ஓர் இன்றியமையாமை	ஆர்வமுள்ள எவரும்	பிரதான நூலகம்	• கலா. அசந்த யு. அத்தநாயக்க பார்போறிச் (முதுநிலை விரிவுரையாளர், DELT, கொழும்புப் பல்கலைக்கழகம்) • செல்வி லூயிஸ் கவுச்சர் (பணிப்பாளர், கல்வியும் ஆங்கிலமும், பிரிட்டிஷ் கவுன்சில்) • கேர்ணல் அடம் எல். பார்போறிச் (பீஎச்டி ஆராய்ச்சி மாணவர், பேராதனைப் பல்கலைக்கழகம்) • திரு. கிரிஷாந்த பெட்றிக்ஸ் (விரிவுரையாளர், சிங்களத்துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்)	19.12.2019	56
வேலை ஒழுக்கநெறி	கொழும்புப் பல்கலைக்கழக நூலக வலை யமைப்பின் நூலகத் தகவல் உதவியாளர் களுக்கு	பிரதான நூலகம்	• திரு.கே.ஏ.எஸ். எட்வேட் (பதிவாளர், கொ.ப.), திரு.பீ.எம்.எஸ்.பண்டார (DR/கலை) • செல்வி வஜிர ஹபுஹின்ன (DR/ விஞ்ஞானம்) • செல்வி அனோமா ரத்நாயக்க (SAR/NAE) • செல்வி திலினி பெரேரா (SAR/NAE) (தாபனங்கள்)	05.02.2020	42
ஒக்ஸ்போர்ட் யூனிவர்சிட்டி பிறெசுடன் வெளியீடு: ஒரு பயிற்சி அமர்வு	வாய்ப்புள்ள எழுத்தாளர்கள்	நூலகம் + ஒக்ஸ்போர்ட் யூனிவர்சிட்டி பிறெஸ்	செல்வி சுமித்ரா சென் (வாடிக்கையாளர் பயிற்றுனர், ஒக்ஸ்போர்ட் யூனிவர்சிட்டி பிறெஸ், தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியா	10.02.2020	24

வெபினர்-இலங்கை நூலகங்களில் கொவிட்-19 சவால்களும் புதிய வழமைச்சேவை அடிப்படையும்	தேசிய, சர்வதேசப் பங்குபற்றுனர்கள்	எப்ஸ்கோ பப்ளிஷிங்	கலா. (திருமதி) பிரதீபா விஜேதுங்க (நூலகர்)	27.05.2020	சுமார் 200
பல்கலைக்கழக நூலகங்களின் புதிய போக்குகள்	கொ.ப. நூலகத் துணைத் தொழில்வாண்மைப் பணியாளர் அனைவரும்	பிரதான நூலகம்	• கலா.சி.சி. ஜயசுந்தர (நூலகர், களனிப் ப.க.) • கலா. என்.டி. விஜயசுந்தர (நூலகர், ஸ்ரீ ஜயவர்தனபுர ப.க.) • கலா. எம்.ரி.எம்.மஹீஸ் (முதுநிலை விரிவுரையாளர், சமூகவியல் துறை, கொ.ப.) • திருமதி அனோமா ரத்நாயக்க (முதுநிலை உதவிப் பதிவாளர், கல்விசாராத் தாபனங்கள்) • திருமதி திலினி பெரேரா (முதுநிலை உதவிப் பதிவாளர், கல்விசாரா தாபனங்கள்)	24.02.2020 மற்றும் 25.02.2020	46
பட்டியலாக்கமும் இருப்புச் சரிபார்த்தலும்	கலைப் பீடத்தில் துறை நூலகங் களைக் கையாளுகின்ற பணியாளர்	பிரதான நூலகம்	• திரு.எம்.ஏ. மில்ரன் (SAL, வாசகர் சேவைகள்) • திருமதி எம்.ஏ.எல். சில்வா (SAL, கையேற்புப் பிரிவு)	14.07.2020	11
'அலிஸ் ∴போர் வின்டோஸ்' இணையவழிப் பயிற்சி	பிரதான நூலகத்தின் நூலகத் தகவல் உதவியாளர்கள்	பிரதான நூலகம் + சொ∴ப்ற்லிங்க் ஏசியா	செல்வி ஹர்மீற் கவுர் நிஜ்ஹர் (சொ∴ப்ற்லிங்க் ஏசியாவின் தொழில்நுட்ப முகாமையாளர்)	08.07.2020 முதல் 20.07.2020 வரை	25 (LIA)+ 10 (முதுநிலைப் பணியாளர்)
வெபினர்- எழுத்தாளர் அடையாளப் படுத்தல்கள் ஊடாக உங்கள் டிஜிட்டல் பிரசன்னத்தை விருத்திசெய்தல்	AHEAD கருத்திட்டம் மூலம் நிதியிடப்படும் ஆராய்ச்சியாளர்	AHEAD கருத்திட்டம்	கலா. (திருமதி) பிரதீபா விஜேதுங்க (நூலகர்)	07.09.2020	150
வெபினர்-'மென்டலி றெபறன்ஸ் மனேஜர் ∴பிறீ வேர்ஷன்'க்கு சுருக்கமான தெரிநிலை	AHEAD கருத்திட்டம் மூலம் நிதியிடப்படும் ஆராய்ச்சியாளர்	AHEAD கருத்திட்டம்	கலா. (திருமதி) பிரதீபா விஜேதுங்க (நூலகர்)	07.09.2020	150
வெபினர்-'மென்டலி றெபறன்ஸ் மனேஜர் ∴பிறீ வேர்ஷன்'க்கு சுருக்கமான தெரிநிலை	CTHE பங்குபற்று னர்களுக்கு - ஸ்ரீ ஜயவர்தனபுர ப.க.	AHEAD கருத்திட்டம்	கலா. (திருமதி) பிரதீபா விஜேதுங்க (நூலகர்)	11.12.2020	50
இணையவழி IT திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	மட்டம் 1 மாணவர், விஞ்ஞான பீடம், கொ.ப.	விஞ்ஞான நூலகம்	திருமதி எஸ். சோமரத்ன (முதுநிலை உதவி நூலகர்/விஞ்ஞானம்)	13.10.2020 – 08.12.2020	87

ஊ. மூலதனச் செலவின விவரம்

விடயம்	2020 ரூ.
அ. தளபாடம், அலுவலக சாதனம் கையேற்பு	1,317,768.80
ஆ. இயந்திரத்தொகுதி கையேற்பு	-
இ. கட்டடம், கட்டமைப்புகள் கையேற்பு	-
ஈ. ஏனையவை	
நூல்கள்	1,437,052.70
பருவ இதழ்கள், இலத்திரனியல் தரவுத்தளங்கள்	6,527,577.39
மொத்தம்	**9,282,398. 89**

எ. நிதி முன்னேற்ற விவரம் (செலவினம்)

விடயம்	2020இல் ஏற்பாடு	2020இல் செலவு	சேமிப்பு/மிகை ரூ.
அ. கருத்திட்டம் தவிர மீண்டுவரும்		143,609.80	-
ஆ. கருத்திட்டம் தவிர மூலதன (MLDF)	மீதி 27,339,650.36 + ஏற்பாடு - 59,000.00 = 27,398,650.36	118, 000.00	19,473,815.56
ஈடுபடுத்தியது		7,663,225.00	
மொத்தம்	**27,398,650.36**	**7,924,834.80**	**19,473,815.56**

MLDF – பிரதான நூலக அபிவிருத்தி நிதி

ஏ. நிதி முன்னேற்ற விவரம் (உருவாக்கிய வருமானம்)

வருவாய் மூலம்	2020ல் ஏற்பாடு	2020இல் வசூலித்தது
அ. கருத்திட்டம் தவிர மீண்டுவரும்	8,000.00	8,000.00
ஆ. கருத்திட்டம் தவிர மூலதன (MLDF)	கல்விநெறி இணைப்பாளர்களிடமிருந்து எமக்கு விவரம் கிடைக்கவில்லை	51,000.00
ஏனையவை: தண்டங்கள் ஆதியன	529,378.00	529,378.00
மொத்தம்	**537,378.00**	**588,378.00**

MLDF – பிரதான நூலக அபிவிருத்தி நிதி

2.23 தர உத்தரவாத அலகு நிலையம் (CQA)

முன்னர் உள்ளகத் தர உத்தரவாத அலகு (IQAU) என்றறியப்பட்ட தர உத்தரவாத அலகுக்கான நிலையம் (CQA) பல்கலைக்கழகத்தின் தர உத்தரவாத (QA) நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும் ஒத்திசைவிப்பதற்கும் பொறுப்பாயுள்ளது. நேரடியாகத் துணைவேந்தரின் கீழுள்ள CQA பல்கலைக்கழகத்தின் முதுநிலைக் கல்விசார் பணியாளராயுள்ள ஒரு பணிப்பாளரால் முகாமைசெய்யப்படுகின்றது. CQA இன் நிருவாக மற்றும் நிதிக் கடமைகள் பீடாதிபதிகள், பணிப்பாளர்கள், எல்லாப் பீடங்களிலும்/நிறுவகங்களிலும் ஸ்ரீபாளி வளாகத்திலுமுள்ள உள்ளகத் தர உத்தரவாத மையங்களின் கல்விசார் இணைப்பாளர்கள், சில முதுநிலை நிருவாக அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டதான மூதவையின் CQA நிலைக்குழுவால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. CQA நிலைக்குழு மாதாந்தம் பல்கலைக்கழகப் பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்ட ஒரு தேதியில் துணைவேந்தரின் தலைமையில் கூடுகின்றது. அதன் முன்னேற்றமும் நடவடிக்கைகளும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு மாதாந்தம் அறிக்கையிடப்படுகின்றன. CQA இன் பணிப்பாளர், தர உத்தரவாதம் பற்றிய ப.மா.ஆ. நிலைக்குழுவின் ஓர் உறுப்பினராக அதில் கொழும்புப் பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

நோக்கு

அறிவு, கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்முயற்சியாண்மை ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுச் சக்தியை உருவாக்கிப் பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற முதன்மையான மையமாக இருக்க அயராது முயற்சித்தல்.

பணி

நிலைமாறுகின்ற கல்விக்கான வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் எதிர்மீள்வுகொண்ட பல்கலைக்கழகக் கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிர்வாகத்தின் தரத்தை உறுதி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு முன்னோடி அமைப்பாக இருத்தல்.

குறிக்கோள்கள்

- பல்கலைக்கழகக் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறைகளின் தரத்தை முன்னேற்றுதல்.
- பல்கலைக்கழகக் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறைகளின் பயனுறுதியான கண்காணிப்பையும் தரக் கட்டுப்பாட்டையும் வலுப்படுத்துதல்.
- கல்விசார் செயலாட்சிக்கு (பொறுப்புக்கூறல், நீதி, ஒளிவுமறைவின்மை) ஆதரவான கடமைகளை வளப்படுத்துதல்.
- பல்கலைக்கழகம் பூராவும் தனித்துவமான தரக் கலாசாரமொன்றை ஆழப் பதியச்செய்தல்.

இவ்வறிக்கையுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விவரம்/செயல்நிறைவேற்றம்

2020ஆம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட தர உத்தரவாத நடவடிக்கைகளின் முனையம்சங்கள்

- கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 'உள்ளகத் தர உத்தரவாத அலகு' பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 4/2015ஆல் கட்டளையிடப்பட்டவாறு தாபிக்கப்பட்டது. 'தர உத்தரவாத நிலையம் (CQA)" என்ற பெயர் மாற்றம் ப.மா.ஆ. சுற்றறிக்கை 09/2019இன் பிரகாரம் 2020 பெப்ருவரியில் செயற்படுத்தப்பட்டது.
- ரைம்ஸ் உயர் கல்வி படிநிலைப்படுத்தும் முறைமை போன்ற சர்வதேசப் படிநிலைப்படுத்தும் அமைப்புகளுக்குத் தரவுகளைச் சேகரித்துச் சமர்ப்பிக்கும் செயல்முறைக்குப் பொறுப்பான தரப்புகள் மத்தியில், கூடுதல் பொருத்தமான தரவுகளைச் சேகரிப்பதினதும் தரவுகள் விடுபடுதலைக் குறைத்தலினதும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்குக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.
- ப.மா.ஆ.இன் தர உத்தரவாதக் கவுன்சிலின் (QAC) பணிப்பாளர் பேரா. நிலந்தி த சில்வா தர உத்தரவாத நிலையத்தின் மூதவை நிலைக்குழுவுடன் விசேட கூட்டமொன்றுக்குப் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்தார். 2017 மற்றும் 2018க்கான நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகளைப் பூர்த்திசெய்த கலைப்பீடம், கல்விப் பீடம், சட்டபீடம், முகாமைத்துவ, நிதிப் பீடம் மற்றும் ஸ்ரீ பாளி வளாகம் ஆகிய பீடங்கள்/நிறுவகங்களின் பிரதிநிதிகளுடன் மேலும் உப கூட்டங்கள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு அறிக்கைகளின் விதப்புரைகளைச் செயற்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பது பற்றி விசேடமாக வலியுறுத்தப்பட்டது.

- கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வேலை நியமங்கள் பற்றிய ஆவணத்தின் புதிய பதிப்புருவைத் தயாரித்த, மூன்று உறுப்பினர் கொண்ட உபகுழுவின் ஓர் உறுப்பினராக CQA பணிப்பாளர் இருந்தார். இப்பதிப்புரு கல்விசார் பணியாளருக்காக ஆலோசனை கூறப்பட்ட 'பணியாளர் செயல்நிறைவேற்ற மதிப்பீட்டு முறைமை'யினை விருத்திசெய்வதற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வரைவு ஆவணம் எல்லாப் பீடங்களினதும்/நிறுவகங்களினதும் பீடாதிபதிகள்/ பணிப்பாளர்கள் மத்தியில் அவர்களின் கருத்துக்களுக்காகப் பரப்பப்பட்டது.

- ருகுண பல்கலைக்கழகத்தின் பேரா. திலக் கமகே அவர்களின் பணியாளர் செயல்நிறைவேற்ற மதிப்பீட்டு முகாமை பற்றிச் செப்ரெம்பர் மூதவைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பொன்றைச் செய்வதற்காக அழைக்கப்பட்டார்,

- பட்ட மாணவர் மற்றும் பட்டப்பின் மாணவர் மட்டங்கள் இரண்டிலும் மாணவர் பின்னூட்டல் சேகரிப்புச் செயல்முறைக்குத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. கல்விச் சூழலைப் பற்றிய பின்னூட்டலைச் சேகரிப்பதில் பல்கலைக்கழகம் பூராவும் நிலைமாறாத தன்மையை உறுதிப்படுத்தும்பொருட்டு, நியமிக்கப்பட்ட ஒரு குழுவால் விருத்திசெய்யப்பட்ட Dundee Ready Education, Environment Measure (DREEM) மதிப்பீட்டின் பொதுப்படையான ஒரு பதிப்புருவைச் செயற்படுத்தும்படி பீடங்களுக்கு/ நிறுவகங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது. நிறுவனமெங்கிலும் மாணவர் பின்னூட்டற் பொறிமுறைகள் பற்றிய மதிப்பீடொன்று 2020 யூனில் நடத்தப்பட்டது. அதன் பெறுபேறுகள் 2020 ஆகஸ்டில் தர உத்தரவாத நிலையத்தின் மூதவை நிலைக்குழுவில் பகுப்பாய்வுசெய்து கலந்தாராயப்பட்டன. அதற்கிணங்க நிறுவனரீதியான செயல்முறைகளைத் தரப்படுத்துவதற்காகப் பட்ட மாணவர் மற்றும் பட்டப்பின் மாணவர் மட்டங்களில் மாணவர் பின்னூட்டலைப் பெறுவதற்குப் பொதுப்படையான வடிவங்களைத் தயாரிப்பதற்கு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டன.

- மேற்கு ஸ்கொட்லாந்துப் பல்கலைக்கழகத்தின் கூட்டுழைப்புடன் ப.மா.ஆ. மற்றும் இலங்கை பிரிட்டிஷ் கவுன்சில் ஆகியவற்றால் ஒழுங்குசெய்யப்பட்ட தர உத்தரவாதத்தில் மாணவரை ஈடுபடுத்துதல் பற்றிய சிறப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு CQA பணிப்பாளர் பங்களிப்புச் செய்திருந்தார். தர உத்தரவாத நிலையத்துக்கான மூதவை நிலைக்குழுவினூடாக இவ்விடயம் பற்றிய தெரிநிலையை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- முழுப் பல்கலைக்கழகம் அளாவிய QA கொள்கையொன்றை விருத்திசெய்வதற்கு உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது. அது QACஆல் ஏற்பாடு செய்யப்பட்ட ப.மா.ஆ. மூலோபாயத் திட்டம் 2019 – 2023ஐச் செயற்படுத்துவதற்கான திட்டத்துக்கு ஒழுங்காக விருத்திசெய்யப்படுவதுடன், QAஇல் மாணவரை ஈடுபடுத்துவதற்கான ஆக்கக்கூறையும் உள்ளடக்கும்.

- 2020இன் பிற்பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிறுவனரீதியான மீளாய்வுக்கு (IR) ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மூதவையின் CAQ நிலைக்குழுவின் எல்லா உறுப்பினர்களையும் அவ்வாறே பல்கலைக்கழகத்தின் முதுநிலை நிருவாக, நிதி அலுவலர்களையும் உள்ளடக்கிய நிறுவன மீளாய்வு ஆயத்தக்குழுவொன்று 2020 மார்ச்சில் நியமிக்கப்பட்டது. 2016 IR விதப்புரைகளின் செயற்படுத்தல் பற்றிய தகுநிலை மதிப்பீட்டை நடத்துவதற்கும் எதிர்வருகின்ற IRக்கு அவசியமான ஆவணச் சான்றுகளின் நிறுவனஞ்சார் இலத்திரனியற் சேமிப்பகமொன்றைத் தாபிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) எய்துவதில் கொ.ப.இன் பங்களிப்பை முன்னேற்றுவதற்கு மேடையொன்று தொடக்கிவைக்கப்பட்டது. அது பல்கலைக்கழகமெங்கும் KPIகளை அபிவிருத்தி செய்தலை முன்னேற்றுதலும், ரைம்ஸ் உயர் கல்விப் பல்கலைக்கழகப் படிநிலைகளின் தாக்கப் படிநிலைகளை முன்னேற்றுகின்ற அதேவேளையில் SDGகளை எய்தலுமென்ற நோக்குடன் மேற்கொள்ளப்பட்டது. SDGகள் பற்றிக் கல்விமான்களின் தெரிநிலையை அறிவதற்குத் தொடக்க மதிப்பீடொன்று நடத்தப்பட்டது. அதன் பெறுபேறுகள் மூதவையின் CQA நிலைக்குழுவின் செப்ரெம்பர் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுக் கலந்தாராயப்பட்டன.

  மூதவையின் CQA நிலைக்குழு உறுப்பினர்களால் ஆதரவளிக்கப்படும் அதேவேளையில் கொ.ப.இன் சர்வதேசப் பணிமனையின் (IOUC) கீழ் மேடையினை நிறுவுவதற்கு அடுத்துவந்த கூட்டம் நடத்தப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஐக்கிய நாடுகளின் இலங்கை வதிவிட இணைப்பாளர் மேதகு ஹன்னா சிங்கர் அவர்கள் வெளிப்படுத்திய அக்கறைக்குப் பதிலாற்றுமுகமாகச் செய்யப்பட்டது. (SDGகளுக்குக் கொ.ப. ஆற்றுகின்ற பங்களிப்பை மேம்படுத்துவதற்காக UNDP கொ.ப. உடன் கூட்டுழைப்பாகப் பணியாற்றுகின்றது.)

- CQA பணிப்பாளர், QA நிகழ்ச்சித்திட்டமும் நடைமுறைகளும் பற்றியும், அவர்களின் பணியில் அதன் பொருத்தம் பற்றியும் பல்கலைக்கழக நிருவாக, நிதிப் பணியாளரின் தெரிநிலையை அதிகரிப்பதற்கு அவர்களை அதில் ஈடுபடுத்தியுள்ளார்.
- CQA பணிப்பாளர் சுதேச மருத்துவ நிறுவகத்தின் (IIM) முதுநிலைக் கல்விமான்களுடன் ZOOM அடிப்படையிலான அமர்வொன்றை நடத்தினார். இது அவர்களின் நிறுவகத்தை ஒரு பீடமாக மாற்றுவதற்கான அவர்களின் முன்மொழிவின் QA அம்சங்களை முன்னேற்றுவதற்காக நடத்தப்பட்டது. மற்றுமொரு பயிற்சி அமர்வு IIMஇன் சகல பணியாளருக்குமாகத் திட்டமிடப்படுகின்றது. CQA பணிப்பாளர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்படும் CTHE கல்விநெறியை மேற்கொள்ளகின்ற கல்விமான்களின் நடப்புத் தொகுதியினருக்கு QA நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துதல் பற்றிய அமர்வொன்றையும் நடத்தினார்.

2020இல் நடத்தப்பட்ட வெளிவாரி நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகளின் பெறுபேறுகள்

ஆண்டு	பீடம்/நிறுவகம்	நிகழ்ச்சித்திட்டம்	தரம்
2020	மருத்துவப் பீடம்	இயன்மருத்துவத்தில் விஞ்ஞான இளமாணி	A

அங்கீகரிக்கப்பட்ட 2020இன் QA பாதீடு

பீடம்/நிறுவகம்	நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகள்	செயலமர்வுகள்/ கூட்டங்கள்	IQAC அலுவலகப் பராமரிப்பு	IQAU க்கு அலுவலக சாதனம் கொள்வனவு (அலுவலக கணினிகளுக்கு CPU மற்றும் UPS)	பணியாளர் கொடுப்பனவுகள் (பட்டதாரிப் பயிலுனர்) 12«40,000	நாளாவிதம்/நுகர்வுகள்	உபமொத்தம்
CQA	200,000	400,000	150,000	100,000	480,000	40,000	1,370,000
கலைப்பீடம்		25,000	75,000		480,000	40,000	620,000
கல்விப்பீடம்		25,000	75,000		480,000	40,000	620,000
பட்டக்கற்கைகள் பீடம்		25,000	75,000		480,000	40,000	620,000
சட்டப்பீடம்		25,000	75,000		480,000	40,000	620,000
விஞ்ஞானப்பீடம்	1,250,000	100,000	75,000		480,000	40,000	1,945,000
நூலகம்		25,000	75,000		480,000	40,000	620,000
முகாமைத்துவ, நிதிப்பீடம்		25,000	75,000		480,000	40,000	620,000
மருத்துவப்பீடம்		25,000	75,000		480,000	40,000	620,000
ஸ்ரீபாளி வளாகம்		25,000	75,000		480,000	40,000	620,000
தாதியப் பீடம்		25,000	75,000		480,000	40,000	620,000
தொழில்நுட்பப் பீடம்		25,000	75,000		480,000	40,000	620,000
கூட்டுமொத்தம்							**9,515,000**

2.24 உடற்கல்வித்துறை

உடற்கல்வித்துறை (DPE) கொழும்புப் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர் மத்தியில் விளையாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவித்தலுடனும் அபிவிருத்தி செய்தலுடனும் தொடர்புடைய எல்லாப் பணிகளையும் மேற்கொள்ளுகின்றது. இத்துறை பதிற் பணிப்பாளரையும் உடற்கல்விப் போதனாசிரியர்களின் (IPEs) அணியொன்றையும் கொண்டுள்ளது. அவர்கள் மாணவர்களுக்குக் கிடைக்கின்ற பல்வேறு விளையாட்டுக்களுக்கும் பொறுப்பாயுள்ளனர். DPEஇன் உறுப்பினர்கள், எல்லா விளையாட்டுக்களினதும் அவ்வாண்டுக்கான தலைவர்களையும் உப தலைவர்களையும் கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட கழகத்துடனும் (விளையாட்டுக் கவுன்சில்) அதன் முயற்சிகளில் வெற்றிபெறும்பொருட்டு நெருக்கமாகப் பணியாற்றுகின்றனர்.

அ. பணியாளரின் விவரம்

பதவிப் பெயர்	**எண்ணிக்கை**
பதில் பணிப்பாளர்	01
உடற்கல்விப் போதனாசிரியர் தரம் II	02
உடற்கல்விப் போதனாசிரியர் தரம் III	04

ஆ. கல்விசாராப் பணியாளரின் விவரம்

முதுநிலைப் பணியாளர்	**இளநிலைப் பணியாளர்**	**சிற்றூழியர்**
01	02	18

2.25 சூழல் அடியெடுப்புக்கான நிலையம் (CEI)

நோக்கு

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சூழல் பாதுகாப்பையும் நிலைபேறான பசுமை அபிவிருத்தியையும் சாதித்தல்.

பணி

1. பசுமைக்கான அடியெடுப்புகளைக் கைக்கொண்டு பசுமைப் பல்கலைக்கழகமாதல்.
2. பல்கலைக்கழகத்தில் முறையான திண்மக்கழிவு முகாமைத்துவத்தைத் தாபித்தல்.
3. வளாகச் சூழலைப் பாதுகாத்து வளாக வளவைக் கூடிய சூழல்நேயமுடையதாக்குதல்.
4. பல்கலைக்கழகச் சமூகத்தின் மத்தியிலும் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயும் சூழல் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதலும் பசுமைச் செயற்பாடுகளில் ஏனையோருக்கு ஆதரவளித்தலும்.

அறிமுகம்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சூழல் அடியெடுப்புகளுக்கான நிலையம் பல்கலைக்கழகத்தில் சூழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக 2017இல் தாபிக்கப்பட்டது. மேற்படி இலக்குகளை எய்துவதில் CEI பல்கலைக்கழகச் சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும்பொருட்டு அனேக அரசாங்க/தனியார் அதிகாரசபைகளின்/நிறுவனங்களின் ஆதரவுடன் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்யத் திட்டமிட்டுள்ளது.

துணைவேந்தரின் நோக்கெல்லையின்கீழ் நேரடியாக வருகின்ற CEI ஒரு பணிப்பாளரால் முகாமை செய்யப்படுகின்றது. சூழல் அலுவலர் CEI பணிப்பாளரின் மேற்பார்வையின்கீழ் பணியாற்றுகின்றார்.

2020க்கான நடவடிக்கைகளின் முனையம்சங்கள்

அ. நடப்புச்சூழல் அக்கறைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்குப் பசுமை உரைகள் நடத்துதல்

பல்கலைக்கழகச் சமூகம் சூழல் விடயங்கள் பற்றிக் கூடிய விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் கொண்டிருக்கக்கூடியதாக அத்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களின் பங்குபற்றலுடன் இணைவழி விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன.

ஆ. கழிவு முகாமைத்துவம் பற்றித் துப்புரவுப் பணியாளருக்கு விழிப்புணர்வு அமர்வுகள்

பல்கலைக்கழகத்தில் கழிவு உருவாக்கத்தை இழிவளவாக்குதல், கழிவைத் தரம்பிரித்தல், மீள்சுழற்சிக்கான கழிவைச் சேகரித்தல் ஆகியவற்றுக்கான நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

இ. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கழிவுக் களஞ்சிய நிலையத்தைத் தொழிற்படுத்தல்

கொழும்புப் பல்கலைக்கழகத்திலுள்ள கழிவுக் களஞ்சிய நிலையம் பல்கலைக்கழகத்தில் மீள்சுழற்சிக்குரிய கழிவைக் களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது. சேகரித்த மீள்சுழற்சிக் கழிவு மீள்சுழற்சி செய்பவர்களுக்கு வழங்கப்பட்டதன்மூலம் வருமானமொன்று உருவாக்கப்பட்டது. அது 'கழிவிலிருந்து பெறுமதி' கருத்திட்டமாகப் பெரும் வெற்றியளித்தது. கழிவுக் களஞ்சிய நிலையம் காப்பாளரின் அலுவலகத்தினதும் பொதுநிருவாகத்தினதும் கூட்டுழைப்புடன் சூழல் அடியெடுப்புக்கான நிலையத்தின் மேற்பார்வையின்கீழ் தொழிற்படுகின்றது.

கழிவுக் களஞ்சிய நிலையத்திலிருந்து 2020ஆம் ஆண்டுக்கான மொத்த ஈட்டல்கள்

கம்பனியின் பெயர்	விவரம்	ஈட்டல்கள்
கிளீன்ரெக் பிரைவேட் லிமிரெட்	பிளாஸ்டிக், கழிவுக் கடதாசி (OCC, POC, PVC, பிளாஸ்டிக், ABS பிளாஸ்டிக்	20,806.00
கிளீன்ரெக் பிரைவேட் லிமிரெட்	பிளாஸ்டிக் கடதாசி, உலோகம், ஈ-கழிவு	7,394.40
ஈக்கோ ஸ்பின்டில் பிரைவேட் லிமிரெட்	PET போத்தல்கள்	3,350.00

குறிப்பு: நாட்டில் நிலவிய கொவிட்-19 உலகத்தொற்றின் நிமித்தம் சூழல்தின நிகழ்ச்சி, பசுமை உரைகள் உட்படத் திட்டமிட்ட நடவடிக்கைகள் எல்லாம் இணையவழியாக நடத்தப்பட்டன. அதனால் திட்டமிட்டவாறு எவ்வித செலவும் ஏற்படவில்லை.

2.26 பல்கலைக்கழக வியாபார இணைப்பு (UBL) மையம்

பல்கலைக்கழகங்கள் அறிவு, ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் அதிநவீன உயர்மட்டத் தொழில்நுட்பம் ஆகியவற்றில் முன்னரங்கில் உள்ளன. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முக்கிய வல்லமைகளில் ஒன்றுதான் அதன் அதிநவீன உயர்தர ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற அர்ப்பணிப்புள்ள, பல்வகைப்பட்ட, முதிர்ச்சியடைந்த ஆராய்ச்சியாளர்களின் அணி. எனவே, கொ.ப. ஆராய்ச்சியினாலும் புத்தாக்கத்தினாலும் உந்தப்படும் கல்விசார் கலாசாரத்தை உருவாக்க முயற்சிப்பதுடன், ஆராய்ச்சியின் பெறுபேறுகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துகின்ற பயனுள்ள உற்பத்திப் பொருட்களாகவும் சேவைகளாகவும் மாற்றப்படவேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றது. மேற்படி குறிக்கோளை எய்துவதற்குப் பல்கலைக்கழக ஆராய்ச்சியின் விளைபயன்கள் கைத்தொழில்களுக்கும் வியாபாரங்களுக்கும் மாற்றப்படவேண்டியது இன்றியமையாதது. இப்பின்புலத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி விரிவாக்கத்தையும் அபிவிருத்தியையும் துரிதப்படுத்தும் (AHEAD) கருத்திட்டத்தின் ஆதரவுடன் ப.மா.ஆ. சுற்றறிக்கை 10/2016ஐச் செயற்படுத்துவதில் பல்கலைக்கழக வியாபார இணைப்பு (UBL) மையத்தைத் தாபித்தல் அவசியமான ஒரு படியாகின்றது. UBL மையம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பக் கைமாற்றல் அலுவலகமாகச் (TTO) செயற்படுகின்றது. UBL-UOC பல்கலைக்கழகப் புத்தாக்கத்தைப் பாதுகாப்பதிலும் முகாமைசெய்வதிலும் வர்த்தகமயப்படுத்தலிலும் துணைபுரிவதுடன் ஆராய்ச்சிப் பெறுபேறுகளைப் பொதுமக்களின் நன்மைக்காகச் சந்தைக்குக் கொண்டுவருவதிலும் உதவுகின்றது.

நோக்கு

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உயிர்ப்பும் இயக்கமும் மிக்க புத்தாக்கச் சூழலை உருவாக்குவதன்மூலம் தொழில்நுட்பக் கைமாற்றத்தையும் வர்த்தகமயப்படுத்தலையும் ஊக்குவிப்பதில் முன்னணி வகித்தல்.

பணி

பல்கலைக்கழகம் உருவாக்கிய தொழில்நுட்பங்களைப் பொதுமக்களின் பயனுக்கும் நன்மைக்குமான புதிய உற்பத்திப் பொருள்களாகவும் சேவைகளாகவும் கைமாற்றுவதற்குத் துணைபுரிதலும் பல்கலைக்கழகக் கல்விமான்களின் புலமை மூலதனத்தையும் வியாபாரச் சமூகத்தின் உன்னதத் தொழில் முயற்சியையும் இணைப்பதன்மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களித்தலும்.

குறிக்கோள்கள்

- பல்கலைக்கழகப் பணியாளர் மற்றும் மாணவர் மத்தியில் பல்கலைக்கழக வியாபார இணைப்பைப் (UBL) பிரபல்யப்படுத்தலும் ஊக்குவித்தலும்.
- பல்கலைக்கழக ஆராய்ச்சியினதும் புத்தாக்கத்தினதும் விளைவான புலமைச்சொத்து உரிமைகளைப் பாதுகாத்தலும் முகாமைசெய்தலும் வர்த்தகமயப்படுத்தலும்.
- பல்கலைக்கழக ஆராய்ச்சியைப் பொதுமக்களின் பயனுக்கும் நன்மைக்குமான புதிய உற்பத்திப் பொருள்களாகவும் சேவைகளாகவும் மாற்றுவதற்குத் துணைபுரிதல்.
- பல்கலைக்கழக ஆராய்ச்சியினதும் ஆக்கத்திறனதும் பலன்களைப் பொதுமக்களுக்குக் கொண்டுசெல்லல்.
- கைத்தொழில் துறையின் தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக மாணவர் கருத்திட்டங்கள் தொடங்கப்படுவதற்கு ஆதரவளித்தல்.
- பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தமது புலமைச்சொத்து உரிமைகளைத் தேசியரீதியாகவும் சர்வதேசரீதியாகவும் பட்டியற்படுத்திப் பதிவுசெய்வதனூடாகப் பாதுகாப்பதற்குத் தேவையான ஆதரவை வழங்குதல்.
- பல்கலைக்கழகக் கல்விமான்களும் மாணவரும் தொடக்க வியாபாரங்கள் போன்ற புதிய தொழில்முயற்சிகளைத் தாபிப்பதற்கு வழிகாட்டுதல்.
- பல்கலைக்கழகத்தின் புலமைச்சொத்து முகாமைத்துவத்துக்கு ஆதரவளித்தல்.
- வியாபார சமூகத்தைப் பல்கலைக்கழக வளங்களுடன் இணைப்பதன்மூலம் பல்கலைக்கழக-கைத்தொழில் கூட்டுழைப்புகளையும் கூட்டுப்பங்காண்மைகளையும் மேம்படுத்துதல்.
- தொழில்நுட்ப அடிப்படையிலான பொருளாதார அபிவிருத்தியிலும் வேலை உருவாக்கத்திலும் தீவிர பங்காற்றும்படி பல்கலைக்கழகத்தை ஊக்குவித்தல்.
- உரிமம் வழங்குவதனூடாகப் பல்கலைக்கழகத்துக்குப் புதிய வருவாய் வழிகளை உருவாக்குதல்.

2.27 கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தொழில்வழிகாட்டல் அலகு (CGU)

நோக்கு

கொழும்புப் பல்கலைக்கழகப் பட்ட மாணவர்கள் உகந்த தொழிலில் ஈடுபடுவதற்கும் வேலைப்படையின் திறமையான உறுப்பினர்களாவதற்கு அவசியமான மனப்பாங்கு, செயலூக்கம், திறன்கள் அடங்கலாகக் கைமாற்றக்கூடிய திறன்களை விருத்திசெய்வதற்கும் பயிற்சி வழங்குதல்.

குறிக்கோள்கள்

தொழில் வழிகாட்டல் அலகு (CGU) பின்வரும் குறிக்கோள்களுடன் உருவாக்கப்பட்டது:

- பல்கலைக்கழகத்துக்கும் தொழில்துறைக்குமிடையில் பரஸ்பரம் நன்மையளிக்கும் வகையில் உறவுகளை வளர்த்தல்.
- மாணவரின் ஆற்றல், விருப்பம் மற்றும் கிடைக்கின்ற வாய்ப்புக்களின் அடிப்படையில் பட்ட மாணவர்கள் உகந்த தொழிற் பாதையைத் தெரிவுசெய்து முன்னேறுவதற்கு உதவுதல்.
- பட்ட மாணவர்கள் வேலைப்படையின் ஆக்கவளமுள்ளதும் திறமையானதுமான உறுப்பினர்களாகக் கூடியதாக, பயனுறுதியுள்ள தொடர்பாடல் திறன்கள், தலைமைத்துவத் திறன்கள், அணிவேலைத் திறன்கள் மற்றும் முகாமைத்துவத் திறன்கள் போன்ற கைமாற்றத்தக்க திறன்களை விருத்தி செய்வதற்கும் தொழில்துறைக்கான ஆற்றுப்படுத்தலைப் பெறுவதற்கும் அவர்களுக்கு உதவுதல்.
- தனியார் மற்றும் அரச துறை நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு, நடைமுறையிலுள்ள தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதலும் அவற்றைப் பட்டதாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவருதலும் மிகப் பொருத்தமான விண்ணப்பதாரிகளை அந்நிறுவனங்களுக்கு வழிப்படுத்தலும்.

வளங்களினதும் மாணவரினதும் விவரம்

அ. தொழில் வழிகாட்டல் அலகின் பணியாளர்

கல்விசார் பணியாளர்	கல்விசார் ஆதரவுப் பணியாளர்	கல்விசாராப் பணியாளர்
பணிப்பாளர் – 01	தொழில் ஆலோசகர்கள் - 02	கணினிப் பிரயோக உதவியாளர் – 01 அலுவலக உதவியாளர் - 01
மொத்தம்		**5**

ஆ. வளத் தரவுத்தளம்

கம்பனியின் வகை	பதிவு எண்ணிக்கை
அரச நிறுவகங்களும் நிறுவனங்களும்	70
அரச கல்வி நிறுவகங்கள்	10
தனியார் நிறுவனங்களும் கம்பனிகளும்	258
தனியார் கல்வி நிறுவகங்கள்	20
வெளிநாட்டுக் கல்வி நிறுவகங்களும் தூதரகங்களும்	05
மொத்தம்	**363**

இ. மாணவர் தரவுத்தளம்

பீடம்	மாணவர் எண்.
கலைப் பீடம்	480
கல்விப் பீடம்	132
IIM	200
சட்டப் பீடம்	243
முகாமைத்துவ, நிதிப் பீடம்	422
மருத்துவப் பீடம்	200
தாதியப் பீடம்	84
விஞ்ஞானப் பீடம்	324
ஸ்ரீ பாளி வளாகம்	150
தொழில்நுட்பப் பீடம்	3ஆம் ஆண்டு 225
UCSC	100
மொத்தம்	**2596**

ஈ. நிகழ்ச்சித்திட்டம், கருத்தரங்குகள், செயலமர்வுகளின் விவரம்

2020க்காக நடத்தப்பட்ட கூட்டங்கள்

தேதி / நேரம்	கூட்ட உறுப்பினர்கள்	கூட்டத்தின் நோக்கம்
11 செப்ரெம்பர் 2020 பி.ப. 2.00 முதல்	• CGU பணிப்பாளர் • தொழில் வழிகாட்டல் பீட இணைப்பாளர்கள் • தொழில் ஆலோசகர்கள்	• பீடங்களுக்கும் CCGUக்கும் இடையில் தொடர்பாடலை வலுப்படுத்தல் • பொது வேலைத்திட்டத்தைத் திட்டமிடல் • தரவுத்தளத்தை மையப்படுத்துதல்
14 டிசெம்பர் 2020 பி.ப. 2.30 முதல்	• ஸ்ரீ பாளி வளாக கல்விசார் பணியாளர் • அரங்காட்டற் கலைகள் துறை • வெகுசன ஊடகத்துறை	• ஸ்ரீ பாளி வளாகப் பட்ட மாணவர்களின் தொழில் திறன்களை மேம்படுத்தல் • பொருத்தமான தொழிலுக்கான திறன்களின் மேடையைத் தாபித்தல் பற்றித் திட்டமிடல் • கலைக் கண்காட்சி • திறன்காட்சி இறுதித் தயாரிப்புகள்
24 செப்ரெம்பர் 2020 பி.ப. 4.00 முதல் பி.ப. 6.00 வரை	• நடப்புப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் பீட உறுப்பினர்கள் • சுற்றுலாப் பொருளியல் விருந்தோம்பல் முகாமைத்துவப் பழைய மாணவர் சங்கம் • சரசவி மித்துறோ பழைய மாணவர் சங்கம் • பழைய மாணவர் நிறுவனம் MBA பழைய மாணவர்	• CCGUஇன்கீழ் கொ.ப. பழைய மாணவர் சங்கத்தைத் தாபித்தல் • உள்ளுறைப் பயிற்சி வழங்கல் • CCGU நடத்தும் செயலமர்வுகளுக்கு வளவாளர்களின் தரவுத்தளமொன்றை உருவாக்குதல்

தொழில்முயற்சியாண்மைத் திறன்கள் அபிவிருத்திச் செயலமர்வு I/II/III

தொழில் வழிகாட்டல் அலகு

மாணவர் பதிவும் பங்குபற்றலும்

பீடம்	மொத்த மாணவர்	அமர்வு I 30.09.2020		அமர்வு II (வெபினர்) 28.10.2020		அமர்வு III (வெபினர்) 19.11.2020	
		பதிவு செய்தோர்	பங்கு பற்றியோர்	பதிவு செய்தோர்	பங்கு பற்றியோர்	பதிவு செய்தோர்	பங்கு பற்றியோர்
கலைப் பீடம்	480	26	02	19	09	39	22
கல்விப் பீடம்	132	01	00	03	00	04	02
IIM	200	12	08	28	12	30	20
சட்டப் பீடம்	243	00	00	08	03	08	03
முகாமைத்துவ, நிதிப் பீடம்	422	08	01	05	01	07	04
மருத்துவப் பீடம்	200	00	00	02	00	01	00
தாதியப் பீடம்	84	02	02	02	01	03	03
விஞ்ஞானப் பீடம்	324	10	02	100	38	90	30
ஸ்ரீ பாளி வளாகம்	150	07	05	52	22	56	28
தொழில்நுட்பப் பீடம்	3ஆம் ஆண்டு 225	39	14	31	22	35	22
UCSC	100	03	00	02	00	06	04
கொ.ப. மொத்தப் பட்ட மாணவர்	**2596**	**109**	**34**	**252**	**139**	**279**	**138**
பிற பல்கலைக்கழகங்கள்		00	00	100	32	73	26
மொத்தப் பங்குபற்றல் (கொ.ப. & பிற பல்கலைக்கழகங்கள்)			**34**		**171**		**164**

2.28 பால்நிலைச் சமத்துவத்துக்கான நிலையம் (CEGE)

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பால்நிலைச் சமத்துவத்துக்கான நிலையம் பல்கலைக்கழகக் கல்விசார், கல்விசாராப் பணியாளர் மற்றும் மாணவர் மத்தியில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் பரஸ்பர மதிப்பையும் ஊக்குவிப்பதற்கான அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது.

மௌனம்காத்த ஒரு காலத்தின் பின்னர் 2020ஆம் ஆண்டு யூலையில் ஒரு பதில் பணிப்பாளர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2020 ஆகஸ்டில் CGE மீண்டும் அதன் நடவடிக்கைகளைத் தொடங்கியது. CGEஆல் நிறைவேற்றப்படும் நடவடிக்கைகள் ஒவ்வொரு பீடத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களைக்கொண்ட வழிநடத்தும் குழுவொன்றால் நடத்தப்படுவதனால் செப்ரெம்பர் முடிவளவில் வழிநடத்தும் குழு நியமிக்கப்பட்டது. அதன் பின்னர் CGE 2020க்கான அதன் முதலாவது வழிநடத்தும் குழுக் கூட்டத்தைத் துணைவேந்தரின் தலைமையில் நடத்தியது. அதில் அதன் குறிக்கோள்களும் சாத்தியமான எதிர்கால நடவடிக்கைகளும் கலந்தாராயப்பட்டன. அதன் பின்னர் வழிநடத்தும் குழு CGE உடன் தொடர்புடைய விடயங்களைக் கலந்தாராய்வதற்கு ஒழுங்காகக் கூடியது. அதற்கிணங்க 2020இல் பின்வரும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

- CGEக்குப் பொருத்தமான தகவல்களுடனும் வளங்கள் ஒதுக்கப்பட்டும் ஒரு வலைப்பக்கம் விருத்திசெய்யப்பட்டது (https://cmb.ac.lk/cge/)
- பாலியல் துன்புறுத்தலுக்கெதிரான கொழும்புப் பல்கலைக்கழகக் கொள்கையும் நடைமுறையும் செயற்படுத்துவதற்காகச் சிங்களத்திலும் தமிழிலும் பிறெயிலியிலும் மொழிபெயர்க்கக் கொடுக்கப்பட்டது.
- 2021க்கான செயற்றிட்டம் விருத்திசெய்யப்பட்டது.
- பாலியல் துன்புறுத்தலுக்கெதிரான கொழும்புப் பல்கலைக்கழகக் கொள்கையில் குறித்துரைக்கப் பட்டவாறு, பாலியல் துன்புறுத்தல் பற்றிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

2.29 புகையிலையை எதிர்ப்பதற்கான நிலையம் (CCT)

புகையிலையை எதிர்ப்பதற்கான நிலையம் (CCT)தான் புகையிலைக் கட்டுப்பாடு பற்றிய சட்டகச் சமவாயத்தின் (FCTC) உறுப்புரை 5.3இன்கீழ் கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தில் தாபிக்கப்பட்ட இலங்கையின் புகையிலை அவதானிப்புக் கூடமாகும். CCTஇன் குறிக்கோள், இலங்கையிலும் இப்பிராந்தியத்திலும் உறுப்புரை 5.3ஐச் செயற்படுத்தல் தொடர்பில் புகையிலைக் கைத்தொழில் நடவடிக்கைகளைக் கண்காணித்தல். புகையிலைக் கட்டுப்பாடு பற்றிய சட்டகச் சமவாயம் (FCTC) உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) 56ஆவது உலக சுகாதாரப் பேரவையால் 2003 மே மாதத்தில் கைக்கொள்ளப்பட்ட சர்வதேசச் சட்டத்தின்கீழான ஓர் ஒப்பந்தமாகும். 2005 பெப்ருவரியில் வலுவுக்கு வந்த FCTC 2019இல் இருந்தவாறு அதனை உறுதிப்படுத்திய 181 நாடுகளைச் சட்டப்படி பிணிக்கின்றது. உறுப்புரை 5.3 அதன் தரப்புகள் புகையிலைக் கைத்தொழிலின் வர்த்தக மற்றும் அதிகாரக் கும்பலிடமிருந்து அவற்றின் சுகாதாரக் கொள்கைகளைப் பாதுகாக்கவேண்டுமென்று தேவைப்படுத்துகின்றது.

CCT கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் (UCFM) ஒரு நிலையமாகத் தொழிற்படுகின்றது. CCTஇன் செயற்படுத்தும் பங்காளிகளில், மதுபானம், போதைமருந்துத் தகவல் நிலையம் (ADIC), புகையிலையும் மதுபானமும் பற்றிய இலங்கைத் தேசிய அதிகாரசபை (NATA), இலங்கை மருத்துவச் சங்கத்தின் (SLMA) புகையிலை, மதுபானம் மற்றும் சட்டவிரோத மருந்துகள் பற்றிய நிபுணர் குழு, உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கை நாட்டு அலுவலகம் என்பவை அடங்கும். இக்கருத்திட்டம் புகையிலைக் கட்டுப்பாட்டுக்கான சட்டகச் சமவாயச் செயலகத்தாலும் காசநோய்க்கும் நுரையீரல் நோய்க்கும் எதிரான சர்வதேச ஒன்றியத்தாலும் இயக்கப்படுகின்ற அதேவேளையில், புகையிலைக் கட்டுப்பாட்டு ஆராய்ச்சிக் குழு, பாத் பல்கலைக்கழகம் மற்றும் புகையிலைக் கட்டுப்பாட்டு ஆராய்ச்சிக்கும் கல்விக்குமான நிலையம், கலிபோர்னியா பல்கலைக்கழகம், சான் பிரான்சிஸ்கோ ஆகியவற்றால் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகின்றது.

2.30 பத்திரிகை எழுத்தாண்மை அலகு – கொ.ப.

பத்திரிகை எழுத்தாண்மை அலகு கலைப்பீடப் பீடாதிபதியின் அதிகாரத்தின்கீழ் செயற்படத்தக்கதாகக் கொழும்புப் பல்கலைக்கழகப் பேரவையால் 1991 பெப்ருவரியில் தாபிக்கப்பட்டது. 1992 மேயில் ஆசிய பவுண்டேசனுடனான கூட்டுழைப்பு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முதலாவது பட்ட மட்ட நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடக்கிவைத்தது. அதுதான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி இலங்கையிலும் முதலாவது பட்ட மட்ட நிகழ்ச்சித்திட்டம். பத்திரிகை எழுத்தாண்மைப் பட்டக் கல்விநெறிப் பாடவிதானம் பாடவிதான அபிவிருத்திக் குழுவால் 1991இல் வடிவமைக்கப்பட்டது. அக்குழு தவிசாளராக அன்றைய துணைவேந்தர் பேரா. ஜி.எல். பீரிஸ், கலைப்பீடப் பீடாதிபதி பேரா. எச்.என்.சி. பொன்சேகா, கலா. சரத் அமுனுகம, கலாகீர்த்தி திரு. எட்வின் ஆரியதாச, துறைபோன பத்திரிகை எழுத்தாளரும் ரூபவாஹினியின் முன்னாள் செய்திப் பதிப்பாசிரியருமான திரு. ஷவீந்திர பர்னாந்து, பேரா. திலக் ஹெட்டியாரச்சி, பேரா. ஜயதேவ உயன்கொட, பேரா. ஜே.பி. திசாநாயக்க, திரு. ரொமேஷ் பர்னாந்து (விரிவுரையாளர்) ஆகியோரை உள்ளடக்கியது.

1998இல் இவ்வலகில் செயல்முறை ஆக்கக்கூறுகளுடன் திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கற்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2004இல் கல்விநெறி அலகு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் துறையில் நவீன தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு முழுப் பாடத்திட்டமும் மீளாய்வுசெய்யப்பட்டது.

2.31 அரபு மற்றும் இஸ்லாமிய நாகரிக அலகு – கொ.ப.

அரபு மற்றும் இஸ்லாமிய நாகரிக அலகு தொடக்கத்தில் கலைப்பீடப் பீடாதிபதியின்கீழ் ஒரு பாடமாயிருந்தது. பின்னர் 2008இல் அரபுமொழி மற்றும் இஸ்லாமிய நாகரிகம் கலைப்பீடத்தின்கீழ் ஒரு சுயாதீனமான அலகாகத் தொடங்கப்படுவதற்குப் பல்கலைக்கழகம் அங்கீகாரம் வழங்கியது. இது அலகின் கல்விமான்களின் ஒராண்டு காலத் தொலைநோக்கினதும் போராட்டத்தினதும் விளைவாகவும் பல்கலைக்கழக நிர்வாக அலுவலர்களின் ஒத்துழைப்பாலும் நிதர்சனமாகியது. இப்போது அது நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கல்விசார், நெறிமுறை அடிப்படைகளில் நீடித்த சேவையை வழங்குவதில் வெற்றிகண்டுள்ளது. இவ்வலகின் கல்விசார் கட்டமைப்பு இப்போது மூன்று கல்விசார் பணியாளரை மட்டும் கொண்டுள்ளது.

2.32 தரவு விஞ்ஞான நிலையம் – கொ.ப.

தரவு விஞ்ஞானத் துறையில் கல்விமான்கள், மாணவர்கள் மற்றும் கைத்தொழிலுக்கிடையில் கூட்டுழைப்பை மேம்படுத்துவதற்காக 2016இல் தரவு விஞ்ஞான நிலையம் (CDS) விஞ்ஞானபீடப் புள்ளிவிவரவியல் துறையின்கீழ் தாபிக்கப்பட்டது. இந்நிலையம் தரவு விஞ்ஞானத்தில் அறிவைப் பரப்புவதற்காகவும் சமூகத்தின் மத்தியில் தரவு விஞ்ஞானம் பற்றிய தெரிநிலையை அதிகரிப்பதற்காகவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் பகிரங்க உரைகள் ஆகியவற்றை நடத்துகின்றது. மேலும் இந்நிலையம் உசாத்துணைக் கருத்திட்டங்கள் ஊடாக உள்நாட்டுக் கைத்தொழில்களுடன் கூட்டுப் பங்காண்மைகளை ஊக்குவித்து அவற்றுக்குத் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குகின்ற அதேவேளையில் மெய்யான உலகில் தரவு விஞ்ஞான உத்திகளின் பிரயோகத்தில் மாணவர்களினதும் கல்விமான்களினதும் திறன்களை மேம்படுத்துகின்றது.

த.வி. நிலையத்தால் நடத்தப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம்:

- த.வி.நி.இன் முகாமைத்துவச் சபைக்குப் புதிய உறுப்பினர்களை நியமித்தல்.

  முதலாவது பணிப்பாளரின் பதவிக்காலம் 2019 நவம்பரில் முடிவுக்கு வருவதனால் 2019 ஆகஸ்டில் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. கலா. சமீரா விஸ்வகுல 2020 யூலை முதல் புதிய பணிப்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். கவுன்சில் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2020 மேயில் முடிவுக்கு வருவதன்பேரில் புதிய பிரதிநிதிகளை நியமிக்கும்படி கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. புதிய உறுப்பினர்களின் நியமனம் 2020 ஆகஸ்டில் பூர்த்தியானது. புதிய பதவிக்காலத்துக்கான முகாமைத்துவச் சபையின் முதலாவது கூட்டம் 2020 ஒக்ரோபர் 27ஆந் தேதியன்று நடத்தப்பட்டது.

- **தரவு விஞ்ஞானத்தின் அடிப்படைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.**

  தரவு விஞ்ஞானத்தின் அடிப்படைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது தொகுதியினருக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் பீடாதிபதியின் அலுவலகச் சபை அறையில் 2020 பெப்ருவரி 6ஆந் தேதியன்று நடத்தப்பட்டது. இரண்டாவது தொகுதியினர் அவர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்தனர்.

- **தரவு விஞ்ஞானத் துறையில் கூட்டுழைப்பதற்காக ஹட்டன் நஷனல் வங்கியுடன் (HNB) புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடல்.**

  CDSக்கும் HNBக்குமிடையில் நடத்தப்பட்ட அனேகசுற்றுக் கலந்துரையாடல்களின் பின்னர் 2020 திசெம்பரில் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் ஹ.ந.வங்கிக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

2.33 கொழும்பு விஞ்ஞான, தொழில்நுட்ப மையம்

"மையம்" என்றறியப்படும் கொழும்பு விஞ்ஞான, தொழில்நுட்ப மையம் கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் கீழுள்ள உத்தரவாதம் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனி. அதன் எல்லா உறுப்பினர்களும் பீடத்தின் கல்விமான்களாவர். கம்பனி உறுப்புரைகள் பல்கலைக்கழகப் பேரவையாலும் ப.மா. ஆணைக்குழுவாலும் அங்கீகரிக்கப்பட்டவை. இக்கம்பனி 2013 செப்ரெம்பர் 26ஆந் தேதியன்று கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் பதிவுசெய்யப்பட்டது.

குறிக்கோள்கள்:

- ஆராய்ச்சி, அபிவிருத்தி, புத்தாக்கம், விஞ்ஞான சேவைகளும் அறிவும் மற்றும் தொழில்நுட்பக் கைமாற்றம் என்பவற்றினூடாக இலங்கையில் தயாரிப்பு மற்றும் சேவைக் கைத்தொழில்களையும் கமத்தொழிலையும் ஊக்குவித்தலும் அவற்றுக்குச் சேவையாற்றலும்.
- பல்கலைக்கழகச் சமூகத்தின் உறுப்பினர்கள் மத்தியில் தொழில்முயற்சியாண்மையை வளர்த்தல்.
- பொருளாதார வளர்ச்சியை இலக்காகக்கொண்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்களையும் உசாத்துணைகளையும் தொடங்குவதற்கான வாய்ப்புக்களை மேம்படுத்தல்.
- கம்பனியால் விருத்திசெய்யப்பட்ட புலமைச்சொத்து உரிமைகளைப் பெறுதலிலும் பாதுகாத்தலிலும் துணைபுரிதல்.

சுதேச தொழில்நுட்பங்களை நவீனமயப்படுத்தல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைக் கைமாற்றுதல் என்பவற்றினூடாகப் பல்கலைக்கழகச் சமூக அபிவிருத்தியில் பிரதான பங்கொன்றை வகிக்க முடியும். இவற்றின்மூலம் சமூகம் அத்தகைய அறிவையும் திறன்களையும் சுவீகரித்துப் பயன்படுத்துவதற்கான அதன் ஆற்றலை மேம்படுத்தலாம்.

ஆராய்ச்சி, புத்தாக்கம், வெளியீடுகளின் விவரம்

விடயம்	சமர்ப்பித்தவை
	2020
ஊ. ஏனையவை IP பாதுகாப்பு, தனிக்காப்புரிமை விண்ணப்பங்கள், ஆக்க உரிமைத் தாக்கீடு ஆதியன	03 உள்நாட்டுத் தனிக்காப்புரிமை 01 யுகே தனிக்காப்புரிமை 01 யுஎஸ்ஏ ஆக்கவுரிமை

3. நியமனங்களும் பணியாளர் பற்றிய தகவலும்

நியமனங்கள்

2020ஆம் ஆண்டின்போது கல்விசார், கல்விசார் ஆதரவு, நிருவாகம், நிருவாகமும் நிதியும் ஆகிய தரங்களில் மொத்தம் ஐம்பது புதிய நியமனங்கள் செய்யப்பட்டன.

கல்விசார் (முதுநிலை மட்டம்)	- 45
கல்விசார் ஆதரவு (மூன்றாம்நிலை மட்டம்)	- 05
நிருவாகம் மற்றும் நிதி (முதுநிலை மட்டம்)	- 00
பிற நிருவாகம் (முதுநிலை மட்டம்)	- 00
மொத்தம்	**- 50**

பணியாளர் மாற்றங்கள்

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 2020ஆம் ஆண்டின்போதான பதவி உறுதிப்படுத்தல்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஏனைய பணியாளர் மாற்றங்களைக் காட்டுகின்றது.

அட்டவணை II-01: பணியாளர் மாற்றங்கள்

நிகழ்வு	கல்விசார்	கல்விசார் ஆதரவு	நிருவாக, நிதி	நிருவாக (ஏனைய)
புதிய நியமனங்கள்	45	5	0	0
பதவி உறுதிப்படுத்தல்கள்	32	5	5	0
பதவியுயர்வுகள்	60	0	0	2
இடமாற்றங்கள்	2	0	0	0
சேவை நீடிப்பு	0	0	2	0
விடுவிப்பு	3	0	0	0
இளைப்பாறல்கள்	11	1	1	2
பதவி விலகல்கள்	5	1	1	0
பதவி வறிதாக்கல்	1	0	0	0
சேவை முடிவுறுத்தல்	1	0	0	0
இடைநிறுத்தல்கள்	0	0	0	0
ஏழாட்டை விடுப்பு	16	0	2	0
கல்வி விடுப்பு	23	1	0	0
கல்வி விடுப்பு நீடிப்பு	48	0	0	0
கருத்தரங்குகள்/மாநாடுகள்/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	71	0	8	0
விடுமுறை விடுப்பு	101	0	0	0
மருத்துவ விடுப்பு	15	0	0	0
அரைச் சம்பள விடுப்பு	0	0	0	0
சம்பளமற்ற விடுப்பு	16	0	2	0
ஏழாட்டை விடுப்பின் பின் வருதல்	16	0	0	0
கல்வி விடுப்பின் பின் வருதல்	19	0	0	0
விசேட விடுப்பு	6	0	0	0
சேவையிலிருந்து விடுவிப்பு	4	0	0	0
இறப்புகள்	1	0	0	0
மொத்தம்	**496**	**13**	**21**	**4**

பீடங்கள் மற்றும் நூலகங்களிலுள்ள கல்விசார் பதவியணி

வகை	சம்பள அளவு	அனுமதிக்கப்பட்ட பணிநிலை	தற்போதுள்ள பணிநிலை			வெற்றிடங்கள்
			பெண்	ஆண்	மொத்தம்	
முதுநிலை பேராசிரியர் (தலைவர்)	U AC 5 (I)	44	05	08	**13**	**27**
பேராசிரியர் (தலைவர்)	U AC 5 (II)		01	03	**04**	
முதுநிலை பேராசிரியர்	U AC 5 (I)	771	15	13	**28**	**145**
பேராசிரியர்	U AC 5 (II)		44	40	**84**	
இணை பேராசிரியர்	U AC 4		10	06	**16**	
முதுநிலை விரிவுரையாளர் (தரம் **I)**	U AC 3 (I)		52	60	**112**	
முதுநிலை விரிவுரையாளர் (தரம் **II**)	U AC 3 (II)		109	71	**180**	
முதுநிலை விரிவுரையாளர் (இடைநிலை) விரிவுரையாளர்**/** (உறுதிப்படுத்தப்படாத)	U AC 3 (III)		33	15	**48**	
விரிவுரையாளர்	U AC 3 (IV)		15	11	**26**	
விரிவுரையாளர் (தகுதிகாண்)	U AC 3 (IV)		93	39	**132**	
நூலகர்	U AC 5 (II)	01	01	-	**01**	**00**
பிரதி நூலகர்	U AC 4	01	01	-	**01**	**00**
முதுநிலை உதவி நூலகர் (தரம் **I)**	U AC 3 (I)	08	04	01	**05**	**01**
முதுநிலை உதவி நூலகர் (தரம் **II**)	U AC 3 (II)		02	-	**02**	
பிரதி நூலகர்	U AC 3 (IV)	10	06	03	**09**	**01**
மொத்தம்		**835**	**391**	**270**	**661**	**174**

பீடங்கள் மற்றும் நூலகத்திலுள்ள நிர்வாக, நிதி மற்றும் கல்விசார் உதவி பதவியணி

வகை	சம்பள அளவு	அனுமதிக்கப்பட்ட பணிநிலை	தற்போதுள்ள பணிநிலை			வெற்றிடங்கள்
			மொத்த பெண்கள்	மொத்த ஆண்கள்	மொத்தம்	
நிர்வாக ஊழியர்கள் மற்றும் நிதியியல் பதவியணி	U EX 3	47	01	01	**02**	**02**
	U EX 2		17	13	**30**	
	U EX 1		09	04	**13**	
ஏனைய நிர்வாக பதவியணி	U EX 2	28	01	03	**04**	**15**
	U EX 1		06	03	**09**	
வைத்திய உத்தியோகத்தர்கள்	U MO 2	01	00	01	**01**	**00**
	U MO 1	04	00	00	**00**	**04**
கல்விசார் உதவி பதவியணி	U AS 2	85	17	16	**33**	**39**
	U AS 1		08	05	**13**	

3.1 பீடங்கள் மற்றும் நூலகத்திலுள்ள கல்விசாரா பதவியணியின் விபரங்கள்

சேவை வகை	பதவியணி வகை	சம்பள அளவு	அனுமதிக்கப்பட்ட பணிநிலை	தற்போதுள்ள பதவியணி						நிரந்தர பணிநிலை வெற்றிடங்கள்	உண்மையான பணிநிலை வெற்றிடங்கள்
				நிரந்தரம்			ஒப்பந்தம்				
				M	F	T	M	F	T		
இரண்டாம் நிலை	தொழிநுட்ப பதவியணி	U-MN 4	**180**	11	22	33	0	0	0	43	42
		U-MN 3		0	0	0	0	0	0		
		U-MN 2		2	1	3	0	0	0		
		U-MN 1		0	0	0	0	0	0		
		U-MT 1		55	46	101	0	1	1		
இரண்டாம் நிலை	எழுதுநர் மற்றும் தொடர்புடைய பதவியணி	U-MN 4	**431**	14	42	56	0	0	0	67	62
		U-MN 3		17	13	30	3	2	5		
		U-MN 2		0	0	0	0	0	0		
		U-MN 1		65	214	278	0	0	0		
முதலாம் நிலை	முதலாம் நிலை எழுதுநர் மற்றும் தொடர்புடைய பதவியணி	U-PL 3	**507**	73	1	74	0	0	0	82	82
		U-PL 2		107	22	129	0	0	0		
		U-PL 1		202	20	222	0	0	0		
	மொத்தம்		**1118**	**546**	**381**	**926**	**3**	**3**	**6**	**192**	**186**

[இந்த பக்கமானது தேவை நோக்கம் கருதி விடுவிக்கப்படுகின்றது]

4. ஆராய்ச்சியும் ஆராய்ச்சி ஊக்குவிப்புச் செயற்பாடுகளும்

கொழும்புப் பல்கலைக்கழகம் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி நடத்துவதன்மூலம் ஆராய்ச்சியில் அதன் தனிச்சிறப்பைப் பேணிவந்தது. பெருந்தொகையான வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை சரிநிகரானோர் மீளாய்ந்த குறிப்பேடுகள், உண்ணாட்டு மற்றும் சர்வதேசக் குறிப்பேடுகள், பொழிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், விளக்க ஆராய்ச்சி ஏடுகள், முன்னிலைப்படுத்தல்கள், அறிவிப்புகள் ஆகியவற்றில் வெளியீடுகளை உள்ளடக்கும். அவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

பீடம்	**2018**	**2019**	**2020**
கலைப்பீடம்	298	272	116
கல்விப்பீடம்	25	40	27
பட்டக்கற்கைகள் பீடம்	51	56	05
சட்டப்பீடம்	30	84	16
முகாமைத்துவப் பீடம்	45	116	47
மருத்துவப் பீடம்	446	925	489
விஞ்ஞானப் பீடம்	195	366	304
தொழில்நுட்பப் பீடம்	101	105	59
தாதியப் பீடம்	09	20	05
மொத்தம்	**1200**	**1984**	**1068**

கல்வியறிவாளர்களுக்குப் போட்டிகரமான விண்ணப்பச் செயல்முறைகள் ஊடாக அரசாங்க மற்றும் வெளிநாட்டு நிதியுதவி கிடைப்பதாயிருந்தது. பல்கலைக்கழகம் அரசாங்க நிதிகளிலிருந்து ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி ஊக்குவிப்புச் செயற்பாடுகளுக்குமாக ரூ. 18.6 மில்லியனை ஒதுக்கியது. இந்நிதிகள் 33 சிறு மானியங்கள், 05 பயண மானியங்கள், 02 வெளிநாட்டு பீஎச்டி மானியம் ஆகியவற்றை வழங்குவதற்கும் சர்வதேச, உண்ணாட்டு மாநாடுகள் போன்ற பல்கலைக்கழக மற்றும் பீட ஆராய்ச்சி ஊக்குவிப்புச் செயற்பாடுகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்பட்டன.

வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கு 2020

வட்டி வருமானத்துக்கு மாற்றல் - து. வே. நிதி		11,860,744			(11,860,744)	-
வட்டி வருமானத்துக்கு மாற்றல் - UCDF நிதி		34,205,148			(34,205,148)	-
வட்டி வருமானத்துக்கு மாற்றல் - வரையறுக்கப்பட்ட நிதிகள்		28,447,022			(28,447,022)	
2019 திசெம்பர் 31இல் மீதி	**9,893,999,741**	**1,560,373,615**	**339,475,574**	**38,392,390,550**	**(2,274,225,099)**	**47,912,014,382**

	மூலதன மானியம்	ஒதுக்கங்கள், வரையறுத்த நிதி	கொடைகள், நன்கொடைகள்	சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	வரவு, செலவு	மொத்தம்
ஆண்டில் செலவிட்ட, செலவிடாத மூலதன மானியம்	2,271,789,785					2,271,789,785
நன்கொடைகளில் தேறிய அசைவு			58,033,692			58,033,692
சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கின் தேறிய அசைவு				101,179,458		101,179,458
காலத்துக்கான மிகை/(பற்றாக்குறை)					16,639,832	16,639,832
நிதி மாற்றல்கள்					(306,568,867)	(306,568,867)
நிதிகளில் தேறிய அசைவு		46,238,215			(46,238,215)	-
மேலங்கி வாடகைக் கட்டண நிதிக்கு கணக்கிற்கு மாற்றம்		-				-
ஒப்பந்த மீறல் நிதிக்கு மாற்றம்		32,262,524			(32,262,524)	-
வட்டி வருமானத்துக்கு மாற்றம் - து. வே. நிதி		6,858,584			(6,858,584)	-
வட்டி வருமானத்துக்கு மாற்றம் -UCDF நிதி		18,880,705			(18,880,705)	-
வட்டி வருமானத்துக்கு மாற்றம் வரையறுக்கப்பட்ட நிதிகள்		23,834,208			(23,834,208)	-
2020 திசெம்பர் 31இல் மீதி	**12,165,789,526**	**1,688,447,851**	**397,509,266**	**38,493,570,008**	**(2,692,228,369)**	**50,053,088,282**

10.1 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

1. பொதுவான தகவல்கள்

1.1 சட்டரீதியான வடிவமும் அமைவிடமும்

கொழும்புப் பல்கலைக்கழகம் 1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான நிருவாகக் கட்டடம் கொலிஜ் ஹவுஸ், இல. 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு 03இல் அமைந்துள்ளது.

2020 திசெம்பர் 31இல் இருந்தவாறானதும் குறித்த தேதியில் முடிவடைந்ததுமான ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதி நிலைக் கூற்றுகள், நிதி நிறைவேற்றக் கூற்றுகள், உரிமைப் பங்கில் மாற்றக் கூற்றுகள், காசுப்பாய்வுக் கூற்றுகள் என்பன 2021 மார்ச் 10ஆந் தேதியன்று பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

கொழும்பு விஞ்ஞான, தொழில்நுட்ப மையம் உத்தரவாதத்தின்மூலம் வரையறுக்கப்பட்டதாக 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் முதல் அட்டவணைக்கு அமைவாக நிறுவப்பட்டது.

1.2 நிதிசார் காலப்பகுதி

இதன் நிதிசார் காலப்பகுதி 2020 சனவரி 01 தொடக்கம் திசெம்பர் 31ஆந் தேதி வரையான தாகும்.

1.3 வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட தேதி

நிதிக் கூற்றுகள் 2021 மார்ச் 10ஆந் தேதியன்று பேரவையினால் வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப் பட்டன.

பல்கலைக்கழகத்தால் பின்பற்றப்படும் எல்லாக் கணக்கீட்டுக் கொள்கைகளும் முன்னைய ஆண்டில் பின்பற்றப்பட்டனவற்றுக்கு முரண்படாத வகையில் பிரயோகிக்கப்படுகின்றன. நடப்பாண்டுத் தொகைகளைச் சமர்ப்பிக்கையில் தேவையான விடத்து ஒப்பீட்டுத் தொகைகள் மாற்றங்களுக் கிணங்கச் சீராக்கப்பட்டுள்ளன.

1.4 முதன்மை செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

(அ) ஒப்புதலளிக்கப்பட்ட எந்தவொரு கற்றல் துறையிலும் மாணவர்களை அனுமதித்தலும் அறிவுறுத்தல் வழங்கலும்.

(ஆ) வெவ்வேறு கற்றல் துறைகளில் தேர்ச்சி யடைந்தவர்களைக் கண்டறியும் நோக்கில் பரீட்சைகளை நடாத்துதல்.

(இ) ஒத்த இலக்குகளைக்கொண்ட பல்கலைக் கழகங்களுடன் ஆசிரியர் மாணவர் அறிஞர்களைப் பரிமாற்றிக் கொள்வதனூடாக இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பிற பல்கலைக் கழகங்கள் அல்லது நிறுவகங்களுடன் ஒத்துழைப்பாகச் செயற்படல்.

(ஈ) பட்டப்பின் கற்கைகளை வழங்கி இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவகங்களுடன் பல்கலைக்கழகம் தீர்மானிக்கக்கூடிய விதத்தில் இணைந்து செயற் படல்.

(உ) பல்கலைக்கழகத்தில் அல்லது ஏதேனும் அங்கீகாரம்பெற்ற நிறுவகத்தில் ஒப்புதலளிக்கப் பட்ட கற்கைநெறிகளைத் தொடர்ந்தவர்களுக்கும் அல்லது துணைவிதிகள்மூலம் பரிந்துரைக்கப்பட்ட பல்கலைக்கழகப் பரீட்சைகளில் சித்திபெற்றவர் களுக்கும் பட்டங்கள், டிப்ளோமாக்கள், ஏனைய கல்விசார் தகைமைகளை வழங்கல்.

1.5 நிறுவனத் தொடர்ச்சி

பல்கலைக்கழகமானது, தொடர்ந்தியங்கும் நிறுவன மொன்றாகத் தன்னையும் தனது ஆற்றலையும் மதிப்பிட்டுள்ளதோடு முன்னறியக்கூடிய தூரத்திற்கு எதிர்காலத்தில் தொடர்ந்தும் இயங்குவதற்கான வளங்களைக் கொண்டிருப்பதையிட்டுத் திருப்தி யடைகிறது. இன்னும், ஓர் நிறுவனத் தொடர்ச்சி யாகத் தொடர்ந்தும் இயங்குவதற்கான பல்கலைக் கழகத்தின் ஆற்றல்மீது ஐயப்பாட்டினைத் தோற்றுவிக்கக்கூடிய முக்கிய நிச்சயமற்ற தன்மைகள்பற்றிப் பேரவை எதுவும் அறியாது. அதனடிப்படையிலேயே நிதிக் கூற்றுகள் நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுகள் தயாரிப்பதற்கான அடிப்படை

1.6.1 இணக்கக் கூற்று

பல்கலைக்கழக நிதிக் கூற்றுகள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங் களுக்கு (SLPSAS) அமைவாக வரலாற்றுக்கிரய மரபின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்நிதிக் கூற்றுகளானவை, நிதிநிலைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப் பாய்வுக் கூற்று, உரிமைப் பங்கு மாற்றக் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகிறன.

நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப் பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. வேறுவகையில் கூறப்பட்டாலன்றி, நிதிக்கூற்றுகளில் கூறப்பட்ட எல்லாக் காலப் பகுதிகளுக்கும் இக்கொள்கைகள் நிலைமாறாது பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுகள் பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள், கொழும்பு விஞ்ஞான, தொழில்நுட்ப மையம் ஆகியவற்றின் நிதி நிலையை உள்ளடக்குவதில்லை.

1.6.2 அளவீட்டு அடிப்படை

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்புடைய குறிப்புகளின்கீழ் நியாயமான பெறுமதி தொடர்பில் செய்யப்பட்ட வெளிப்படுத்தல்கள் தவிர கணக்குகள் அட்டுறு அடிப்படையில் வரலாற்றுக்கிரய மரபின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.6.3 ஒப்பீட்டுத் தகவல்

நடப்புக் காலப்பகுதியின் நிதிக் கூற்றுகளின் விளக்கத்தை அதிகரிப்பதற்கும் ஒப்பீட்டுத் தன்மையை மேம்படுத்துவதற்குமாக முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சகல விடயங்கள் தொடர்பிலும் எண்ணிக்கை, விளக்கம், விவரணம் என்பவற்றை உள்ளடக்கிய ஒப்பீட்டுத் தகவல் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படுகிறது.

1.6.4 பொருண்மையும் திரளலும்

ஒரேமாதிரியான பொருள்களின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதிக்கூற்றுகளில் தனியாகச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. வேற்றுமையான தன்மை அல்லது தொழிற்பாடுகொண்ட பொருள்களில் முக்கிய மானவை தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.6.5 ஈடுசெய்தல்

சொத்துகள், பொறுப்புகள், வரவு செலவுகள் என்பன இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களால் வேண்டப்பட்டாலோ அல்லது அனுமதியளிக்கப்பட்டாலோவன்றி ஈடுசெய்யப் பட்டிருக்கவில்லை.

1.6.6 நிதிநிலைக் கூற்றுத் தேதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

அறிக்கையிடற் தேதிக்குப் பிந்திய முக்கிய எல்லா நிகழ்வுகளும் பரிசீலனை செய்யப்பட்டுத் தேவையானவிடத்து நிதிக்கூற்றுகளில் பொருத்த மான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்து கைகள் செய்யப்படுகின்றன.

1.6.7 தொழிற்படு, சமர்ப்பித்தல் நாணய அலகு

பல்கலைக்கழக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப் பட்டிருக்கும் பொருள்கள் பல்கலைக்கழகம் (தொழிற்படு நாணயத்தைத்) தொழிற்படுத்தும் முதன்மைப் பொருளியற் சூழலின் நாணய அலகைக் கொண்டே அளவிடப்படுகின்றன. இந் நிதிக் கூற்றுகள், பல்கலைக்கழகத்தின் தொழிற்படு, சமர்ப்பித்தல் நாணய அலகாக விளங்கும் இலங்கை ரூபாயிலேயே (ரூ.) தயாரித்துச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

1.6.8 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்

அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும், அக்கொடுக்கல் வாங்கல் தேதியில் நிலவுகின்ற செலாவணி வீதப்படி அறிக்கையிடல் நாணய அலகான இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகின்றன.

1.6.9 மட்டந்தட்டுதல்

நிதிக் கூற்றுகளிலுள்ள தொகைகள், இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களால் அனுமதிக்கப்பட்டவையாக சுட்டிக்காட்டப்பட்டாலே யன்றி கிட்டிய ரூபாய்க்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

1.6.10 முக்கிய கணக்கீட்டு மதிப்பீடுகளும் கருத்து முடிவுகளும்

இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங் களுக்கமைவான நிதிக் கூற்றுகளின் தயாரிப்பு சமர்ப்பிப்பு என்பனவற்றுக்கு முகாமைத்துவமானது கணக்கீட்டுக் கொள்ளைகளின் பிரயோகத்தையும் சொத்துகள், பொறுப்புகள், வருமானம், செலவினங்கள் என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் தீர்மானங்கள், மதிப்பீடுகள், எடுகோள்கள்களை எடுக்கவேண்டி யுள்ளது. உண்மையான பெறுபேறுகள் பயன்படுத் தப்பட்ட இம்மதிப்பீடுகள், தீர்மானங்களிலிருந்து வேறுபடக்கூடும்.

நிதிக் கூற்றுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைகளிற் தாக்கம் செலுத்தும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதில் மதிப்பீடுகள், நிச்சயமற்றதன்மை, விமர்சனரீதியான கருத்து முடிவுகள் என்பவற்றின் முக்கியமான பகுதிகள் பற்றிய தகவல்கள் வருமாறு:

(அ) வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம்

ஊழியர்களின் ஓய்வூதிய பயன் திட்டத்தின் செலவு திட்டமிடப்பட்ட யூனிட் கிரெடிட் (பி.யூ.சி) முறையைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகிறது. இத்தகைய முறை வட்டி விகிதம், சம்பள உயர்வு விகிதம் மற்றும் ஓய்வூதிய வயது தொடர்பான அனுமானங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கு கிறது. திட்டத்தின் நீண்டகாலத் தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத் தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை.

(ஆ) கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளில் மாற்றங்கள்

கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்ப்புகளில் ஏதேனும் மாற்றங்கள் நிதிக் கூற்றுகளுக்கான தொடர்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

1.6.11 நிலைபேறுடைமை வெளிப்படுத்துகை

SDG கொத்தணி		SDGகளை அடைவதற்கான நடவடிக்கை	ரூபாயில் முதலீடு
இலக்கு 1 இலக்கு 2	வறுமை இல்லை பட்டினி பூச்சியம் **(சமூகத்தின் பொருளாதார நல்வாழ்வு)**	அ) மகாபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதி 6095 பட்ட மாணவர்களுக்குப் புலமைப்பரிசுகளை வழங்கியது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 615 பட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவுதொகைகளை வழங்கியது. பல்கலைக்கழகம் பட்ட மாணவர்களுக்கு 173 புலமைப்பரிசுகளை வழங்கியது. ஆ) ப.க.பீ. பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் எல்லாம் இக்கொத்தணியை அடைவதற்குப் பங்களிக்கின்றன. அவை 881 பட்டதாரிகள் அவரவரது வேலைத்தலங்களில் 2020ஆம் ஆண்டில் SDG இலக்குகளை அடைவதற்குப் பங்களிப்பதற்கு அவர்களுக்கு வலுவளிக்கின்றன.	ரூ. 34.7 மில்லியன் ரூ. 25.3 மில்லியன் ரூ. 2.7 மில்லியன் ரூ. 15.5 மில்லியன்
இலக்கு 3	சுகாதாரமும் நல்வாழ்வும் **(எல்லாப் பங்கீடு பாட்டாளர்களினதும் சுகாதாரமும் நல்வாழ்வும்)**	அ) பணியாளர் மருத்துவ நலன்புரித் திட்டத்தின் கீழ் 980 ஊழியர்கள் பயனடைந்தனர். ஆ) சில அவசரமான சுகாதாரக் கரிசனைகளில் கவனஞ்செலுத்துகின்ற குறிப்பான இரு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளன. அவையாவன: பிணிஆய்வு உளவியலில் எம்பில் மற்றும் உளச்சமூக உளவளத் துணையில் முதுமாணிக்கு இட்டுச் செல்கின்ற பட்டப்பின் டிப்ளோமா. உலகத் தொற்று நிலைமையில் இவ்விரு கல்வி நெறிகளும் குறிப்பாக நாட்டுக்கு உதவுகின்றன. மேலும் 2020இல் எல்லாப் பணியாளர்களுக்கும் மாணவருக்கும் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டன. இ) **மாநகர திண்மக்கழிவுக் கருத்திட்டம் (MSWM)** இக்கருத்திட்டம் பொரலஸ்கமுவ நகர சபை, தெஹிவளை-கல்கிசை மாநகர சபைகளுக்கு நிலைபேறான, ஒருங்கிணைந்த, சுற்றுவட்டக் கழிவு முகாமைத்துவ முறைகளை அறிமுகப் படுத்துகின்றது. முதன்மைத் தரவுகளைத் திரட்டுவதற்கு 2020இல் குடியிருப்பாளர்களின் கழிவு முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய கள மதிப்பீடொன்று நடத்தப்பட்டது.	ரூ. 21.2 மில்லியன் பணியாளரினதும் மாணவரினதும் சுகாதாரமும் நல்வாழ்வும் ரூ. 2 மில். ரூ. 1,547,020
இலக்கு 4	தரமான கல்வி	அ) ஒரு வெற்றிகரமான நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுக்குத் தேவையானது மக்கள் பொருளாதாரத்தைத் தூண்டக்கூடியதாகக் கண்ணியமான வேலைவாய்ப்புக்கள். அதற் கிணங்கப் பல்கலைக்கழகம் 2020ஆம் ஆண்டில் 9 பீடங்களிலும் ஒரு வளாகத்திலும் நாட்டிலுள்ள 10,872 இள வயதினருக்கு உயர் கல்வியை வழங்கியது. ஆ) இளவயதினருக்குத் தரமான கல்வியை வழங்கும்பொருட்டுப் பல்கலைக்கழகம் சர்வதேச ஒத்துழைப்பினதும் கூட்டுழைப்பினது மூடாக ஆசிரியர் பயிற்சிக்கு வசதியளித்ததன் மூலம் நல்ல தகைமைபெற்ற ஆசிரியர்களைக் கணிசமாக அதிகரித்தது. இ) இளவயதினருக்குத் தரமான கல்வியை வழங்கும்பொருட்டுப் பல்கலைக்கழகம் புதிய கட்டடங்களைச் சேர்த்தல், இப்போதுள்ள வசதிகளைத் திருத்துதல், ஆய்வுகூட வசதிகளை முன்னேற்றுதல் ஆகியவற்றின் மூலம் அதன் உட்கட்டமைப்பு வசதிகளைக் கணிசமான அளவில் அதிகரித்தது.	ரூ. 5,22,642 மாணவரொருவருக்கு ஆராய்ச்சி வேலைக்கும் செயலாற்றலைக் கட்டியெழுப்புவதற்கும் ரூ. 122.1 மில்லியன் புதிய கட்டடத்துக்கு ரூ. 2,209.6 மில். கட்டடத் திருத்தம், பராமரிப்புக்கு ரூ. 92.3 மில்லியன்

		ஈ) 2020இல் கொவிட் 19 உலகத் தொற்றின் நிமித்தமான தடங்கல்களுக்கு விட்டுக்கொடாது வழங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தர நியமங்களைப் பேணுவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல். திட்டமிட்டவாறு QA நடவடிக்கைகள் தொடரப் பட்டன. இவ்வாண்டில் இணைப்பாளர்களுக்கு 30 QA செயலமர்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டன.	ப.க.பீ. கல்விநெறிகளின் தர உத்தரவாத வேலைக்கு ரூ. 100,000
		உ) வெப்பமண்டலக் கம-உயிர்ச்சூழல் முறைமை களில் மீட்டெழுச்சியைக் கட்டியெழுப்பு வதற்குத் துறைகளுக்கிடைப்பட்ட அறிவைப் பரப்புகின்ற மேடையின் அபிவிருத்தி (BRITAE): இக்கருத்திட்டம் பங்காளிகள் மத்தியில் கம-உயிர்ச்சூழல் முறைமையின் மீட்டெழுச்சி தொடர் பான அறிவைப் பகிர்ந்துகொள்ளவும் இலங்கையில் கம-உயிர்ச்சூழல் முறைமைகளின் மீட்டெழுச்சி யைக் கட்டியெழுப்புவதற்குப் புதிய உபாயங்களை விருத்திசெய்யக்கூடியதாகப் புதிய அறிவை அவற்றுடன் காக்கவும் உதவுகின்றது. இந்நிகழ்ச் சித்திட்டங்கள் உயிர்ச்சூழல் முறைமை மீட் டெழுச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளை வலுப் படுத்த உதவுவதன்மூலம் கருத்திட்ட முடிவில் தொழில்வல்லுனர்கள் ஒரு முதுமாணிப் பட்ட நிகழ் சித்திட்டத்தின் பாடவிதானத்தை விருத்திசெய்வதற் கான அவர்களின் ஆற்றலை அதிகரிக்கும். அறிவு இடைவெளி அளப்பரியதென்றும் அது வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சாதகமாகச் சரிந் திருக்கிறதென்றும் வளர்முக நாடுகள் வெப்ப மண்டலக் கம-உயிர்ச்சூழல் முறைமைகளின் மீட்டெழுச்சியைக் கட்டியெழுப்பும் துறையில் ஆராய்ச்சிக்கும் புத்தாக்கத்துக்கும் தேவையான நிதி வளங்களும் மனித வளங்களும் இல்லாமல் போராடுகின்றனவென்றும் BRITAE கூறுகின்றது. அவ்வாறான அறிவை உள்நாட்டில் உருவாக்கு வதற்கு அவர்களின் ஆற்றலை முன்னேற்றவும் உயர் கல்வித்துறையில் ஆற்றலைக் கட்டியெழுப் புவதற்க அவ்வறிவை உறிஞ்சுவதற்குமான தேவையில் கவனஞ்செலுத்தப்படுகின்றது.	ரூ. 931,958
		ஊ) ரஷ்யா, இலங்கை பங்களாதேஷ் பல்கலைக் கழகங்களில் கல்வியை, சக்தி வினைத் திறனுடனும் சுவாத்திய மாற்றத்துடனும் தொடர்புடைய நுகர்வோர் நடத்தையுடன் ஒருங்கிணைத்தல் (BECK): BECKஇன்கீழ் கொ.ப. இலங்கைச் சூழமைவில் சுவாத்திய மாற்றக் கல்வி பற்றிய தெரிநிலையை அதிகரிக்கும் நோக்குடன் நகரமயமாக்கல், சுவாத்திய மாற்றம், இடப்பெயர்வு மற்றும் மீளக் குடியமர்த்தலில் சான்றிதழ் கல்விநெறியொன்றை வழங்குகின்றது. இக்கல்விநெறி உலகளாவிய, பிராந்தியரீதியான மற்றும் இலங்கைச் சூழமைவுக ளிலிருந்து புள்ளிவிவரங்களின் பயன்கொண்டு எவ்வாறு நவீன உலகில் அதிகரிக்கின்ற நகர மயமாக்கல் ஒரு முக்கிய இயல் நிகழ்ச்சியாகின்ற தென வெளிப்படுத்துகின்றது. அது எவ்வாறு இயற்கை அனர்த்தங்கள், நகர அபிவிருத்தி மற்றும் சுவாத்திய மாற்றம் நகர வாசிகளிலும் வாழ்வாதா ரங்களிலும் முக்கிய மாற்றங்களுக்கு இட்டுச்செல் கின்றதென்பதை ஆராய்கின்ற அதேவேளையில், அனர்த்தத்தால் தூண்டப்படும் இடப்பெயர்வு, அபிவிருத்தியால் தூண்டப்படும் இடப்பெயர்வு மற்றும் மீள் குடியேற்றம், சுவாத்திய மாற்ற அசைவு ஆகிய கருத்துப்படிவங்களைப் பயன்படுத்தி இம்மாற்றங்களின் விளைவுகளை ஆராய்கின்றது.	ரூ. 814,888

இலக்கு 5	பால்நிலைச் சமத்துவம்	அ) ப.க.பீ.இல் நிகழ்ச்சித்திட்டங்களையும் மதிப்பீடு களையும் நடத்துவதில் பால்நிலைப் பாகுபாட்டுச் செயலெதுவும் அனுமதிக்கப்படவில்லை (அல்லது அவதானிக்கப்படவில்லை). மேலும் பால்நிலை மற்றும் மகளிர் கற்கைகளில் முதுமாணிக்கு இட்டுச்செல்கின்ற பட்டப்பின் டிப்ளோமா பால் நிலைச் சமத்துவத்தில் கூடிய சாதனைக்காக கொள்கை வகுப்பவர்களுக்கும் ஏனைய பங்காளர் களுக்கும் அறிவூட்டுகின்றது. ஆய்வாண்டில் 14 பட்டதாரிகள் சேர்ந்துகொண்டனர். ஆ) **MSWM:** இக்கருத்திட்டம் கழிவுத் தொழிலாளர், முறைசாராக் கழிவு சேகரிப்போர் மற்றும் முகாமையாளர்கள் மத்தியில் பால் நிலைச் சமநிலையை நெருக்கமாக ஆய்வுசெய்கின்றது. 2020இல் இந்நோக்கத்துக்காக DMMC மற்றும் BUCஇல் 10 முக்கிய தகவலளிப்பவர்களுக்கான நேர்காணல்கள் நடத்தப்பட்டன.	தெரிநிலையை அதிகரிக்க ரூ. 700,000
இலக்கு 6	சுத்தமான நீரும் கழிவகற்றலும்	அ) பசுமை நடைமுறைகள் பற்றிய அறிவை உருவாக்கவும் பகிர்ந்துகொள்ளவும் சிறிய, நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு (SMEகள்) பசுமைக் கையேடு தயாரிக்கப்பட்டது.	AHEAD மானியம் ரூ. 10 மில்லியன்
இலக்கு 7	செலவுதாங்கக் கூடிய, தூய்மையான சக்தி	அ) SMEகளில் விரயமற்ற, பசுமை நடைமுறைகள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வடிப்படையிலான தரவுகள் பகுப்பாயப்பட்டு, வெளியீட்டுக்காக ஆராய்ச்சிக் கட்டுரைகளாகத் தொகுக்கப்பட்டன. (இவை 2021இல் இடம்பெறுகின்ற கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.) ஆ) **MSWM:** இக்கருத்திட்டம் மேல் மாகாணத்தில் கழிவிலிருந்து சக்தி நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறனையும் பயனுறுதியையும் ஆய்வு செய்கின்றது.	பல்துறை ஆராய்ச்சியின் கொழும்புக் குறிப்பேடு (SLJO) ரூ. 1.2 மில்லியன் வருடாந்த ஆராய்ச்சி அமர்வுகள்
இலக்கு 8	கண்ணியமான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்	அ) SME உரிமையாளர்களுக்கு விரயமற்ற, பசுமை யான நடைமுறைகளூடாகக் கண்ணியமான, வினைத் திறனுள்ள தயாரிப்புப் பற்றி அறிவூட்டு வதற்காக ஒரு தொடரான செயலமர்வுகள் நடத்தப்பட்டன. ஆ) **MSWM:** இக்கருத்திட்டம் முறைசாராக் கழிவுத் தொழிலாளரை ஒன்றில் முறைசார்ந்த கழிவு முகாமைத்துவ முறைமையுடன் ஒருங்கிணைப் பதை இன்றேல் சமமான சம்பளமும் உரிமைகளும் கொண்ட, கழிவு முகாமைத்துவத்தின் முக்கிய பங்கீடுபாட்டாளர்களாக ஒப்புக்கொள்வதற்கான சாத்தியத்தை ஆராய்கின்றது. இது "இலங்கையில் கழிவு முகாமைத்துவக் கட்டமைப்பு-01" என்ற தொழிற்படு கட்டுரைக்காக ஆராயப்பட்டது.	AHEAD மானியம் ரூ. 10 மில்லியன்
இலக்கு 9	கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு **(SME துறையில் கவனஞ்செலுத்தி)**	அ) SMEகளில் விரயமற்ற, பசுமை நடைமுறைகள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வடிப்படையிலான தரவுகள் பகுப்பாயப்பட்டு, வெளியீட்டுக்காக ஆராய்ச்சிக் கட்டுரைகளாகத் தொகுக்கப்பட்டன. (இவை 2021இல் இடம்பெறுகின்ற கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.)	பல்துறை ஆராய்ச்சியின் கொழும்புக் குறிப்பேடு (SLJO) ரூ. 1.2 மில்லியன் வருடாந்த ஆராய்ச்சி அமர்வுகள்
இலக்கு 10	குறைக்கப்பட்ட சமத்துவமின்மை (பங்கீடுபாட்டாளர் சமூகம்)	அ) ப.க.பீ.இல் நிகழ்ச்சித்திட்டங்களையும் மதிப்பீடு களையும் நடத்துவதில் பால்நிலைப் பாகுபாட்டுச் செயலெதுவும் அனுமதிக்கப்படவில்லை (அல்லது அவதானிக்கப்படவில்லை). மேலும் பால்நிலை மற்றும் மகளிர் கற்கைகளில் முதுமாணிக்கு இட்டுச்செல்கின்ற பட்டப்பின் டிப்ளோமா பால் நிலைச் சமத்துவத்தில் கூடிய சாதனைக்காக கொள்கை வகுப்பவர்களுக்கும் ஏனைய பங்காளர்களுக்கும் அறிவூட்டுகின்றது. ஆய்வு ஆண்டில் 14 பட்டதாரிகள் சேர்ந்துகொண்டனர்.	தெரிநிலையை அதிகரிக்க ரூ. 700,000

இலக்கு 11	நிலைபேறான நகரங்களும் சனசமூகங்களும்	அ) பிராந்திய அபிவிருத்தி, திட்டமிடலில் முதுமாணி அபிவிருத்திக் கற்கைகளின் முதுமாணி 2020இல் 96 பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். **ஆ) MSWM:** இக்கருத்திட்டம் பொரலஸ்கமுவ நகர சபை, தெஹிவளை-கல்கிசை மாநகர சபைகளுக்கு நிலைபேறான, ஒருங்கிணைந்த, சுற்றுவட்டக் கழிவு முகாமைத்துவ முறைகளை அறிமுகப்படுத்து கின்றது. தெரிவுசெய்த அமைவிடங்களின் கழிவு நடைமுறைகளையும் கழிவு முகாமைத்துவத் தையும் கண்காணிப்பதற்கு முதன்மைத் தரவு களைத் திரட்டும்பொருட்டு 2020இல் குடியிருப் பாளர்களின் கழிவு முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய கள மதிப்பீடொன்று நடத்தப்பட்டது. **இ) கட்டப்பட்ட சூழலின் கண்ணோட்டத்தில் அனர்த்தம் மற்றும் மோதலினால் தூண்டப்பட்ட வெகுசன இடம்பெயர்வுகளைத் தொடர்ந்து சனசமூகங்களை மீளக் கட்டியெழுப்புவதில் திறன்களை விருத்திசெய்தல் அல்லது அறிவு இடைவெளிகளை நிரப்புதல் (REGARD கருத்திட்டம்):** இக்கருத்திட்ட நோக்கம் கேகாலை மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் தெரிவுசெய்த அமைவிடங்களில் கட்டப்பட்ட சூழலின் கண்ணோட்டத்தில் அனர்த்தம் மற்றும் மோதலினால் தூண்டப்பட்ட வெகுசன இடம் பெயர்வுகளைத் தொடர்ந்து சனசமூகங்களை மீளக் கட்டியெழுப்புவதில் திறன்களை விருத்திசெய்தல். அனர்த்தம் மற்றும் மோதலினால் தூண்டப்பட்ட வெகுசன இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து கட்டப்பட்ட சூழலின் கண்ணோட்டத்தில் விருந்தோம்பும் மற்றும் இடம்பெயர்ந்த சனசமூகங்களைக் கட்டியெழுப்புவதில் சிறந்த நடைமுறைகள் பற்றிய விதப்புரைகளைக் கொண்ட வழிகாட்டற் குறிப்பொன்று 2020இல் வெளியிடப்பட்டது.	தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களில் கற்பித்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் செலவிட்ட மொத்தத் தொகை ரூ. 2.5 மில்லியன் ரூ. 396,815
இலக்கு 12	பொறுப்புள்ள நுகர்வும் உற்பத்தியும்	அ) SME உரிமையாளர்களுக்கு விரயமற்ற, பசுமை யான நடைமுறைகளூடாகக் கண்ணியமான, வினைத்திறனுள்ள தயாரிப்புப்பற்றி அறிவூட்டு வதற்காக ஒரு தொடரான செயலமர்வுகள் நடத்தப்பட்டன.	AHEAD மானியம் ரூ. 10 மில்லியன்
இலக்கு 13	சுவாத்திய நடவடிக்கை **(SME களில் கவனஞ்செலுத்தி)**	அ) SME உரிமையாளர்களுக்கு விரயமற்ற, பசுமை யான நடைமுறைகளூடாகக் கண்ணியமான, வினைத் திறனுள்ள தயாரிப்புப் பற்றி அறிவூட்டு வதற்காக ஒரு தொடரான செயலமர்வுகள் நடத்தப்பட்டன.	AHEAD மானியம் ரூ. 10 மில்லியன்
இலக்கு 14 இலக்கு 15	நீரின்கீழ் வாழ்க்கை நிலத்தின்மீது வாழ்க்கை	சூழல் முகாமைத்துவ முதுமாணி	தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களில் கற்பித்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் செலவிட்ட மொத்தத் தொகை ரூ. 850,000
இலக்கு 16	சமாதானமும் நீதியும் உறுதியான நிறுவனங்கள்	மனித உரிமைகளில் நிறைவேற்று டிப்ளோமா மனித உரிமைகளில் முதுமாணி மனித உரிமைகளில் பட்டப்பின் டிப்ளோமா முரண்பாடு, சமாதானக் கற்கைகளில் முதுமாணி 2020இல் 205 பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்	தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களில் கற்பித்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் செலவிட்ட மொத்தத் தொகை ரூ. 2 மில்லியன்
இலக்கு 17	இலக்குகளை அடைவதற்குக் கூட்டுப் பங்காண்மைகள்	கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் கூட்டுப் பங்காண்மை மற்றும் அரசாங்க, தனியார் கூட்டுப் பங்காண்மைகளுக்குப் புரிந்துணர்வு உடன்படிக்கைகள்	பல்கலைக்கழக நிதி ரூ. 42 மில்லியன் CCIS நிதி ரூ. 4.2 மில்லியன்

1.7 அறிக்கையிடும் காலப்பகுதியில் இடம்பெறும் நிகழ்வுகள்

2020 தொடக்கம் முதல் கொவிட்-19 தொற்றுப் பரவல் எமது தொழிற்பாட்டுக்கும் மாணவர்கள், வழங்குனர்கள் மற்றும் ஏனையோர் போன்ற எமது முக்கிய பங்கீடுபாட்டாளர்களுக்கும் தடங்கல்களை ஏற்படுத்தியது. அவர்கள் எதிர்நோக்கிய சிரமங்களைப் பல்கலைக்கழகம் புரிந்துகொண்டு சவாலான காலம் பூராவும் அவர்களுக்கு ஆதர வளிப்பதறகு நடவடிக்கைகளை எடுத்தது.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

கொவிட்-19 தொற்றுக்குப் பதிலளிப்பான பல்கலைக் கழகத்தின் முன்னுரிமையானது, ஊழியர்களையும் மாணவர்களையும் உள்ளடக்கிய எமது பங்கீடு பாட்டாளர்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாயிருந்தது. சுகாதார ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதற்கு அரசாங்கம் விதித்த கட்டுப்பாடுகளின் நிமித்தம் பல்கலைக் கழகம் பரீட்சைகளையும் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் பிற குறுகிய கல்விநெறி களையும் குறைக்கவேண்டியிருந்தது. அத்தகைய சூழமைவில் பல்கலைக்கழகம் அதன் பங்கீடு பாட்டாளர்களுக்குப் பெறுமதிகூட்டிய சேவையை வழங்கும்பொருட்டுக் கூடிய டிஜிரல் பணியை நோக்கி நகர்ந்தது.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான சுருக்கம்

2.1 நடப்புச் சொத்துகள்

நிதிநிலைக் கூற்றுத் திகதியிலிருந்து ஓராண்டினுள் அறவிடப்படவுள்ளவை நிதிநிலைக் கூற்றில் நடப்புச் சொத்துகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

2.1.1 காசும் காசுக்குச் சமமானவையும்

கையிலுள்ள காசு, வங்கி மீதிகள் என்பன காசும் காசுக்குச் சமமானவையும் என்பதில் அடங்கும்.

2.1.2 பட்டோலைகளும் இருப்புக்களும்

பட்டோலைகள் கிரயம், தேறிய கைவரக்கூடிய விலைமதிப்பு ஆகியவற்றில் எது குறைந்ததோ அதில் காட்டப்படுகின்றன. கிரயமானது பொதுவில் முதலில் வந்தது முதலில் போகும் என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன், அது பட்டோலைகளைக் கையகப்படுத்துவதிலும் இப்போதுள்ள நிலைக்கும் அமைவிடத்துக்கும் அவற்றைக் கொண்டுவருவதற்கும் உறப்பட்ட செலவினத்தையும் உள்ளடக்குகின்றது.

பல்கலைக்கழகத்தின் பட்டோலை எழுது பொருள்கள், இரசாயனங்கள், நுகரக்கூடியவை, மருந்து இனங்கள், பராமரிப்புப் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

2.1.3 வருமதிகள்

ஒப்பந்தங்கள், முறிகளின் மீறலின் நிமித்தம் 31.12.2020இல் இருந்தவாறு ஊழியர்களிடமிருந்து ரூ. 35 மில்லியன் தொகை வருமதியாயுள்ளது. அவர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

2.2 நடப்பிலற்ற சொத்துகள்

2.2.1 ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம்

காணிகள், கட்டடங்கள், ஆய்வுகூட, கற்பித்தல் உபகரணங்கள், பொருத்திகள், துணைக்கருவிகள், நூலகப் புத்தகங்கள், பருவ இதழ்கள், மோட்டார் வாகனங்கள், மேலங்கிகள், ஏனைய சொத்துகள் என்பவை அரசாங்க மானியம், ஆராய்ச்சி மானியங்கள், உள்ளே உருவாக்கப்பட்ட நிதிகள், உலக வங்கிக் கருத்திட்டங்கள், நன்கொடைகள் ஆகியவற்றின்மூலம் ஈட்டப்பட்ட உருப்படிகளை உள்ளடக்குகின்றன.

தொழில்நுட்பப் பீடத்தை நிர்மாணிக்க அரசாங் கத்தால் வழங்கப்பட்ட ஹோமாகம, பிட்டிபன, மகஹேனவத்தவிலுள்ள நிலத்தின் உரிமையைப் பெறுவதற்காக, 'யுடிஏ'க்கு 'ரூ .731 மில்லியனைச் செலுத்தப் பல்கலைக்கழகம் கோரப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு இத்தொகையைச் செலுத்த உடன்பட்டுள்ளது.

(அ) அங்கீகாரத்துக்கான அடிப்படையும் அளவீடும்

ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் என்பவை உருப்படியுடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிறுவனத்துக்குப் பாயக்கூடியதாகவும் உருப்படியின் செலவை நம்பக்கூடியமுறையில் அளவிடக்கூடியதாகவும் உள்ள சாத்தியத்தின்பேரில் அங்கீகரிக்கப் படுகின்றன.

ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்கள் அனைத்தும் தொடக்கத்தில் கிரயத்தில் கூறப்பட்டு அதன் பின்னர் திரண்ட தேய்மானமும் ஏதேனும் குறைபாட்டு இழப்புகளும் கழித்த கிரயத்தில் அளக்கப்படுகின்றன. திருத்த மற்றும் பராமரிப்புச் செலவு உறப்பட்டவாறு நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி, நிகழ்வுகளால் அல்லது சூழ்நிலைகளில் மாற்றங்களால் அப்பெறுமதியை அறவிடமுடியாதென்று காட்டுகின்றபோது குறைபாட் டுக்காக மீளாயப்படுகின்றன.

(ஆ) தொடக்க அங்கீகாரம்

தனிப்பட்ட இனமொன்றின் கிரயம் ரூ. 2,500ஐ விடக் குறைந்ததாயின், உபகரணம் கொள்வனவாண்டில் பதிவழிக்கப்படுகின்றது. ஏனைய எல்லா உபகரணமும் இயல்பின் அடிப்படையில் மூலதன மாக்கப்படுகின்றது. உபகரணம் உருப்படியான தாகவும் ஓராண்டிலும் கூடிய ஆயுட் காலத்தையும் கொண்டிருந்தால் அது மூலதனமாக்கப்படுகின்றது. ஒரு சொத்தின் ஆயுட்காலம் 4 முதல் 20 வரையான ஆண்டு வீச்சைக்கொண்ட 08 வகுதிகளினுள், அதன் வகுதியில் தங்கியுள்ளது

(இ) இப்போதுள்ள ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களின் பிற்பட்ட செலவினம்

உருப்படியான நிலையான சொத்துக்கள்மீது உறப்பட்ட செலவினம் அது உறப்பட்ட காலத்தில் நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அறவிடப் படுகின்றது. எனினும் பின்வரும் அளவுகோல்களில் ஒன்றை அது பூர்த்திசெய்யுமிடத்து அது மூலதன மாக்கப்பட்டுப் பொருத்தமான அடிப்படையில் தேய்மானமடைகின்றது.

1. நிலையான சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பின்னர் அதிகரித்துள்ளது.
2. சொத்தின் ஆற்றல் அதிகரிப்பு.
3. விளைபயனின் தரம் நீடுறுதியாக முன்னேறுதல் அல்லது தொழிற்பாட்டுச் செலவு குறைதல்.
4. திருத்தம், பராமரிப்பின்மூலம் உறுதிப்படுத்தப் பட்டதற்கு அப்பால் சொத்தின் ஆயுட்காலம் குறிப்பிடத்தக்களவு நீடித்தல்.

(ஈ) மீள்விலைமதிப்பீட்டு மாதிரி

தொடக்க அங்கீகாரத்தின் பின்னர் நம்பகமாக நியாய மதிப்பை அளவிடக்கூடிய கீழ்க்காணும் சொத்து, பொறித்தொகுதி, உபகரண வகுப்புகள் மீள்மதிப்பீட்டுத் தொகையில் கொண்டுசெல்லப் படுகின்றன. மீள்விலைமதிப்பீட்டுத் தேதியில் பின்னரான திரள் தேய்மானம், திரள் குறைபாட்டு இழப்புகள் என்பன கழிக்கப்பட்டதனால் அது நியாயப் பெறுமதியாகும்: காணிகள், கட்டடங்கள், மோட்டார் வாகனங்கள், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், விளையாட்டு உபகரணங்கள்.

(உ) தேய்மானம்

ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் ஆகிய வகைகளின் தேய்மானம் அவை பயன்பாட்டுக்குக் கிடைத்த தேதியிலிருந்து மதிப்பிடப்பட்ட ஆயுட் காலம்வரை ஒரு நேர்கோட்டு முறையில் நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அங்கீகரிக்கப் படுகின்றது. காணிகள் தேய்மானம் பெறுவதில்லை. மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்காலம் பின்வருமாறு:

விவரம்	மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம்
1. கட்டடங்கள்	20 ஆண்டுகள்
2. தளபாடம், உபகரணம்	10 ஆண்டுகள்
3. ஆய்வுகூட, கற்பித்தல் உபகரணம்	5 ஆண்டுகள்
4. பொருத்திகளும் துணைக்கருவிகளும்	10 ஆண்டுகள்
5. நூலகப் புத்தகங்கள், பருவ இதழ்கள் மேலங்கிகள்	5 ஆண்டுகள்
6. மோட்டார் வாகனங்கள்	5 ஆண்டுகள்
7. மென்பொருள் பொதி	5 ஆண்டுகள்
8. விளையாட்டுப் பொருள்கள்	4 ஆண்டுகள்

பயன்படுத்திய காலத்தின் அடிப்படையில் கொள்வனவு ஆண்டிலிருந்து விற்பனை ஆண்டு வரை தேய்மானம் வழங்கப்படுகின்றது.

(ஊ) குத்தகை – நிதிக் குத்தகை

நியதிகளின்படி சொத்துரிமையின் எல்லா இடர்களையும் நேர்பயன்களையும் கணிசமான அளவில் பல்கலைக்கழகம் பொறுப்பேற்கின்ற குத்தகைகள் நிதிக் குத்தகைகளாக வகைப் படுத்தப்படுகின்றன. தொடக்கத்தில் ஆதனம், பொறித்தொகுதி, உபகரணத்தின் கீழான குத்தகைச் சொத்து அதன் நியாயமான விலை மதிப்பீட்டிலும் குறைந்தபட்சக் குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியிலும் எது குறைந்ததோ அதற்குச் சமமான ஒரு தொகையில் அளவிடப்படுகின்றது. தொடக்க அங்கீகாரத்தின் பின்னர் அச்சொத்துக்கு ஏற்புடைய கணக்கீட்டுக் கொள்கைக்கிணங்க அது கணக்கில் கொள்ளப்படுகின்றது.

நிதிக் குத்தகைகளின்கீழான குறைந்தபட்சக் குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிச் செலவுக்கும் தீர்க்கப்படாத பொறுப்புக் குறைப்புக்குமிடையில் பங்கீடு செய்யப்படுகின்றன. நிதிச் செலவு பொறுப்பின் எஞ்சிய மீதியின்மீது நிலைமாறாத ஒழுங்கான வீத வட்டியை உருவாக்கக்கூடியதாகக் குத்தகைக் காலத்தின்போதான ஒவ்வொரு காலப்பகுதிக்கும் ஒதுக்கப்படுகின்றது.

ஆய்வாண்டில் பல்கலைக்கழகம் ரூ. 2.6 மில்லியனைக் குத்தகை வாடகையாகச் செலுத்தியது.

(எ) வளவுகளின் பராமரிப்பு

பல்கலைக்கழகம் பராமரிப்புத் திட்டமொன்றைக் கொண்டுள்ளது. அத்திட்டம் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டுக் காணியில் தொடர்ந்து நடைபெறும் பராமரிப்பின் அடிப்படையாக அமைகின்றது. பராமரிப்புச் செலவு நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அறவிடப்படுகின்றது.

2.2.2 நடைபெறும் மூலதன வேலை

நடைபெறும் மூலதன வேலை, குறைபாட்டு இழப்புகள் கழித்த கிரயத்தில் கூறப்படுகின்றது. இவை மூலதனமாக்கப்படுவதற்குக் காத்திருக்கின்ற ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் என்பவற்றின் நிருமாணத்தில் நேரடியாக உறப்பட்ட மூலதன இயல்புடைய செலவுகள். நடைபெறும் மூலதன வேலை, அது பயன்பாட்டுக்குக் கிடைப்பதாயுள்ளபோது, அதாவது பல்கலைக் கழகத்தால் கருதப்பட்டமுறையில் தொழிற்படக் கூடியதாகத் தேவையான நிலைமைகளுடன் அதன் அமைவிடத்தில் உள்ளபோது, ஆதனம், பொறித் தொகுதி அல்லது உபகரணத்தில் பொருத்தமான சொத்து வகுதிக்கு மாற்றப்படும்.

மருத்துவ பீடத்துக்குப் பதினேழுமாடிக் கட்டடத்தின் நிருமாணம்

18/2071/824/026ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம்

மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட சித்த நிலையில் உள்ள நாணயக் கடிதத்தினதும் திறைசேரியால் மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்ட கடன் உத்தரவாதக் கடிதத்தினதும் பிணைக்கெதிராக இலங்கை வங்கி ஒப்பந்தக்காரரான சன்கென் கன்ஸ்டிரக்ஷன்ஸ் (பிரை) லிமிரெட்டுக்கு ரூ. 4,541,698,546 க்கான தவணைக் கடன் வசதி யொன்றை அங்கீகரித்தது.

தவணைக் கடனின் நியதிகளும் நிபந்தனைகளும் பின்வருமாறு:

1. **வட்டி வீதம்:** AWPLR+2% p.a. (வட்டி வீதம்) ஈராண்டுக்கொருமுறை நிலவுகின்ற AWPLR அடிப்படையில் திருத்தப்படும்.
2. **காலம்:** 26.08.2019 முதல் 3 ஆண்டுச் சலுகைக் காலம் அடங்கலாகப் பதினைந்து ஆண்டுகள்.
3. **மீளச்செலுத்துதல்:** சலுகைக் காலம் அடங்கலாக ஈராண்டுக்கொருமுறை வட்டியும் சலுகைக் காலத்தின் பின்னர் ஈராண்டுக்கொருமுறை மூலதனமும் செலுத்தப்படுவதற்கு.

   ஈராண்டுக்கொருமுறை உரிய தேதியில் வட்டியையும் மூலதனத்தையும் திருப்பிச் செலுத்துவதற்கு நிதி அமைச்சிடமிருந்து வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடு கிடைக்கப் பெறுதலை உயர்கல்வி அமைச்சு உறுதி செய்தல் வேண்டும்.
4. **தவணைக் கடனின் செலவளிப்பு:** கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருக்கு உசாத்துணையாளரால் (அரச பொறியியற் கூட்டுத்தாபனம்) சான்றுப்படுத்தப்பட்ட தொடர்புடைய விலைப்பட்டியல்களுடன் ஒப்பந்தகாரரால் (சன்கென் கன்ஸ்டிரக்ஷன்ஸ் (பிரை) லிமிட்.) இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ் வழங்கப்படுதலின்மீது.

உசாத்துணையாளரால் வழங்கப்பட்ட இடைக் காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்களின் பிரகாரம் 2020ஆம் ஆண்டில் எம்எஸ். சன்கென் கன்ஸ்டிரக்-ஷன்ஸ் (பிரை) லிமிரெட்டுக்கு ரூ. 837.5 மில்லியன் செலுத்தப்பட்டது. பயன்படுத்திய ரூ. 2,092.9 மில்லியன் கடன் தொகைக்கும் இக்கொடுப் பனவுக்காக உயர் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப் பட்ட நிதிகளுக்கும் 31.12.2020இல் இருந்தவாறு வட்டியாக ரூ. 152.27 மில்லியனை மக்கள் வங்கி அறவிட்டது.

2.2.3 தொட்டுணர முடியாச் சொத்துகள்

கணினி மென்பொருள்

வாங்கிய கணினி மென்பொருள் உரிமங்கள் கையகப்படுத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் ஏற்படும் செலவுகளின் அடிப்படையில் முதலீடு செய்யப்படுகின்றன. இந்தச் செலவுகள் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனைக் காலமான ஐந்து (5) ஆண்டுகளின் தவணைமுறையில் தீர்க்கப்படுகின்றன.

கணினி மென்பொருள் நிரல்களைப் பராமரிப்பதுடன் தொடர்புடைய செலவுகள் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன. பல்கலைக்கழகத்தால் கட்டுப்படுத்தப்படும் அடையாளம் காணக்கூடிய மற்றும் தனித்துவமான மென்பொருள் தயாரிப்பு களின் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புடைய செலவுகள் பின்வரும் அளவுகோல்களைப் பூர்த்தி செய்யும்போது அருவமான சொத்துகளாக அங்கீகரிக்கப்படுகின்றன:

1. மென்பொருள் தயாரிப்பை முடிக்கத் தொழில் நுட்ப ரீதியாகச் சாத்தியமானது, இதனால் அது பயன்பாட்டிற்கு கிடைக்கும். முகாமையினர் மென்பொருள் தயாரிப்பை முடித்து அதைப் பயன்படுத்த விரும்புகின்றனர்.
2. மென்பொருள் தயாரிப்பைப் பயன்படுத்துவதற் கான திறன் உள்ளது.
3. மென்பொருள் தயாரிப்பு எதிர்காலப் பொருளாதார நன்மைகளை எவ்வாறு உருவாக்கும் என்பதை நிரூபிக்க முடியும்.
4. மென்பொருள் விருத்தியை முடிக்க மற்றும் தயாரிப்பைப் பயன்படுத்த போதுமான தொழில் நுட்ப, நிதி மற்றும் பிற வளங்கள் உள்ளன.

5. மென்பொருள் தயாரிப்பு அதன் வளர்ச்சியின் போது கூறப்படும் செலவுகளை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும்.

மென்பொருள் உற்பத்தியின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படும் நேரடியாகக் கூறப்படக்கூடிய செலவுகளானவை மென்பொருள் மேம்பாட்டு ஊழியர் செலவுகள் மற்றும் தொடர்புடைய மேந்தலைகளின் பொருத்தமான பகுதி ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

ஐந்து (5) ஆண்டுகளை விஞ்சாதிருக்கும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனைக் காலத்தில், அருவமான சொத்துகளாக அங்கீகரிக்கப்பட்ட செலவு தவணை முறையிற் தீர்க்கப்படுகிறது. மென்பொருளின் உருவாக்கம் தொடர்பான செலவுகள் மென்பொருள் பயன்பாட்டிற்குத் தயாராகும் வரை நடைபெறும் மூலதன வேலையில் கொண்டுசெல்லப்படுகின்றது.

2.3 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

2.3.1 நடப்புப் பொறுப்புக்கள்

நிதிநிலைக் கூற்றில் நடப்புப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புகள் நிதிநிலைக் கூற்றுத் தேதியிலிருந்து ஓராண்டினுள் கொடுப்பனவு செய்யவேண்டியவை. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லாப் பொறுப்புக் களும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

2.3.2 கடன் வழங்குநர்களும் அட்டுறுச் செலவுகளும்

கடன் வழங்குநர்களும் அட்டுறுச் செலவுகளும் நியாய மதிப்பில் அளவிடப்பட்டுப் பின்னர் பயனுறுதிமிக்க வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றியமைக்கப்பட்ட செலவில் அளவிடப் பட்டுள்ளது.

2.3.3 பிற்போடப்பட்ட வருமானம்

பல மாத காலங்களுக்கு மேலாகக் கற்பிக்கப்படும் கற்கைநெறியின் தொடக்கத்தில் கற்கைநெறிகள் மற்றும் பாட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விலைப்பட்டியல்கள் உருவாக்கப்படும்போது பிற்போடப்பட்ட வருமானம் ஏற்படுகிறது. பிற்போடப்பட்ட வருமானம் கற்கைநெறி வழங்கப் பட்ட காலம் வரைக்கும் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதோடு மீதமுள்ள கற்கைநெறி காலத்திற்குக் கூறப்படும் நிலுவை வருமானம் அங்கீகரிக்கப்படும்வரை நிதி நிலை அறிக்கையின் பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகிறது.

2.3.4 ஓய்வூதிய நன்மைகளுக்கான ஏற்பாடு

ஊழியர் நன்மைகள்

(அ) ஊழியர் வரையறுக்கப்பட்ட நன்மை திட்டம் - பணிக்கொடை

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தைத் தவிர, வேலைவாய்ப்புக்குப் பிந்திய நன்மைத் திட்டமாகும். திட்டமிடப்பட்ட யூனிட் கிரெடிட் (பி.யூ.சி) முறையைப் பயன்படுத்தி ஒரு சுயாதீனமான காப்பீட்டுக் கணிப்புமூலம் வரையறுக்கப்பட்ட நன்மை கணக்கிடப்படுகிறது. வரையறுக்கப்பட்ட நன்மைக் கடன்களின் தற்போதைய மதிப்பானது நன்மைகள் செலுத்தப்படும் நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும் தொடர்புடைய பொறுப்பின் விதிமுறைகளுக்குத் தோராயமாக முதிர்ச்சிக்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளதுமான வட்டி விகிதங்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்பரிமாற்றங்களைத் தள்ளுபடி செய்வதன்மூலம் தீர்மானிக்கப்படுகிறது. வரையறுக் கப்பட்ட பயன் கடன்களின் தற்போதைய மதிப்பு தள்ளுபடி வீதம், எதிர்கால சம்பள உயர்வு மற்றும் இறப்பு விகிதங்கள் பற்றிய பல அனுமானங்களைப் பயன்படுத்தி ஒரு செயற்பாட்டு அடிப்படையில் தீர்மானிக்கப்படும் பல காரணிகளிற் தங்கியுள்ளது. இந்தத் திட்டங்களின் நீண்டகாலத் தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத் தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை.

ஒவ்வோர் அறிக்கைத் தேதியிலும் அனைத்து எடுகோள்களும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. அதன்படி, ஊழியர் நன்மைப் பொறுப்பு 31 திசம்பர் 2020 நிலவரப்படி காப்பீட்டுக் கணிப்பீட்டு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது. பிற நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அவை முழுமையாக நிகழும் காலகட்டத்தில் காப்பீட்டுக் கணிப்பீட்டு ஆதாயங்கள் மற்றும் இழப்புகளை அங்கீகரிப்பதே பணிக்கொடைக்கான பல்கலைக் கழகக் கணக்கீட்டுக் கொள்கை.

ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு

வரையறுக்கப்பட்ட காப்பீட்டுக் கணிப்பு மற்றும் முகாமைத்துவ ஆலோசனை எனும் (தனியார்), தகுதிவாய்ந்த கணிப்பாளர்கள் வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டத்தில் 31-12-2020 தேதியின்படியான பணிக்கொடை பற்றிய இயல்பான மதிப்பீட்டைச் செய்துள்ளனர். ஓய்வூதியச் சலுகைகளின் கிரயத்தைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் எடுகோள்கள் பின்வருமாறு:

பணியாளர் புரள்வு	
கல்விசார் பணியாளர்	1% ஆ.ஒ.
கல்விசாராப் பணியாளர்	0.50% ஆ.ஒ.
கழிவு வீதம்	10% ஆ.ஒ.
சம்பள அதிகரிப்பு வீதம்	
கல்விசார் பணியாளர்	7% ஆ.ஒ.
கல்விசாராப் பணியாளர்	5% ஆ.ஒ.
ஓய்வுபெறும் வயது	
கல்விசார் பணியாளர்	65 ஆ
கல்விசாராப் பணியாளர்	60 ஆ

வரையறுக்கப்பட்ட கடப்பாடுகள்

2020 திசெம்பர் 31இல் இருந்தவாறு மதிப்பீட்டில் ஊகிக்கப்பட்ட கழிவு வீதத்தினதும் சம்பள உயர்வு வீதத்தினதும் முக்கியத்துவத்தை விளக்குவதற்குப் பின்வரும் கழிவு வீதங்களையும் சம்பள உயர்வு வீதங்களையும் ஊகித்து எல்லா ஊழியர்களுக்கும் கூருணர்வுப் பகுப்பாய்வொன்று நடத்தப்பட்டது.

மாறுவது மாற்றப்பட்டது (ஏனைய எல்லா ஊகங்களும் மாறாது தொடர்கின்றன)	வரையறுத்த நன்மைக் கடப்பாட்டின் நடப்புப் பெறுமதி ரூ.
கழிவு வீதத்தில் ஒரு சதவீத (+1%) புள்ளி அதிகரிப்பு	1,395,809,084
கழிவு வீதத்தில் ஒரு சதவீத (-1%) புள்ளி வீழ்ச்சி	1,660,640,298
சம்பள உயர்வில் ஒரு சதவீத (+1%) புள்ளி அதிகரிப்பு	1,660,938,795
சம்பள உயர்வில் ஒரு சதவீத (+1%) புள்ளி வீழ்ச்சி	1,393,489,952

நடப்புச் சேவைச் செலவு

கல்விசார் பணியாளர்	ரூ. 68,033,107
கல்விசாராப் பணியாளர்	ரூ. 23,150,084
	ரூ. 91,183,191

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி

ஊழியர்கள் உரிய சட்டங்கள் மற்றும் விதிமுறை களுக்கு ஏற்ப ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புகள் மற்றும் ஊழியர்களின் நம்பிக்கை நிதிப் பங்களிப்புகளுக்குத் தகுதியுடையவர்கள். நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் இவை ஒரு செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பல்கலைக் கழக ஊழியர் சேமலாப நிதி, பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு முறையே 7%, 8% மற்றும் 3% ஊழியர்களின் மொத்த ஊதியத்தைப் பல்கலைக்கழகம் வழங்குகிறது.

2.3.5 எதிர்பாராப் பொறுப்புக்கள்

சட்ட நடவடிக்கைகள் எடுப்பதனால் எழுகின்ற பொறுப்புகள் தொடர்பில் கணக்குகளில் ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31இல் இருந்தவாறு மதிப்பிடப்பட்ட மொத்தப் பொறுப்புத்தொகை ரூ. 600 மில்லியன் ஆகும்.

2.4 நிதி, மானியங்கள், ஒதுக்கங்களைப் பெற்றுக்கொண்டமைக்கும் அவற்றின் பயன்பாட்டுக்குமான கணக்கு

குறிப்பிட்ட வளர்ச்சி நடவடிக்கைகள், மாணவர் செயற்பாடுகள், அறக்கொடை ஆகியவற்றுக்காகப் பல்கலைக்கழகம் பல்வேறு மானியங்களைப் பெற்றது. நிதிகள், மானியங்கள் மற்றும் ஒதுக்கங்கள் என்பவை கட்டுப்பாடற்ற நிதிகள், வரையறுக்கப்பட்ட நிதிகள் மற்றும் அறக்கொடை நிதிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.1 கட்டுப்பாடற்ற நிதிகள்

கட்டுப்பாடற்ற நிதிகள் பேரவையின் விருப்பப்படி பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தக்கூடியவை மற்றும் பல்கலைக்கழகத்தின் பொதுவான நோக்கங்களை மேம்படுத்துவதற்காகப் பேரவையால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் குறித்தொதுக்கப்பட்ட நிதிகள். குறித்தொதுக்கப் பட்ட நிதிகளின் வரவில் பல்கலைக்கழகம் ஒதுக்கீடு செய்வது நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அறவிடப்படுகிறது. சம்பந்தப்பட்ட நன்கொடையாளர் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அல்லது நன்கொடையாளரின் ஒப்புதலுடன் நிதிகள் வரையறுக்கப்பட்ட நிதியில் இருந்து கட்டுப்பாடற்ற நிதிக்கு மாற்றப்படுகின்றன.

செயலாற்று நியதிகள் எதுவும் இல்லாதவிடத்து, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகள் மற்றும் நன்கொடைகள் என்பன அவை பெறப்பட்ட நேரத்தில் நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் / ஒதுக்கங்கள்

ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பல்கலைக் கழகத்தால் குறித்தொதுக்கப்பட்ட கட்டுப்பாடற்ற நிதிகள் குறித்தொதுக்கப்பட்ட நிதிகளாக அடையாளம் காணப்படுகின்றன. பல்கலைக்கழகம் பின்வரும் நிதிகளைக் குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் / ஒதுக்கங்கள் / பேரேட்டுக் கணக்குகள் எனக் கணக்கிட்டுள்ளது, மேலும் அத்தகைய நிதிகளின் நோக்கம் பின்வருமாறு விவரிக்கப் பட்டுள்ளது:

நிதிகள்

1. கொழும்புப் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதி
2. துணைவேந்தர் நிதி
3. பீட அபிவிருத்தி நிதி

4. துறை அபிவிருத்தி நிதி
5. சுகாதாரக் காப்பீட்டு நிதி
6. நூலக அபிவிருத்தி நிதி
7. நிர்வாக நிதி

2.4.2 வரையறுக்கப்பட்ட நிதிகள்

அடையாளம் காணப்பட்ட திட்டம் அல்லது செயற்பாட்டில் பயன்படுத்த மானியங்கள் / நன்கொடைகள் பெறப்பட்டால், அத்தகைய நிதிகள் வரையறுக்கப்பட்ட நிதிக் கணக்கில் வைக்கப்பட்டு, அடையாளம் காணப்பட்ட திட்டத்தின் செலவினங்களுடன் பொருந்தக்கூடியதாக நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றுக்கு மாற்றப்படுகிறது. பயன்படுத்தப்படாத நிதிகள் அந்தந்த நிதிக் கணக்குகளில் வைக்கப்பட்டு, அவை தேவைப்படும் காலம்வரை நிதி நிலை அறிக்கையில் திரட்டப்பட்ட நிதி மற்றும் ஒதுக்கங்களின்கீழ்ச் சேர்க்கப் படுகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட மானியச் செலவினம் பெறப்பட்ட வருமானத்தைவிட அதிகமாக இருந்தால் மற்றும் மீதமுள்ள தொகை பெறப்படும் என்பதில் உறுதியாக இருந்தால், அத்தகைய தொகைகள் நிதி நிலை அறிக்கையில் வருமதிகள்மூலம் அங்கீகரிக்கப்படுகின்றன.

2.4.3 அறக்கட்டளை நிதிகள்

சொத்துக்கள் அறக்கட்டளையாகப் பெறப்பட்டால், அவை பயன்படுத்தப்படாதவிடத்து, அத்தகைய சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருமானம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டு வருமானமாகப் பயன்படுத்தப்படலாம்.

சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கை வேறுவிதமாக ஏற்பாடுசெய்யா விட்டால், மேலேயுள்ள ஒவ்வொரு பிரிவுகளின் கீழும் கிடைக்கும் நிதியில் இருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானம் மற்றும் பிற ஆதாயங்கள் பொருத்தமான நிதிகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. நிதிகளின் நோக்கங்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட தேர்வுகளின் சிறந்த செயல்திறனுக்காகப் பாடப் பரிசுகள் மற்றும் தகுதிப் பரிசுகளை வழங்குதல்.

2.5 உரிமைப் பங்கு

2.5.1 மூலதன மானியம்

மானியம் பெறப்பட்டு அதனைப் பாதிக்கும் அனைத்து நிலைமைகளுக்கும் இணக்கம் காணப்படும் என்ற உறுதிமொழி காணப்படுமிடத்து அரச மானியங்கள் அவற்றின் நியாய மதிப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகப் பயன்பாட்டுக்கென நன்கொடை யளிக்கப்பட்ட தேய்மானத்துக்குட்படாத நிலையான சொத்துகள் தவிர, நன்கொடையளிக்கப்பட்ட உருப்படியான நிலையான சொத்துகள் விலைமதிப்பிடப்பட்ட நன்கொடைக் கணக்குக்கும், பற்றாக்குறை பொருத்தமான நிலையான சொத்து வகுதிக்கும் கொண்டுசெல்லப்படுகின்றன. நன் கொடையாக வழங்கப்பட்ட தேய்மானத்துக்குட் படாத நிலையான சொத்துகள் வருமானத்துக்கு அல்லது செலவினத்துக்கு எடுத்துச்செல்லப் படுகின்றன.

2.5.2 மீண்டுவரும் மானியம்

மீண்டுவரும் மானியங்கள் நிதிச் செயல் நிறைவேற்றக் கூற்றுகளில் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. நிலையான சொத்தினது புனரமைப்புச் செலவு மற்றும் கட்டுமானத்துக்கும் புதிய வேலைக்குமான மூலதன மானியங்கள் தேவையானவிடத்து நடைபெறும் வேலையாக அல்லது மூலதனச் சொத்துக்களாக அங்கீகரிக்கப் படுகின்றன.

2.5.3 குறிப்பான நோக்கங்களுக்காக ஒதுக்கப்படும் நிதிகள்

பொதுவாகப் பல்கலைக்கழக நிதிநிலைக் கூற்றில் செயற்பாடுகளின் செலவைக் காட்டிலும் வருவாய் மிகையாகையின் அவை பொதுவான நோக்கங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியின்கீழ் கணக்குக் காட்டப்படுகின்றன. பொதுவான நோக்கங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி எனும்போது அது பீடங்கள், துறைகளின் திட்டமிட்ட தொழிற்படு செயற்பாடுகள், பல்கலைக்கழகத்தின் சுய நிதியிடற் செயற்பாடுகள் என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை உள்ளடக்கும்.

2.6 நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்று

2.6.1 வருவாயை அங்கீகரித்தல்

வருவாயானது, பொருளாதார நன்மைகள் பல்கலைக்கழகத்திற்குப் பாயக்கூடியதாகவும் கொடுப்பனவு வழங்கப்பட்ட காலத்தைக் கருத்திற்கொள்ளாது நம்பக்கூடியமுறையில் வருவாயை அளவிடக்கூடியதாகவும் உள்ள சாத்தியத்தின்பேரில் அங்கீகரிக்கப்படுகின்றது. வருவாய் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் கீழ்க்காணும் குறிப்பான அங்கீகார அடிப்படைகள் எட்டப்படவேண்டும்:

1. கற்கைநெறிகளிலிருந்து வருமானம்

கட்டணம் அறவிடும் கற்கைநெறிகளின் வருமானம் குறிப்பிட்ட கால அடிப்படையில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகிறது.

2. கருத்தரங்குகள்/ செயலமர்வுகளின் வருமானம்

நிகழ்வை நடத்தியவுடன் கருத்தரங்குகள், செயலமர்வுகள், நடவடிக்கைகள் அங்கீகரிக் கப்படுகின்றன.

3. அறக்கொடை அல்லாத நன்கொடைகள்

அறக்கொடை அல்லாத நன்கொடைகள் அவை பெறப்பட்ட நிதியாண்டில் அங்கீகரிக் கப்படுகின்றன.

4. வட்டி வருமானம்

அட்டுறு அடிப்படையில் வட்டி வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

5. சொத்து, பொறித்தொகுதி, உபகரண விற்பனையிலிருந்தான ஆதாயங்கள் / இழப்புகள்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களைக் கையுதிர்ப்பதிலான நிகர இலாபங்கள் மற்றும் இழப்புகள் என்பவை அவை கையுதிர்ப்பதன்மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து கையுதிர்க்கப்பட்ட பொருளின் கொண்டுசெல்லும் மதிப்பு மற்றும் தொடர்புடைய விற்பனைச் செலவுகள் கழித்த பின்னர் நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏதேனும் மீள மதிப்பிடப்பட்ட சொத்தின் விடயத்தில், மீள் மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் எஞ்சியிருக்கும் ஏதேனும் மீதி, நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றுக்கு மாற்றப்படுகின்றது.

6. பிற வருமானம்

மேலே உள்ள வகைகளின்கீழ் குறிப்பிடப் படாத வேறு எந்த வருமானமும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

2.6.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்பு / வருமானம்

நிதி பெறுவதற்கான நிபந்தனைகள் ஒரு சேவையை அல்லது பிற செயல்முறையை நிறைவேற்றுதலுடன் இணைக்கப்படுகின்றவிடத்து ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது பிற புரிதலின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பங்களிப்புகள் வழங்கப்படுகின்றன. வகுக்கப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கு வதன் மூலமும் எதிர்பார்க்கப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதன்மூலமும் பல்கலைக்கழகம் பங்களிப்பை ஈட்டுகின்றது. பங்களிப்புப் பெறப்படும் என்றும் அதனைப் பெறுவதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கப்பட்டுள்ளதென்றும் அது ஈடுசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் உறப்பட்டுள்ளனவென்றும் நிதிச் செயல்நிறை வேற்றக் கூற்றில் அறவிடப்பட்டுள்ளனவென்றும் நியாயமான உறுதிப்படுத்தல் இருந்தாலன்றி வருமானம் நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதில்லை. நிதியைப் பெறுவது தானே பங்களிப்புடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது அல்லது நிறைவேற்றப்படும் என்பதற்கான உறுதியான சான்றினை அளிக்காது. நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்வரை, பங்களிப்பு வரையறுக்கப் பட்ட நிதிகளின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

எந்தவொரு வரையறுக்கப்பட்ட பங்களிப்பைப் பெறும்போதும், நிதி நிலை அறிக்கையில் பங்களிப்பு அங்கீகரிக்கப்படுகிறது. அதன்பிறகு, ஒரு முறையான அடிப்படையில், இந்தக் கால கட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட "வரையறுக்கப் பட்ட" நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகைக்குச் சமமான தொகை வருமானத்திற்கு எடுத்துச்செல்லப்படுகிறது. பயன்படுத்தப்படாத நிதிகள் நிதிநிலை அறிக்கைக் கூற்றில் உள்ளவாறே முன்னோக்கிக் கொண்டுசெல்லப் படுகின்றன.

2.6.3 வெளியிடும் சேவை

கொழும்புப் பல்கலைக்கழக அச்சகம் 2020 பெப்ருவரியில் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. வருமானம் பின்வருமாறு அங்கீகரிக் கப்படுகின்றது:

i. பொருத்தமான விற்பனை வழிகள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய குறிப்பான விதிமுறைகள் நிறைவேற்றப் படுகையில்.

ii. நூல்களின் விடயத்தில் வாடிக்கை யாளருக்குப் பண்டங்கள் ஒப்படைக்கப் படுவதன்பேரில்.

2.7 செலவுகளை ஒப்புக்கொள்ளல்

2.7.1. பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயற் பாடுகளையும் நிறைவேற்றுவதிலான செலவுகள் அட்டுறு அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்டு நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அறவிடப் பட்டுள்ளன.

2.7.2 பட்ட மாணவர் கல்வி தொடர்பில் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் அரசாங்க மீண்டுவரும் மானியத்தில் அறவிடப்பட்டுள்ளன.

2.7.3 மாணவர்களின் கற்றல் ஆற்றலைத் தொடரும்பொருட்டு அல்லது அதனை அதிகரிக்கும் பொருட்டு நிரந்தர இயல்புடைய சொத்துக்களைக் கையேற்பதில் அல்லது முன்னேற்றுவதில் உறப்பட்ட எல்லாச் செலவினமும் மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டுள்ளன.

2.7.4 பல்கலைக்கழகத்தை நடத்துவதில் உறப்பட்ட செலவுக்கும் செயல்திறனுள்ள நிலையில் மூலதனச் சொத்துக்களைப் பேணுவதற்கு உறப்பட்ட செலவுக்கும் இடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் நிதிச் செயல் நிறைவேற்றக் கூற்றில் ஒப்புக்கொள்ளப்பட்ட செலவுகள் ஆண்டுக்கான மேலதிகத்தை/ பற்றாக்குறையைத் தீர்மானிப்பதில் வருவாயில் அறவிடப்பட்டுள்ளன.

(அ) கருத்திட்டச் செலவினம்

பல்கலைக்கழகத்தின் கருத்திட்டங்கள் மற்றும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செலவுகள் அவை உறப்பட்ட காலகட்டத்தில் நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் அங்கீகரிக்கப் படுவதோடு கருத்திட்டச் செலவுகளை அடையாளம் காண்பதற்கான அடிப்படையானது முக்கியமாகக் கருத்திட்டத்தின் அமைவிடம், கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் கருத்திட்ட முன்மொழிவின்படி திட்டமிடப்பட்ட கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

உறப்பட்ட செலவுக்கும் குறிப்பான வருமான இனங்களின் ஈட்டலுக்குமிடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் செலவுகள் நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றில் ஒப்புக்கொள்ளப் படுகின்றன.

(ஆ) தொழிற்பாட்டுச் செலவினங்கள்

பல்கலைக்கழகத்தை நடத்துவதில் மற்றும் மூலதனச் சொத்துக்களைத் திறமையான நிலையில் பராமரிப்பதில் உறப்பட்ட அனைத்துச் செலவினங்களும் ஆண்டுக்கான மேலதிகத்தைக் கணிப்பதில் அறவிடப்பட்டுள்ளன.

பரீட்சைகள், கருத்தரங்குகள் மற்றும் கல்வி நெறிகளுக்கான செலவு ஆகியவை நிதிச் செயல் நிறைவேற்றக் கூற்றில் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

மகாபொல, கல்வி உதவுதொகை மற்றும் புலமைப்பரிசில்கள்

மகாபொல உயர்கல்விப் புலமைப்பரிசு நம்பிக்கை நிதியம் 2019 ஏப்பிரல் முதல் மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசுத் தவணைப் பணத்தை மாணவர்களின் வங்கிக் கணக்குக்கு நேரடியாக மாற்றியுள்ளது. இவ்வாண்டில் மகாபொல நம்பிக்கை நிதியும் ப.மா.ஆ.உம் முறையே ரூ. 158.9 மற்றும் ரூ. 152.7 மில்லியனை மகாபொல புலமைப்பரிசாகச் செலவிட்டன.

(இ) நிதிச் செலவு

பணம் செலுத்தப்படும்போது அல்லது பொறுப்பு களை உருவாக்கும்போது நிதிச் செலவு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

2.8 காசுப்பாய்வுக் கூற்று

காசுப்பாய்வுக் கூற்று நேரில் முறையைப் பயன் படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது. SLPSAS இன்படி, தொழிற்படு நடவடிக்கைகளின், நிதி நடவடிக்கை களின் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளின் மொத்தக் காசுக் கிடைப்பனவுகளும் மொத்தக் காசுக் கொடுப்பனவுகளும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளன. காசும் காசுக்குச் சமமானவையும் தெரிந்த காசுத் தொகைகளுக்கு உடனே மாற்றக் கூடியதும் பெறுமதியில் சிறியளவு மாற்றங்கள் ஏற்படக்கூடிய இடருக்கு உட்படக்கூடியதுமான குறுங்கால, உயர் திரவநிலை முதலீடுகளை உள்ளடக்குகின்றன.

2.9 கடப்பாடுகளும் எதிர்பாராப் பொறுப்புகளும்

அறியப்பட்ட எல்லாப் பொறுப்புக்களினதும் தொகை யைத் தீர்மானிப்பதில் எல்லா இடர்களும் கணக்கில் கொள்ளப்படுகின்றன. எதிர்பாராப் பொறுப்புக்கள் என்பவை நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளால் மட்டும் அவை உள்ளமையை உறுதிப்படுத்தக்கூடிய சாத்தியமான கடப்பாடுகள் அல்லது பொருளாதாரப் பயன்மாற்றப்படுதல் நிகழக்கூடியதல்லாத அல்லது அதனை நம்பத் தக்கதாக அளக்க முடியாத நிகழ்காலக் கடப்பாடுகளாகும். எதிர்பாராப் பொறுப்புக்கள் நிதி நிலைக் கூற்றில் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் அவை அற்பமானவையாக இருந்தாலன்றி வெளிப்படுத்தப்படுகின்றன.

2.10 அறிக்கையிடற் தேதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

அறிக்கையிடற் தேதிக்குப் பிந்திய முக்கிய எல்லா நிகழ்வுகளும் பரிசீலனை செய்யப்பட்டுத் தேவையானவிடத்து நிதிக் கூற்றுகளில் பொருத்தமான சீராக்கல்கள் செய்யப்படுகின்றன.

2.11 உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுத் **(AHEAD)** திட்டத்தைத் துரிதப்படுத்துதல் கருத்திட்டம்

இலங்கை அரசாங்கமும் உலக வங்கியும் ஒரு வங்கி நிதியுதவும் துரிதப்படுத்திய உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைமூலம் உயர்கல்வித் துறைக்கு ஆதரவளிக்க ஒப்புக் கொண்டுள்ளன.

AHEAD திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனம் கல்வி, உயர் கல்வி அமைச்சு ஆகும். பல்கலைக்

கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக் கழகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும். உயர் கல்வி அமைச்சு, ப.மா.ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான அனைத்து AHEAD நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து ஆதரிக்கும் ஒரு செயற்பாட்டுக் கண்காணிப்பு மற்றும் ஆதரவுக் குழுவும் (OMST) இருக்கும். பல்கலைக்கழக மட்டத்தில் கருத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் உள்ள செயற்பாட்டுத் தொழில்நுட்பச் செயலகத்தால் (OTS) ஒருங்கிணைக்கப் படுகின்றன.

2020இல் பல்கலைக்கழகம் AHEAD கருத் திட்டத்தின்கீழ் ரூ. 400.5 மில்லியனை மூலதன மாக்கியது.

மொத்த வழங்கல்களும் தேவைகளும்	**2,024,399**	**1,574,617**	**3,599,016**	**4,775,306**
சொத்துக்களின் பராமரிப்பு				
இயந்திரம், பொறித்தொகுதி, சாதனம்	1,838,469	160,901	1,999,370	2,527,725
கட்டடங்கள், கட்டமைப்புகள்	16,108	-	16,108	-
மொத்தச் சொத்துக்களின் பராமரிப்பு	**1,854,577**	**160,901**	**2,015,478**	**2,527,725**
ஒப்பந்தச் சேவைகள்				
போக்குவரத்து	1,596	46,873	48,469	71,091
தொலைத்தொடர்பு	192,493	286,302	478,795	974,873
அஞ்சற் கட்டணம்	3,550	-	3,550	17,705
மின்சாரம்	5,130,410	7,516,569	12,646,979	13,264,563
பாதுகாப்புச் சேவைகள்	108,029	21,593,385	21,701,414	23,853,226
நீர்	72,710	6,823,217	6,895,926	8,024,253
சுத்திகரிப்புச் சேவைகள்	2,311,167	24,864,178	27,175,345	27,523,164
வாடகை, கூலிக் கட்டணங்கள்	97,900	-	97,900	247,666
அச்சிடல், விளம்பரப்படுத்தல்	27,246	-	27,246	104,711
ஏனையவை	8,642	-	8,642	135,000
மொத்த ஒப்பந்தச் சேவைகள்	**7,953,742**	**61,130,525**	**69,084,267**	**74,216,252**

செலவினக் கூற்று – குறிப்பு 19 – நிகழ்ச்சித்திட்டம் 03–03 – கற்பித்தல் வளங்கள், 08- துணைச் செயற்பாடுகள்

செலவுத் தலைப்பு	கற்பித்தல் வளங்கள்	விடுதி	2020 (ரூ.)	2019 (ரூ.)
	03-01	08-01		
பிற சேவைகள்				
சிறப்புச் சேவை – தொழில்வாண்மை, பிற	-	-	-	7,950
செயலமர்வுகள், கருத்தரங்குகள், கூட்டங்கள்	5,000	-	5,000	26,000
கல்விசார் ஆராய்ச்சி	-	-	-	-
பயிற்சிச்சேவை - உண்ணாட்டு (பணியாளர் அபிவிருத்தி)	-	-	-	561,000
விடுமுறை ஆணைச்சீட்டுகள்	133,936	-	133,936	178,418
பொழுதுபோக்குச் செலவுகள்	17,381	36,203	53,584	79,687
வங்கிக் கட்டணம்	15,985	-	15,985	-
உதவுதொகை, உறுப்புரிமைக் கட்டணம்	15,000	-	15,000	1,250
பரீட்சைச் செலவுகள்	-	1,000	1,000	-
ஏனையவை	340,690	674,236	1,014,926	995,365
ஆதனக் கடன்மீது வட்டி மானியம்	444,408	20,908	465,316	482,554
குத்தகை வட்டி	-	-	-	-
மொத்தப் பிற சேவைகள்	972,399	732,346	1,704,745	2,332,224
மொத்தப் பிற மீண்டுவருஞ் செலவினம்	12,805,118	63,598,389	76,403,506	83,854,508
புனரமைப்பு மீண்டுவருஞ் செலவினம்	3,032,924	3,015,562	6,048,486	21,442,425
நூலகக் குறிப்பேடு	3,441,669	-	3,441,669	-
மொத்தம்	**133,936,518**	**94,525,185**	**228,461,703**	**230,359,981**

செலவினக் கூற்று – குறிப்பு 19 – நிகழ்ச்சித்திட்டம் 04 – நலன்புரிச் சேவைகள்

செலவுத் தலைப்பு	சுகாதார சேவை	உடற்கல்வி	நலன்புரி	2020 (ரூ.)	2019 (ரூ.)
	04-01	04-02	04-03		
சம்பளங்கள், கூலிகள் - கல்விசார்					
சமப்படுத்தற் படி	171,120	-	-	171,120	171,120
வருகைதரும் விரிவுரையாளர் கட்டணம்	-	1,275,307	-	1,275,307	3,350,150
மொத்தச் சம்பளங்கள், கூலிகள் - கல்விசார்	171,120	1,275,307	-	1,446,427	3,521,270
சம்பளங்கள், கூலிகள் - கல்விசாரா					
சம்பளங்கள், கூலிகள்	7,730,603	10,928,051	17,604,864	36,263,519	30,142,275
ப.சே.நி.	1,606,743	1,768,991	2,765,855	6,141,589	5,233,796
ஓய்வூதியம்	263,032	1,052,804	1,562,651	,878,487	2,208,215
ஊ.ந.நி	373,955	564,770	865,702	1,804,427	1,488,403
பதிற்கடமைப் படி	-	62,789	-	62,789	62,789
மேலதிகநேர வேலை	142,459	905,401	4,440,366	5,488,226	7,200,753
விடுமுறைக் கொடுப்பனவுகள்	-	85,301	-	85,301	86,929
வாழ்க்கைச்செலவுப் படி	1,360,102	2,385,542	3,157,239	6,902,883	6,257,563
வேறு படி	3,684	-	6,600	10,284	121,332
20% படி	1,532,194	2,438,435	3,594,426	7,565,055	5,868,888
ஆராய்ச்சிப் படி	-	-	-	-	58,062
சீராக்கற் படி	-	-	-	-	495,951
M C A 35% படி	3,447,437	5,486,479	8,087,460	17,021,375	13,198,411
மொத்தச் சம்பளங்களும் கூலிகளும் - கல்விசாரா	16,460,209	25,678,563	42,085,163	84,223,934	72,423,366
மொத்தம் - ஆளணி ஊதியங்கள்	**16,631,329**	**26,953,870**	**42,085,163**	**85,670,362**	**75,944,636**
பயணம்					
உண்ணாட்டு	-	6,363	-	6,363	79,550
வெளிநாட்டு	-	-	-	-	513,000
மொத்தப் பயணம்	**-**	**6,363**	**-**	**6,363**	**592,550**
வழங்கல்களும் தேவைகளும்					
எழுதுகருவி மற்றும் அலுவலகத் தேவைகள்	323,299	164,573	1,436,876	1,924,747	2,406,708
எரிபொருளும் உராய்வுநீக்கியும்	8,949	56,836	406	66,191	121,681
சீருடைகள்	134,627	97,184	187,322	419,134	72,425
இரசாயனங்கள், நுகர்வுகள்	6,400	-	-	6,400	187,484
மருத்துவ வழங்கல்கள்	220,798	-	-	220,798	131,676
பிற	163,639	2,197,141	3,645,490	6,006,270	9,459,915
மொத்த வழங்கல்கள், தேவைகள்	**857,713**	**2,515,734**	**5,270,094**	**8,643,541**	**12,379,889**

செலவினக் கூற்று – குறிப்பு 19 – நிகழ்ச்சித்திட்டம் 04 – நலன்புரிச் சேவைகள்

செலவுத் தலைப்பு	சுகாதார சேவை	உடற்கல்வி	நலன்புரி	2020 (ரூ.)	2019 (ரூ.)
	04-01	04-02	04-03		
சொத்துக்களின் பராமரிப்பு					
வாகனங்கள்	-	-	-	-	3,390
இயந்திரம், பொறித் தொகுதி, சாதனம்	19,798	347,539	204,522	571,859	455,714
மொத்தச் சொத்துக்களின் பராமரிப்பு	**19,798**	**347,539**	**204,522**	**571,859**	**459,104**
ஒப்பந்தச் சேவைகள்					
போக்குவரத்து	-	21,869	2,820	24,689	179,226
தொலைத்தொடர்பு	59,885	26,554	154,365	240,803	711,114
அஞ்சற் கட்டணம்	-	870	49,622	50,492	39,558
மின்சாரம்	-	166,847	904,142	1,070,989	1,515,877
பாதுகாப்புச் சேவைகள்	-	54,014	-	54,014	-
நீர்	-	21,434	10,084	31,519	56,539
சுத்திகரிப்புச் சேவைகள்	-	3,220,610	-	3,220,610	3,524,686
வாடகை, கூலிக் கட்டணங்கள்	-	45,000	5,723,098	5,768,098	8,263,633
அச்சிடல், விளம்பரப்படுத்தல்	-	-	913,817	913,817	907,330
ஏனையவை	-	15,000	-	15,000	6,000
மொத்த ஒப்பந்தச் சேவைகள்	**59,885**	**3,572,199**	**7,757,948**	**11,390,032**	**15,203,962**
பிற சேவைகள்					
சிறப்புச் சேவை – தொழில்வாண்மை, பிற	-	5,000	10,750	15,750	36,500
பயிற்சிச்சேவை - உண்ணாட்டு (பணியாளர் அபிவிருத்தி)	-	-	-	-	16,950
பல்கலைக்கழக விளையாட்டுச் செயற்பாடுகள்	-	72,000	-	72,000	4,773,233
மாணவர் நலன்புரி, ஊழியர் நலன்புரி, மாணவர் பேரவைகள், சமூக ஒத்திசைவு	-	-	550,000	550,000	2,901,825
விடுமுறை ஆணைச்சீட்டுகள்	10,000	179,832	100,733	290,565	309,301
பொழுதுபோக்குச் செலவுகள்	2,241	39,746	231,614	273,601	346,277
உதவுதொகை, உறுப்புரிமைக் கட்டணம்	81,600	613,700	-	695,300	605,100
பரீட்சைச் செலவுகள்	-	-	-	-	2,200
பிற	336,595	18,320	154,290	509,205	521,457
ஆதனக் கடன்மீது வட்டி மானியம்	43,779	-	163,852	207,631	199,021
மொத்தப் பிற சேவைகள்	474,215	928,598	1,211,239	2,614,052	9,711,864
மொத்தப் பிற மீண்டு வருஞ் செலவினம்	1,411,611	7,370,432	14,443,802	23,225,845	38,347,369
வெளிநாட்டு மாணவர் புலமைப்பரிசில்	-	-	150,000	150,000	3,429,051
புனரமைப்பு மீண்டுவருஞ் செலவினம்	-	2,163,489	-	2,163,489	1,273,180
மொத்தம்	**18,042,940**	**36,487,791**	**56,678,965**	**111,209,696**	**118,994,236**

செலவினக் கூற்று – குறிப்பு 19 – நிகழ்ச்சித்திட்டம் 05 – கட்டடம், வசதிகள் பராமரித்தல்

செலவுத் தலைப்பு	காணி, கட்டடம்	மின்சாரம்	நீர் வழங்கல்	2020 (ரூ.)	2019 (ரூ.)
	05-01	05-02	05-03		
சம்பளங்கள், கூலிகள் - கல்விசாரா					
சம்பளங்கள், கூலிகள்	27,969,820	1,862,770	727,680	30,560,270	31,351,251
ப.சே.நி.	4,043,679	360,727	86,964	4,491,370	4,863,773
ஓய்வூதியம்	3,104,268	100,585	99,387	3,304,240	2,934,486
ஊ.ந.நி	1,429,590	92,263	37,270	1,559,122	1,559,653
மேலதிகநேர வேலை	1,743,728	41,584	41,094	1,826,407	4,899,418
வாழ்க்கைச்செலவுப் படி	6,474,000	374,400	187,200	7,035,600	8,368,368
வேறு படி	5,700	1,332	-	7,032	7,032
20% படி	5,836,156	372,554	145,536	6,354,246	5,418,722
சீராக்கற் படி	-	-	-	-	1,831,075
M C A 35% படி	13,131,346	838,246	327,456	14,297,049	12,175,476
மொத்தச் சம்பளங்களும் கூலிகளும் - கல்விசாரா	63,738,287	4,044,461	1,652,587	69,435,335	73,409,253
மொத்தம் - ஆளணி ஊதியங்கள்	**63,738,287**	**4,044,461**	**1,652,587**	**69,435,335**	**73,409,253**
பயணம்					
உண்ணாட்டு	1,000	-	-	1,000	11,175
மொத்தம்	**1,000**	**-**	**-**	**1,000**	**11,175**
வழங்கல்களும் தேவைகளும்					
எழுதுகருவி மற்றும் அலுவலகத் தேவைகள்	691,846	-	-	691,846	501,230
எரிபொருளும் உராய்வுநீக்கியும்	252,477	-	-	252,477	262,523
சீருடைகள்	503,586	-	-	503,586	14,400
ஏனையவை	843,177	-	-	843,177	1,390,965
மொத்த வழங்கல்களும் தேவைகளும்	**2,291,085**	**-**	**-**	**2,291,085**	**2,169,118**
சொத்துக்களின் பராமரிப்பு					
வாகனங்கள்	-	-	-	-	20,150
இயந்திரம், பொறித் தொகுதி, சாதனம்	197,339	-	-	197,339	318,525
கட்டடங்கள், கட்டமைப்புகள்	21,654,604	-	-	21,654,604	24,783,782
பிற	-	-	-	-	281,500
மொத்தச் சொத்துக்களின் பராமரிப்பு	**21,851,944**	**-**	**-**	**21,851,944**	**25,403,956**

செலவினக் கூற்று – குறிப்பு 19 – நிகழ்ச்சித்திட்டம் 05 – கட்டடம், வசதிகள் பராமரித்தல்

செலவுத் தலைப்பு	காணி, கட்டடம்	மின்சாரம்	நீர் வழங்கல்	2020 (ரூ.)	2019 (ரூ.)
	05-01	05-02	05-03		
ஒப்பந்தச் சேவைகள்					
போக்குவரத்து	35,042	-	-	35,042	35,499
தொலைத்தொடர்பு	109,713	-	-	109,713	103,446
மின்சாரம்	671,395	-	-	671,395	29,220,642
நீர்	1,626	-	-	1,626	7,034,650
சுத்திகரிப்புச் சேவைகள்	-	-	-	-	287,500
வாடகை, கூலிக்கட்டணம்	30,600	-	-	30,600	-
அச்சிடல், விளம்பரப்படுத்தல்	453,104	-	-	453,104	75,000
பிற	-	-	-	-	252,167
மொத்த ஒப்பந்தச் சேவைகள்	**1,301,480**	**-**	**-**	**1,301,480**	**37,008,905**
பிற சேவைகள்					
சிறப்புச் சேவை – தொழில்வாண்மை, பிற	19,500	-	-	19,500	-
விடுமுறை ஆணைச்சீட்டுகள்	501,311	-	-	501,311	336,429
பொழுதுபோக்குச் செலவுகள்	15,978	-	-	15,978	44,423
பிற	3,114,959	-	-	3,114,959	111,230
ஆதனக் கடன்மீது வட்டி மானியம்	25,133	-	-	25,133	27,844
குத்தகை வட்டி	-	-	-	-	-
மொத்தப் பிற சேவைகள்	3,676,880	-	-	3,676,880	519,927
மொத்தப் பிற மீண்டுவருஞ் செலவினம்	29,122,389	-	-	29,122,389	65,113,081
புனரமைப்பு மீண்டுவருஞ் செலவினம்	-	-	-	-	91,241
மொத்தம்	**92,860,676**	**4,044,461**	**1,652,587**	**98,557,724**	**138,613,574**

செலவினக் கூற்று – குறிப்பு 19 – நிகழ்ச்சித்திட்டம் 06 – திறைசேரி சாராத

விவரம்	நீடிப்புக் கல்விநெறிகள்	ஆராய்ச்சி	நிலையங்கள்	நிதிகள்	சர்வதேச மட்டம்	ஆராய்ச்சியை வலுப்படுத்தல்	2020 (ரூ.)	2019 (ரூ.)
சம்பளங்கள், கூலிகள் - கல்விசார்								
சம்பளங்கள், கூலிகள்	425,000	-	-	-	-	-	425,000	28,428,597
ப.சே.நி.	-	-	-	-	-	-	-	37,560
ஓய்வூதியம்	-	-	-	-	-	-	-	5,634
கல்விசார் படி	1,317,600	-	-	-	-	-	1,317,600	
வருகை. விரிவுரை கட்டணம்	91,268,942	491,250	27,000	105,000	-	-	91,892,192	107,674,437
படி	11,599,036	4,549,037	-	2,366,126	-	-	18,514,199	83,899,388
பிற படி	53,515,927	8,351,476	1,024,576	3,664,357	-	-	66,556,336	41,599,955
பொழுதுபோக்குப் படி	-	-	-	305,554	-	-	305,554	
மொத்தச் சம்பளங்கள், கூலிகள் - கல்விசார்	**158,126,505**	**13,391,763**	**1,051,576**	**6,441,037**	**-**	**-**	**179,010,882**	**261,645,571**
சம்பளங்கள், கூலிகள் - கல்விசாரா								
சம்பளங்கள், கூலிகள்	16,223,451	26,194,479	3,036,793	36,825,607	1,272,694	1,605,000	85,158,024	63,953,721
ப.சே.நி.	1,975,953	944,277	-	4,121,793	-	-	7,042,023	5,371,949
ப.சே.நி. - நிலுவை	-	-	-	-	-	-	-	940
ஓய்வூதியம் - நிலுவை	-	-	-	-	-	-	-	1,074
ஊ.ந.நி.	492,435	3,672	4,284	877,261	-	-	1,377,651	832,505
ஊ.ந.நி. - நிலுவை	-	-	-	-	-	-	-	403
மேலதிகநேர வேலை	942,906	4,945	19,235	2,147,059	-	-	3,114,146	8,079,587
படி	-	-	-	-	-	-	-	2,221,558
பிற படி	7,578,181	14,699,811	121,800	14,896,571	-	-	37,296,364	40,654,886
மொத்தச் சம்பளங்கள், கூலிகள் - கல்விசாரா	**27,212,927**	**41,847,184**	**3,182,113**	**58,868,291**	**1,272,694**	**1,605,000**	**133,988,208**	**121,116,623**
மொத்தம் - ஆளணி ஊதியங்கள்	**185,339,432**	**55,238,947**	**4,233,689**	**65,309,329**	**1,272,694**	**1,605,000**	**312,999,090**	**382,762,194**
பயணம்								
உண்ணாட்டு	661,795	5,256,276	665,719	1,358,041	8,050	540,053	8,489,934	13,688,389
வெளிநாட்டு	-	-	-	778,620	-	52,045	830,665	4,100,746
பயணம் - மொத்தம்	**661,795**	**5,256,276**	**665,719**	**2,136,661**	**8,050**	**592,098**	**9,320,599**	**17,789,136**

செலவினக் கூற்று – குறிப்பு 19 – நிகழ்ச்சித்திட்டம் 06 – திறைசேரி சாராத

விவரம்	நீடிப்புக் கல்விநெறிகள்	ஆராய்ச்சி	நிலையங்கள்	நிதிகள்	சர்வதேச மட்டம்	ஆராய்ச்சியை வலுப்படுத்தல்	2020 (ரூ.)	2019 (ரூ.)
வழங்கல்களும் தேவைகளும்								
எழுதுகருவி மற்றும் அலுவலகத் தேவைகள்	3,238,150	5,271,321	302,955	1,412,488	56,230	62,338	10,343,481	21,116,261
இரசாயனங்கள், நுகர்வுகள்	-	1,320,459	-	283,946	586,254	625,696	2,816,355	9,781,198
மருத்துவ வழங்கல்கள்	-	-	-	609,300	-	-	609,300	1,074,239
பிற	6,847,426	29,420,789	373,409	26,922,138	-	509,262	64,073,024	57,379,646
மொத்த வழங்கல்கள், தேவைகள்	**10,085,575**	**36,012,569**	**676,364**	**29,227,872**	**642,484**	**1,197,297**	**77,842,161**	**89,351,344**
சொத்துக்களின் பராமரிப்பு								
பொறித்தொகுதி, இயந்திரம், சாதனம்	208,000	56,490	-	195,329	-	-	459,819	38,713
கட்டடங்கள், கட்டமைப்புகள்	-	1,202,214	-	2,271,315	-	-	3,473,529	11,098,621
பிற	365,881	-	35,790	197,799	-	-	599,470	1,282,562
மொத்தச் சொத்துக்களின் பராமரிப்பு	**573,881**	**1,258,704**	**35,790**	**2,664,443**	**-**	**-**	**4,532,818**	**12,419,896**
ஒப்பந்தச் சேவைகள்								
போக்குவரத்து	2,900	2,001,724	-	2,470	27,466	-	2,034,559	13,315,557
தொலைத்தொடர்பு	441,535	199,052	113,284	1,392,519	-	-	2,146,389	2,161,455
அஞ்சற் கட்டணம்	284,234	-	13,962	243,243	-	-	541,439	1,832,512
சுத்திகரிப்புச் சேவைகள்	-	-	-	-	-	-	-	635,000
வாடகை, கூலிக் கட்டணங்கள்	1,662,125	1,458,340	-	660,423	-	-	3,780,888	17,600,517
உள்ளூராட்சிச் சபைகளுக்கு வரிகள், வீதங்கள்	-	-	-	-	-	-	-	12,876,952
அச்சிடல், விளம்பரப்படுத்தல்	2,120,323	91,125	108,407	1,139,276	-	-	3,459,131	4,783,190
பிற	122,387	-	-	-	-	-	122,387	
மொத்த ஒப்பந்தச் சேவைகள்	**4,633,504**	**3,750,240**	**235,652**	**3,437,931**	**27,466**	**-**	**12,084,794**	**53,205,183**

செலவினக் கூற்று – குறிப்பு 19 – நிகழ்ச்சித்திட்டம் 06 – திறைசேரி சாராத

விவரம்	நீடிப்புக் கல்விநெறிகள்	ஆராய்ச்சி	நிலையங்கள்	நிதிகள்	சர்வதேச மட்டம்	ஆராய்ச்சியை வலுப்படுத்தல்	2020 (ரூ.)	2019 (ரூ.)
பிற சேவைகள்								
பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குப் பயண மானியங்கள்	-	-	-	-	-	70,000	70,000	70,200
சிறப்புச் சேவை – தொழில்வாண்மை, பிற	-	999,737	-	-	-	-	999,737	
செயலமர்வுகள், கருத்தரங்குகள், கூட்டங்கள்	12,664,461	14,168,611	159,092	8,420,334	23,972	-	35,436,469	46,887,126
கல்வி ஆராய்ச்சி	-	-	-	-	68,825	3,991,376	4,060,201	3,672,633
பயிற்சிச்சேவை - உண்ணாட்டு (பணியாளர் அபிவிருத்தி)	-	-	-	69,000	-	-	69,000	1,473,700
பட்டப்பின் ஆராய்ச்சி, புலமைப்பரிசில்	-	-	-	798,418	-	-	798,418	471,000
மாணவருக்கும் கற்றல் தர மேம்பாட்டுக்குமான கல்விநெறி விடயங்கள்	-	-	-	475,203	-	-	475,203	-
பல்கலைக்கழக விளையாட்டுச் செயற்பாடுகள்	-	-	-	39,800	-	-	39,800	95,000
மாணவர் நலன்புரி, ஊழியர் நலன்புரி, மாணவர் பேரவைகள், சமூக ஒத்திசைவு	-	-	-	24,499,610	-	-	24,499,610	47,100
விடுமுறை ஆணைச்சீட்டுகள்	-	-	-	-	-	-	-	9,180
பொழுதுபோக்குச் செலவுகள்	1,845,916	4,789,421	119,091	3,258,727	-	133,253	10,146,409	28,722,286
விருதுகள், இழப்பீடுகள்/ அறக்கட்டளைகள்	-	-	-	2,747,358	-	-	2,747,358	600,000
உதவுதொகை, உறுப்புரிமைக் கட்டணம்	-	-	-	-	18,000	-	18,000	53,000
பட்டமளிப்பு	-	-	-	-	-	-	-	285,713
பரீட்சைச் செலவுகள்	28,006,700	251,000	144,904	1,821,537	-	-	30,224,141	43,822,392
பிற	2,898,685	419,915	73,819	5,438,073	139,903	3,362,103	12,332,498	22,172,902
மொத்தப் பிற சேவைகள்	**45,415,762**	**20,628,684**	**496,906**	**47,568,060**	**250,700**	**7,556,732**	**121,916,843**	**148,382,231**
மொத்தப் பிற மீண்டு வருஞ் செலவினம்	**61,370,518**	**66,906,473**	**2,110,430**	**85,034,967**	**928,700**	**9,346,127**	**225,697,215**	**321,147,790**
புனரமைப்பு மீண்டுவருஞ் செலவினம்	-	-	1,337,040	601,248	-	-	1,938,289	2,137,549
மொத்தம்	**246,709,949**	**122,145,420**	**7,681,159**	**150,945,545**	**2,201,394**	**10,951,127**	**540,634,594**	**706,047,533**

ஒவ்வொரு பீடத்திலுமுள்ள மாணவர் எண்ணிக்கையும் ஒரு மாணவருக்கான மீண்டுவருஞ் செலவும் - 2020

பீடம்	மாணவர் எண்.		மீண்டுவருஞ் செலவினம்		நிருவாக மேந்தலை		மொத்த மீண்டுவருஞ் செலவினம்		மூலதனச் செலவு		மொத்தச் செலவு		ஒரு மாணவர் செலவு	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கலை	2,134	2,590	756,264,048	789,443,311	195,792,817	194,659,898.71	952,056,865	984,103,210	136,835,624	181,547,702.78	1,088,892,489	1,165,650,913	510,259	450,058
கல்வி	386	394	156,041,885	138,609,362	35,415,196	29,612,355.25	191,457,081	168,221,717	24,750,961	27,617,681.43	216,208,042	195,839,398	560,124	497,054
விஞ்ஞானம்	1,662	1,766	725,616,968	756,114,666	152,487,189	132,729,490.78	878,104,157	888,844,157	106,570,200	123,788,896.95	984,674,357	1,012,633,053	592,464	573,405
மருத்துவம்	1,578	1,577	1,003,592,098	1,071,787,548	144,780,255		1,148,372,354	1,190,312,128	101,183,981	110,540,821.35	1,249,556,334	1,300,852,949	791,861	824,891
சட்டம்	992	992	162,227,874	178,940,497	91,015,218	74,556,995.96	253,243,092	253,497,493	63,608,687	69,534,873.03	316,851,779	323,032,366	319,407	325,637
முகாமைத்துவம்	1,939	2,065	388,106,040	401,257,421	177,901,721	155,201,811.14	566,007,760	556,459,232	124,331,900	144,747,492.76	690,339,660	701,206,725	356,029	339,567
ஸ்ரீ பாளி	626	650	226,476,546	258,351,141	57,435,006	48,852,870.33	283,911,552	307,204,011	40,140,160	45,562,164.79	324,051,711	352,766,176	517,654	542,717
தொழில்நுட்பம்	349	565	137,596,577	147,956,023	32,020,475	42,464,418.06	169,617,052	190,420,441	22,378,460	39,604,035.55	191,995,512	230,024,476	550,130	407,123
தாதியம்	178	273	54,573,369	67,126,783	16,331,360	20,518,205.54	70,904,728	87,644,988	11,413,656	19,136,109.21	82,318,384	106,781,098	462,463	391,140
மொத்தம்	**9,844**	**10,872**	**3,610,495,405**	**3,809,586,752**	**903,179,236**	**698,596,046**	**4,513,674,640**	**4,626,707,377**	**631,213,628**	**762,079,778**	**5,144,888,268**	**5,388,787,154**		
										** மாணவர் ஒருவருக்குச் சராசரிச் செலவு			**522,642**	**495,657**

நிருவாக மேந்தலைகள்

செலவுத் தலைப்பு	2019க்கான செலவு	2020க்கான செலவு
பொது நிருவாகம்	223,517,147	218,295,380
நிதி நிருவாகம்	51,212,612	47,745,970
வழங்கல்கள்	16,868,436	15,973,079
தர உத்தரவாத அலகு	-	2,027,587
போக்குவரத்து	40,399,725	34,578,683
பரீட்சைகள்	42,654,421	36,538,479
கற்பித்தல் வளங்கள்	125,114,750	133,936,518
சுகாதார சேவை	18,222,298	18,042,940
உடற் கல்வி	48,327,852	36,487,791
நலன்புரி	52,444,086	56,678,965
பராமரிப்பு	138,613,574	98,557,724
விடுதி	105,245,232	94,525,185
ப.அ.நி.	6,784,754	5,297,679
ஆராய்ச்சி	25,209,619	13,152,521
பொறியியல் பீடம்	125,000	110,000
தர உத்தரவாதம், சான்றுப்படுத்தல்	1,654,976	-
மாணவ அறிவுரையாளர் அலுவலகம்	6,784,754	5,172,125
மொத்தம்	**903,179,236**	**817,120,625**

** மூலதனச் செலவு = ஆண்டுக்கான தேய்மானம்

11. நிதிக்கூற்று மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது இல.} HED/B/UOC/2020/FA/05

தங்கள் இல.}

25 யூன் 2021

துணைவேந்தர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் 2020 திசெம்பர் 31ஆந் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட, கண்காணிப்புத் தேவைகள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுகள்

1.1 தகுதிவாய்ந்த கருத்து

2020 திசெம்பர் 31இல் இருந்தவாறு நிதிநிலைக் கூற்று, நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்று, உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்று முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றைக் கொண்டதான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையுடனும் 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவுடனும் ஒருங்கு வாசிக்கப்படவேண்டிய 1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் உட்பிரிவு 107(5) மற்றும் 108(1) ஆகியவற்றால் உரித்தாக்கப்பட்டவாறு 1980இன் 1ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின் 20ஆம் பிரிவால் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க, எனது பணிப்புரையின்கீழ் நடத்தப்பட்டது. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப்படி இவ்வறிக்கையின் "தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை" பற்றிய பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களைத் தவிர, அந்நிதிக்கூற்றுகள் 2020 திசெம்பர் 31இல் இருந்தவாறு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதி நிலையையும் அதன் நிதிச் செயல்நிறைவேற்றத்தையும் அத்தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுகளையும் பற்றி இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான ஒரு நோக்கை வழங்குகின்றன.

1.2 தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

அ) இலங்கைப் பொதுக் கணக்கீட்டு நியமங்கள் இல. 07இன் 54ஆம் பந்தியின்படி ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்ற வகுப்பினுள் வரும் சொத்துக்கள் தொடர்பான மீள்மதிப்பீட்டு அதிகரிப்புகளும் குறைவுகளும் வேறு வகுப்புகளினுள்ளும் வரும் சொத்துக்கள் தொடர்பில் சரியீடு செய்யப்படலாகாது. எனினும் ஸ்ரீபாளி வளாகத்தின் மொத்தம் ரூ. 5,437,395க்கான அலுவலக சாதனத்தின் மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை, ஆய்வுகூடத்தினதும் கற்பித்தல் சாதனத்தினதும் மீள்மதிப்பீட்டு மேலதிகத்துக்குச் சரியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விளைவாக நிதிக் கூற்றுகளில் மீள்மதிப்பீட்டு வருவாயும் வருடாந்த மேலதிகமும் அதே தொகையால் முறையே குறைவாகவும் மிகையாகவும் கூறப்பட்டுள்ளன.

ஆ) இலங்கைப் பொதுக் கணக்கீட்டு நியமங்கள் இல. 07இன் 55ஆம் பந்தியின்படி ஏற்பாடுகளுக்கு முரணாகச் சொத்து மீள்மதிப்பீட்டு வருவாயில் ரூ. 42,248,667 தொகை நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றின் மூலதன மானியங்களின் கடன்தீர்த்தலின்கீழ் வருவாய்க்குச் சீராக்கப்பட்டதன்மூலம் நிதிக் கூற்றுகளில் வருடாந்த மேலதிகமும் மீள்மதிப்பீட்டு வருவாயும் அதே தொகையால் மிகையாகவும் குறைவாகவும் கூறப்பட்டுள்ளன.

இ) ஏற்கெனவே முற்றாகத் தேய்மானப்படுத்திவிட்டபோதிலும் இப்போதும் பயன்பாட்டிலுள்ள மொத்தம் ரூ. 80,706,090க்கான ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் மற்றும் அருவச் சொத்துக்களை இலங்கைப் பொதுக் கணக்கீட்டு நியமங்கள் இல. 3இன்படி திரும்பவும் மீளாய்வுசெய்து நிதிக் கூற்றுகளில் கூறுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

ஈ) விளையாட்டுச் சாதனத்தின் தேய்மானம், ஆதனம், பொறித்தொகுதி, சாதனத்தின்மீதான தேய்மானக் கொள்கையின்படி 25% ஆக இருந்தபோதிலும், 17 சந்தர்ப்பங்களில் மேற்படி ஏற்பாடுகளுக்கு முரணாகத் தேய்மானம் கணிக்கப்பட்டுள்ளதனால், மீளாய்வாண்டுக்கான தேய்மானத்தில் ரூ. 1,299,182 குறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், விளையாட்டுச் சாதனங்களின் தேறிய பெறுமதியும் அதே தொகையால் மிகையாகக் கூறப்பட்டுள்ளது.

நான் எனது கணக்காய்வை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நடத்தினேன். அந்நியமங்களின்கீழ் எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் 'நிதிக்கூற்றுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்' என்ற பிரிவில் மேலும் விவரிக்கப்படுகின்றன. நான் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்று எனது தகுதிவாய்ந்த கருத்துக்கான ஓர் அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமென நான் நம்புகின்றேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை - 2020இல் உள்ள வேறு தகவல்

வேறு தகவலென்பது, பல்கலைக்கழகத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டதும் இவ்வறிக்கைத் தேதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்டதும் எனது கணக்காய்வு அறிக்கையில் இல்லாததுமான தகவலைக் குறிக்கின்றது. இவ்வேறு தகவலுக்கு முகாமைத்துவம் பொறுப்பானதாகும்.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கருத்து இவ்வேறு தகவலை உள்ளடக்கவில்லை. அதன் தொடர்பில் நான் ஒரு கருத்தை உறுதிப்படுத்தவோ வெளிப்படுத்தவோ இல்லை.

நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட வேறு தகவலை வாசித்தலும் அவ்வேறு தகவல் நிதிக் கூற்றுகளுடாக அல்லது வேறு வழிகளில் நான் அறிந்துகொண்டுள்ளவற்றுடன் எண்ணிக்கையில் முரண்படுகின்றதாவென்று பரிசீலனை செய்தலுமாகும். இதன் தொடர்பில் அறிக்கையிடுவதற்கு எனக்கு எதுவுமில்லை.

1.4 நிதிக் கூற்றுகளுக்கு முகாமைத்துவத்தினதும் கட்டுப்படுத்தும் தரப்புகளினதும் பொறுப்பு

முகாமைத்துவம் இந்நிதிக் கூற்றுகளை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிப்பதற்கும், நியாயமான முறையில் சமர்ப்பிப்பதற்கும், நிதிக் கூற்றுகளை மோசடி அல்லது வழுவின் நிமித்தம் பொருள் சார்ந்த தவறான கூற்றுகள் இல்லாது தயாரித்தலை இயலச்செய்வதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கும் பொறுப்பானது.

நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கையில் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதற்கான ஆற்றலைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். தொடர்ந்தும் இயங்குமென்ற அடிப்படையில் கணக்குகளைப் பேணுதலும் பல்கலைக்கழகத்தை ஒழித்துவிடுவது அல்லது வேறு தெரிவு இல்லாதவிடத்துத் தொழிற்பாடு இல்லாதொழிதல் முகாமைத்துவத்தின் நோக்கமாக இருந்தாலன்றிப் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குதல் தொடர்பில் நிகழ்வுகளை வெளிப்படுத்தலும்கூட முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தைக் கட்டுப்படுத்தும் தரப்பினர் நிதி அறிக்கையிடும் முறைமைக்குப் பொறுப்பானவர்களாவர்.

2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 16(1)ஆம் உட்பிரிவுக்கிணங்கப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கக்கூடியதாகப் பல்கலைக்கழகம் அதன் வருமானம், செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் தொடர்பில் முறையான புத்தகங்களையும் பதிவுச்சான்றுகளையும் பேணவேண்டும்.

1.5 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வில் கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது குறிக்கோள் நிதிக் கூற்றுகள் ஒட்டுமொத்தத்தில் மோசடி அல்லது வழுவின் நிமித்தமான பொருள்சார்ந்த தவறான கூற்றுக்களல்லவென்ற நியாயமான உத்தரவாதத்தை வழங்குதலும் எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதலுமாகும். நியாயமான உத்தரவாதம் உயர் தரத்திலான உத்தரவாதமாக இருந்தபோதிலும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கக் கணக்காய்வு செய்யப்படும்போது அளவுசார்ந்த தவறான கூற்றுகளை அது எப்போதும் வெளிப்படுத்துமென்று அது

உறுதிப்படுத்தவில்லை. அளவுசார்ந்த தவறான கூற்றுகளில் தனிப்பட்ட அல்லது கூட்டு மோசடியின் அல்லது வழுவின் தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதுடன், அந்நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படும் முடிவுகளில் ஒரு விளைவையும் கொண்டிருக்கலாம்.

இக்கணக்காய்வு தொழில்வாண்மைத் தீர்ப்புடனும் தொழில்வாண்மை ஐயுறவுடனும் என்னால் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன்,

- மோசடியினால் அல்லது வழுவினால் ஏற்படக்கூடிய இடர்களைத் தவிர்ப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றைப் பெற்றுக்கொள்ளல்; மோசடியினால் அல்லது வழுவினால் நிதிக் கூற்றுகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான தவறான கூற்றுகளைக் கண்டுணர்ந்து மதிப்பீடு செய்வதில் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடல். இதுவே எனது கருத்தின் அடிப்படை. பொருள்சார்ந்த தவறான கூற்றுகளைவிட மோசடி கூடிய தாக்கத்தைக் கொண்டிருக்கும். கூட்டுச் சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் என்பவற்றால் மோசடி நிகழலாம்.

- கணக்காய்வாளர் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறையைத் திட்டமிடும்பொருட்டுப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகளை ஆராய்ந்தாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதித்தன்மை பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்துக்காகவல்ல.

- கணக்காய்வானது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மையையும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்துகைகளின் பொருத்தப்பாட்டையும் மதிப்பீடு செய்தலை உள்ளடக்கியது.

- நிகழ்வுகளின் அல்லது சூழ்நிலைகளின் நிமித்தம் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதில் போதிய எதிர்பாராப் பொறுப்பு உள்ளதாவென்று பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையில் கணக்கீட்டு நோக்கத்துக்குத் தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையைப் பயன்படுத்துவதன் பொருத்தம் தீர்மானிக்கப்பட்டது. போதிய எதிர்பாராப் பொறுப்பு உள்ளதென்று நான் முடிவுக்கு வந்தால் நிதிக் கூற்றுகளில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களில் எனது கணக்காய்வு அறிக்கை கவனஞ்செலுத்தவேண்டுமென்பதுடன், வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாதவிடத்து எனது கருத்து மாற்றப்படவேண்டும். எனினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் நிமித்தம் தொடர்ந்து இயங்குதல் முடிவுக்கு வரக்கூடும்.

- வெளிப்படுத்தல்களுடன்கூடிய நிதிக் கூற்றுகளின் சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவை மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அடிப்படையாயுள்ள கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் நிதிக் கூற்றுகளில் பொருத்தமான, நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளனவாவென்றும் மதிப்பீடு செய்யப்பட்டன.

  முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு வலுக்குறைவுகள் மற்றும் கணக்காய்வில் கண்டுணரப்பட்ட வேறு நிகழ்வுகள் என்பவை கட்டுப்பாட்டுத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டன.

2. வேறு சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

2.1.1 இவ்வறிக்கையின் "தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை" என்ற பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கம் தொடர்பில் தவிர, 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(அ)இன் தேவைகளுக்கிணங்க, கணக்காய்வுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன்.

2.1.2 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ)(iii)இன் தேவைகளுக்கிணங்க, பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் முன்னைய ஆண்டினதுடன் நிலைமாறாதுள்ளன.

2.1.3 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ)(iv)இன் தேவைகளுக்கிணங்க முன்னைய ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெற்றுக்கொள்ளப்பட்ட சான்று, அளவுசார்ந்த விடயங்களின் வரையறைகள் என்பவற்றுக்கிணங்க பின்வரும் கூற்றுகளைச் செய்வதற்குப் போதுமானதான எதுவும் எனது கவனத்துக்கு வரவில்லை:

2.2.1 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஈ)இன் தேவைகளுக்கிணங்க பல்கலைக்கழகப் பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு பல்கலைக்கழகத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் வழமையான வியாபார ஏற்பாட்டுக்குப் புறம்பாக ஏதேனும் நேரடியான அல்லது நேரில் அக்கறை உள்ளது.

2.2.2 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவுக்கிணங்க கணக்காயப்படும் நிறுவனம் ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்துக்கு அல்லது கணக்காயப்படும் நிறுவனத்தின் ஆட்சியமைப்பினால் வழங்கப்பட்ட வேறு பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கு இணங்கியிருக்கவில்லை.

2.2.3 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைகளுக்கிணங்கப் பல்கலைக்கழகம் அதன் தத்துவங்கள், செயற்பாடுகள், கடமைகள் என்பவற்றுக்கிணங்கச் செயலாற்றியிருக்கவில்லை.

2.2.4 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைகளுக்கிணங்க கணக்காயப்பட்ட நிறுவனத்தின் வளங்கள் உரிய கால எல்லைகளுக்குள்ளும் ஏற்புடைய சட்டங்களுக்கிணங்கவும் பெறப்பட்டும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3 வேறு அவதானிப்புகள்

அ) பல்கலைக்கழகத்தால் வெவ்வேறு பீடங்களில் தாபிக்கப்பட்டு, 2020 திசெம்பர் 31இல் இருந்தவாறு மொத்தமாகத் திரண்டிருந்த ரூ. 96,941,682 க்கான முப்பத்தைந்து நிதிகள் மீளாய்வு ஆண்டினுள் தொடர்புடைய இலக்குகளை எய்துவதற்குப் பயன்படுத்தப்படவில்லை. பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தால் புலமைப்பரிசுகள் வழங்குவதற்காகத் தாபிக்கப்பட்ட மொத்தம் ரூ. 1,162,177க்கான பதினொரு நிதிகள் 2 முதல் 25 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் புலமைப்பரிசுகள் வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஆ) 61 அலுவலர்களால் கடனானப் பெறப்பட்ட ரூ. 1,351,164க்கான கடன் மீதிகள் 01 முதல் 32 ஆண்டுக் காலம் கடந்துவிட்டபோதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இ) தமது பட்டப்பின் பட்டங்களைப் பூர்த்திசெய்வதற்காக முழுச் சம்பளத்துடன் கல்வி விடுப்புப் பெற்றுக்கொண்ட கல்விசார் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த பதினெட்டு உறுப்பினர்கள் தேவையான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளாமலே திரும்ப வேலைக்கு வந்துள்ளனர். உடன்படிக்கைகளை மீறியமைக்காக அவர்களிடமிருந்து ரூ. 78,241,772 வருமதியாயிருந்தது. கல்விசார் பணியாளர் தொகுதி உறுப்பினர்களான பன்னிரண்டு உறுப்பினர்கள் 02 முதல் 18 ஆண்டுகள் வரையான காலம் கடந்துவிட்டபோதிலும் வேலைக்குத் திரும்பி வந்திருக்கவில்லை. அவர்களிடமிருந்து ரூ. 20,212,040 தொகை வருமதியாயிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31இல் இருந்தவாறு அத்தொகைகளில் ஒன்றையேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஈ) பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் 12 பதவிகளிலுள்ள 33 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட கோப்பின்கீழ் வராத 08 பதவிகளுக்குப் பதினொரு அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களின் சேவை 05 மாதம் முதல் 04 ஆண்டுகள் வரையான வீச்சைக் கொண்டிருந்தது.

டபிள்யு.பீ.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

11.1 கணக்காய்வுக் கருத்தறிவிப்பு அறிக்கை

2021/08/05

கணக்காய்வாளர் அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்.

2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் 2020 திசெம்பர் 31ஆந் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட, கண்காணிப்புத் தேவைகள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுகள்

1.1 தகுதிவாய்ந்த கருத்து

2020 திசெம்பர் 31இல் இருந்தவாறு நிதிநிலைக் கூற்று, நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்று, உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்று முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றைக் கொண்டதான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையுடனும் 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவுடனும் ஒருங்கு வாசிக்கப்படவேண்டிய 1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் உட்பிரிவு 107(5) மற்றும் 108(1) ஆகியவற்றால் உரித்தாக்கப்பட்டவாறு 1980இன் 1ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின் 20ஆம் பிரிவால் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க, எனது பணிப்புரையின்கீழ் நடத்தப்பட்டது. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப்படி இவ்வறிக்கையின் "தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை" பற்றிய பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களைத் தவிர, அந்நிதிக்கூற்றுகள் 2020 திசெம்பர் 31இல் இருந்தவாறு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதி நிலையையும் அதன் நிதிச் செயல்நிறைவேற்றத்தையும் அத்தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுகளையும் பற்றி இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான ஒரு நோக்கை வழங்குகின்றன.

1.2	**தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை**	**நடப்பு நிலை**
(அ)	இலங்கைப் பொதுக் கணக்கீட்டு நியமங்கள் இல. 07இன் 54ஆம் பந்தியின்படி ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்ற வகுப்பினுள் வரும் சொத்துக்கள் தொடர்பான மீள்மதிப்பீட்டு அதிகரிப்புகளும் குறைவுகளும் வேறு வகுப்புகளினுள்ளும் வரும் சொத்துக்கள் தொடர்பில் சரியீடு செய்யப்படலாகாது. எனினும் ஸ்ரீ பாளி வளாகத்தின் மொத்தம் ரூ. 5,437,395க்கான அலுவலக சாதனத்தின் மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை, ஆய்வுகூடத்தினதும் கற்பித்தல் சாதனத்தினதும் மீள்மதிப்பீட்டு மேலதிகத்துக்குச் சரியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விளைவாக நிதிக் கூற்றுகளில் மீள்மதிப்பீட்டு வருவாயும் வருடாந்த மேலதிகமும் அதே தொகையால் முறையே குறைவாகவும் மிகையாகவும் கூறப்பட்டுள்ளன.	இவ்வழுக்கள் 2021ஆம் ஆண்டில் திருத்தப்படும்.

(ஆ)	இலங்கைப் பொதுக் கணக்கீட்டு நியமங்கள் இல. 07இன் 55ஆம் பந்தியின்படி ஏற்பாடுகளுக்கு முரணாகச் சொத்து மீள்மதிப்பீட்டு வருவாயில் ரூ. 42,248,667 தொகை நிதிச் செயல்நிறைவேற்றக் கூற்றின் மூலதன மானியங்களின் கடன்தீர்த்தலின்கீழ் வருவாய்க்குச் சீராக்கப்பட்டதன்மூலம் நிதிக் கூற்றுகளில் வருடாந்த மேலதிகமும் மீள்மதிப்பீட்டு வருவாயும் அதே தொகையால் மிகையாகவும் குறைவாகவும் கூறப்பட்டுள்ளன.	2021ஆம் ஆண்டில் சொத்துக்களின் ஆயுட்காலத்தை மீள மீளாய்வு செய்வதற்கும் இதனைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
(இ)	ஏற்கெனவே முற்றாகத் தேய்மானப்படுத்திவிட்டபோதிலும் இப்போதும் பயன்பாட்டிலுள்ள மொத்தம் ரூ. 80,706,090க்கான ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் மற்றும் அருவச் சொத்துக்களை இலங்கைப் பொதுக் கணக்கீட்டு நியமங்கள் இல. 3இன்படி திரும்பவும் மீளாய்வுசெய்து நிதிக் கூற்றுகளில் கூறுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.	ஏற்கெனவே முற்றாகத் தேய்மானப்படுத்திய சொத்துகளைத் திரும்பவும் மீளாய்வு செய்வதற்கு 2021ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஈ)	விளையாட்டுச் சாதனத்தின் தேய்மானம், ஆதனம், பொறித்தொகுதி, சாதனத்தின்மீதான தேய்மானக் கொள்கையின்படி 25% ஆக இருந்தபோதிலும், 17 சந்தர்ப்பங்களில் மேற்படி ஏற்பாடுகளுக்கு முரணாகத் தேய்மானம் கணிக்கப்பட்டுள்ளதனால், மீளாய்வாண்டுக்கான தேய்மானத்தில் ரூ. 1,299,182 குறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், விளையாட்டுச் சாதனங்களின் தேறிய பெறுமதியும் அதே தொகையால் மிகையாகக் கூறப்பட்டுள்ளது.	இவ்வழுக்கள் 2021ஆம் ஆண்டில் திருத்தப்படும்.
	நான் எனது கணக்காய்வை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நடத்தினேன். அந்நியமங்களின்கீழ் எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்ற பிரிவில் மேலும் விவரிக்கப்படுகின்றன. நான் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்று எனது தகுதிவாய்ந்த கருத்துக்கான ஓர் அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமென நான் நம்புகின்றேன்.	
1.3	**பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையில் உள்ள வேறு தகவல்** வேறு தகவலென்பது, பல்கலைக்கழகத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டதும் இவ்வறிக்கைத் தேதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்டதும் எனது கணக்காய்வு அறிக்கையில் இல்லாததுமான தகவலைக் குறிக்கின்றது. இவ்வேறு தகவலுக்கு முகாமைத்துவம் பொறுப்பானதாகும். நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கருத்து இவ்வேறு தகவலை உள்ளடக்கவில்லை. அதன் தொடர்பில் நான் ஒரு கருத்தை உறுதிப்படுத்தவோ வெளிப்படுத்தவோ இல்லை.	

	நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட வேறு தகவலை வாசித்தலும் அவ்வேறு தகவல் நிதிக் கூற்றுகளுடாக அல்லது வேறு வழிகளில் நான் அறிந்துகொண்டுள்ளவற்றுடன் எண்ணிக்கையில் முரண்படுகின்றதாவென்று பரிசீலனை செய்தலுமாகும். இதன் தொடர்பில் அறிக்கையிடுவதற்கு எனக்கு எதுவுமில்லை.
1.4	**நிதிக் கூற்றுகளுக்கு முகாமைத்துவத்தினதும் கட்டுப்படுத்தும் தரப்புகளினதும் பொறுப்பு** முகாமைத்துவம் இந்நிதிக் கூற்றுகளை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிப்பதற்கும், நியாயமான முறையில் சமர்ப்பிப்பதற்கும், நிதிக் கூற்றுகளை மோசடி அல்லது வழுவின் நிமித்தம் பொருள் சார்ந்த தவறான கூற்றுகள் இல்லாது தயாரித்தலை இயலச்செய்வதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கும் பொறுப்பானது. நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதற்கான ஆற்றலைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். தொடர்ந்தும் இயங்குமென்ற அடிப்படையில் கணக்குகளைப் பேணுதலும் பல்கலைக் கழகத்தை ஒழித்துவிடுவது அல்லது வேறு தெரிவு இல்லாதவிடத்துத் தொழிற்பாடு இல்லாதொழிதல் முகாமைத்துவத்தின் நோக்கமாக இருந்தாலன்றிப் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குதல் தொடர்பில் நிகழ்வுகளை வெளிப்படுத்தலும்கூட முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும். பல்கலைக்கழகத்தைக் கட்டுப்படுத்தும் தரப்பினர் நிதி அறிக்கையிடும் முறைமைக்குப் பொறுப்பானவர்களாவர். 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 16(1)ஆம் உட்பிரிவுக்கிணங்கப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கக்கூடியதாகப் பல்கலைக்கழகம் அதன் வருமானம், செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் தொடர்பில் முறையான புத்தகங்களையும் பதிவுச்சான்றுகளையும் பேணவேண்டும்.

1.5	**நிதிக் கூற்றுகளின் கணக்காய்வில் கணக்காய்வாளரின் பொறுப்பு** எனது குறிக்கோள் நிதிக் கூற்றுகள் ஒட்டுமொத்தத்தில் மோசடி அல்லது வழுவின் நிமித்தமான பொருள்சார்ந்த தவறான கூற்றுக்களல்லவென்ற நியாயமான உத்தரவாதத்தை வழங்குதலும் எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதலுமாகும். நியாயமான உத்தரவாதம் உயர் தரத்திலான உத்தரவாதமாக இருந்தபோதிலும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கக் கணக்காய்வு செய்யப்படும்போது அளவுசார்ந்த தவறான கூற்றுகளை அது எப்போதும் வெளிப்படுத்துமென்று அது உறுதிப்படுத்தவில்லை. அளவுசார்ந்த தவறான கூற்றுகளில் தனிப்பட்ட அல்லது கூட்டு மோசடியின் அல்லது வழுவின் தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதுடன், அந்நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படும் முடிவுகளில் ஒரு விளைவையும் கொண்டிருக்கலாம். இக்கணக்காய்வு தொழில்வாண்மைத் தீர்ப்புடனும் தொழில்வாண்மை ஐயுறவுடனும் என்னால் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், • மோசடியினால் அல்லது வழுவினால் ஏற்படக்கூடிய இடர்களைத் தவிர்ப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றைப் பெற்றுக்கொள்ளல்; மோசடியினால் அல்லது வழுவினால் நிதிக் கூற்றுகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான தவறான கூற்றுகளைக் கண்டுணர்ந்து மதிப்பீடு செய்வதில் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடல். இதுவே எனது கருத்தின் அடிப்படை. பொருள்சார்ந்த தவறான கூற்றுகளைவிட மோசடி கூடிய தாக்கத்தைக் கொண்டிருக்கும். கூட்டுச் சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் என்பவற்றால் மோசடி நிகழலாம். • கணக்காய்வாளர் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறையைத் திட்டமிடும்பொருட்டுப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகளை ஆராய்ந்தாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதித்தன்மை பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்துக்காகவல்ல. • கணக்காய்வானது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மையையும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்துகைகளின் பொருத்தப்பாட்டையும் மதிப்பீடு செய்தலை உள்ளடக்கியது. • நிகழ்வுகளின் அல்லது சூழ்நிலைகளின் நிமித்தம் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதில் போதிய எதிர்பாராப் பொறுப்பு உள்ளதாவென்று பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையில் கணக்கீட்டு நோக்கத்துக்குத் தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையைப் பயன்படுத்துவதன் பொருத்தம் தீர்மானிக்கப்பட்டது. போதிய எதிர்பாராப் பொறுப்பு உள்ளதென்று நான் முடிவுக்கு வந்தால் நிதிக் கூற்றுகளில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களில் எனது கணக்காய்வு அறிக்கை கவனஞ்செலுத்தவேண்டுமென்பதுடன், வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாதவிடத்து எனது கருத்து மாற்றப்படவேண்டும். எனினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் நிமித்தம் தொடர்ந்து இயங்குதல் முடிவுக்கு வரக்கூடும். • வெளிப்படுத்தல்களுடன்கூடிய நிதிக் கூற்றுகளின் சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவை மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அடிப்படையாயுள்ள கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் நிதிக் கூற்றுகளில் பொருத்தமான, நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளனவாவென்றும் மதிப்பீடு செய்யப்பட்டன. முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு வலுக்குறைவுகள் மற்றும் கணக்காய்வில் கண்டுணரப்பட்ட வேறு நிகழ்வுகள் என்பவை கட்டுப்பாட்டுத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டன.

2.	**வேறு சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைகள் பற்றிய அறிக்கை**
	2.1 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன:
	2.1.1 இவ்வறிக்கையின் "தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை" என்ற பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கம் தொடர்பில் தவிர, 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(அ)இன் தேவைகளுக்கிணங்க, கணக்காய்வுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன். 2.1.2 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ)(iii)இன் தேவைகளுக்கிணங்க, பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் முன்னைய ஆண்டினதுடன் நிலைமாறாதுள்ளன. 2.1.3 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ)(iv)இன் தேவைகளுக்கிணங்க முன்னைய ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
	2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெற்றுக்கொள்ளப்பட்ட சான்று, அளவுசார்ந்த விடயங்களின் வரையறைகள் என்பவற்றுக்கிணங்க பின்வரும் கூற்றுகளைச் செய்வதற்குப் போதுமானதான எதுவும் எனது கவனத்துக்கு வரவில்லை: 2.2.1 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஈ)இன் தேவைகளுக்கிணங்க பல்கலைக்கழகப் பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு பல்கலைக்கழகத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் வழமையான வியாபார ஏற்பாட்டுக்குப் புறம்பாக ஏதேனும் நேரடியான அல்லது நேரில் அக்கறை உள்ளது. 2.2.2 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவுக்கிணங்க கணக்காயப்படும் நிறுவனம் ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்துக்கு அல்லது கணக்காயப்படும் நிறுவனத்தின் ஆட்சியமைப்பினால் வழங்கப்பட்ட வேறு பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கு இணங்கியிருக்கவில்லை. 2.2.3 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைகளுக்கிணங்கப் பல்கலைக்கழகம் அதன் தத்துவங்கள், செயற்பாடுகள், கடமைகள் என்பவற்றுக்கிணங்கச் செயலாற்றியிருக்க வில்லை. 2.2.4 2018இன் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைகளுக்கிணங்க கணக்காயப்பட்ட நிறுவனத்தின் வளங்கள் உரிய கால எல்லைகளுக்குள்ளும் ஏற்புடைய சட்டங்களுக்கிணங்கவும் பெறப்பட்டும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	2.3 வேறு அவதானிப்புகள்	
	(அ) பல்கலைக்கழகத்தால் வெவ்வேறு பீடங்களில் தாபிக்கப்பட்டு, 2020 திசெம்பர் 31இல் இருந்தவாறு மொத்தமாகத் திரண்டிருந்த ரூ. 96,941,682 க்கான முப்பத்தைந்து நிதிகள் மீளாய்வு ஆண்டினுள் தொடர்புடைய இலக்குகளை எய்துவதற்குப் பயன்படுத்தப்படவில்லை. பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தால் புலமைப்பரிசுகள் வழங்குவதற்காகத் தாபிக்கப்பட்ட மொத்தம் ரூ. 1,162,177க்கான பதினொரு நிதிகள் 2 முதல் 25 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் புலமைப்பரிசுகள் வழங்குவதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.	பல்கலைக்கழகம் 150 அத்தகைய பேரேட்டுக் கணக்குகளைப் பேரவையின் அங்கீகாரத்துக்கு அமைவாகத் தாபித்துள்ளது. இக்கணக்குகள் தாபிக்கப்பட்ட நோக்கத்துக்காகச் செலவுகள் செய்யப்படுகின்றன. 2020ஆம் ஆண்டில் ரூ. 263 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் மூலோபாயத் திட்டத்தின்படி ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட எல்லா நிதிகளும் அத்தகைய நிதிகளின் குறிக்கோள்களை எய்துவதற்குச் செலவிடப்படவில்லை. அதற்கிணங்க ரூ. 96,941,682 தொகையைச் செலவிடுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்ற அவதானிப்புடன் பல்கலைக்கழகம் உடன்படவில்லை.

புலமைப்பரிசு	விவரம்
கணிதவியலுக்குப் பேரா.ஜே.ஈ. ஜயசூரிய பரிசு	பிரதிப் பதிவாளரின் (பரீட்சைகள்) 04.08.2021ஆந் தேதிய கடிதத்தின் பிரகாரம் புலமைப்பரிசுகளுக்கான மாணவர் தெரிவு தொடங்கப்பட்டுள்ளது.
கணிதவியலுக்குக் கோட்டேகொட ஞானலங்கார தேரோ புலமைப்பரிசு	
டக்ளஸ் அமரசேகர கல்வி உதவுதொகைகள்	
சார்ள்ஸ் எம். டயஸ் நினைவுப் புலமைப்பரிசு	
கைத்தொழில் புள்ளிவிவரவியலுக்குத் தங்கப்பதக்கம்	இது பட்டமளிப்பு-2020இல் தொடர்புடைய மாணவருக்கு முறையாக வழங்கப்படும்.
பௌதிகவியலிலும் கணிதவியலிலும் திரு., திருமதி எச்.டி.பீ. குணவர்தன நினைவுப்பரிசு	பிரதிப் பதிவாளரின் (பரீட்சைகள்) 04.08.2021ஆந் தேதிய கடிதத்தின் பிரகாரம் புலமைப்பரிசுகளுக்கான மாணவர் தெரிவு தொடங்கப்பட்டுள்ளது.
பௌதிகவியலில் பீ,பீ. ஜயவிக்கிரம நினைவுப் புலமைப்பரிசு	2019ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசு தொடர்புடைய மாணவருக்கு வழங்கப்பட் டுள்ளது. பிரதிப் பதிவாளரின் (பரீட்சைகள்) 04.08.2021ஆந் தேதிய கடிதத்தின் பிரகாரம் புலமைப்பரிசு 2020கான மாணவர் தெரிவு தொடங்கப்பட்டுள்ளது.

		டபிள்யு. சார்லட் பீரிஸ் நினைவுப் புலமைப்பரிசு	பிரதிப் பதிவாளரின் (பரீட்சைகள்) 04.08.2021ஆந் தேதிய கடிதத்தின் பிரகாரம் புலமைப்பரிசுகளுக்கான மாணவர் தெரிவு தொடங்கப்பட்டுள்ளது.
		மகாராஜா கணினி விஞ்ஞான விருது	UCSCஇன் விதப்புரையுடன் மூதவையின் அங்கீகாரத்துக்கமைய தகுதிபெற்ற மாணவர்களுக்குப் புலமைப்பரிசுகளை வழங்குவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
		கலா. சாமுவேல் பாசு நினைவுப் புலமைப்பரிசு	பிரதிப் பதிவாளரின் (பரீட்சைகள்) 04.08.2021ஆந் தேதிய கடிதத்தின் பிரகாரம் புலமைப்பரிசுகளுக்கான மாணவர் தெரிவு தொடங்கப்பட்டுள்ளது.
	(ஆ) 61 அலுவலர்களால் கடனானப் பெறப்பட்ட ரூ. 1,351,164க்கான கடன் மீதிகள் 01 முதல் 32 ஆண்டுக் காலம் கடந்துவிட்டபோதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஓர் அலுவகர் தனது கடன் ரூ. 9,180.00 ஐ 2021இல் செலுத்தியுள்ளார். ஏனைய அலுவலர்களின் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
